Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/75/News/2008

பொழிவு - 12
குவிப்பு - 02
பக்கங்கள்- 20
விலை ரூபா 30.00
பெப்ரவரி - 2009
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ 060-2233276, Fax No - 023-2251161, E. Mail : nesanmnr@gmail.com

# அப்பாவிப் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்!


## யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பினருக்கும் திருத்தந்தை உருக்கமான வேண்டுகோள்

இலங்கையில் யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்பும் அந்தப் பகுதியிலுள்ள அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்வரவேண்டுமென பரிசுத்த பாப்பரசர் 16வது பெனடிக்ற் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் தற்போதைய நிலமைகள் தொடர்பாக ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள திருத்தந்தை மேலும் கூறுகையில்:

இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் தீவிரமடைந்து பொதுமக்கள் கொல்லப்பட்டும் ஆயிரக்கணக்-கானோர் காயமடைந்திருக்கும் இவ்வேளையில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு பகுதியினரும் மனித உரிமைகளை மதித்து மக்களைச் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கவும் காயமடைந்தவர்களுக்கு மருத்துவ சேவை வழங்கவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் முன்வரவேண்டும்.

மேலும் இந்த மக்கள் தமக்குத் தேவையான அத்தியாவசிய உணவு போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யவும் வேண்டும். கத்தோலிக்கர்களும் ஏனைய மதத்தவர்களும் மதிக்கும் பரிசுத்த கன்னிமரியாள் நாட்டிற்கு அவசரத் தேவையான அமைதியையும் ஒப்புரவையும் பெற்றுத்தர ஆசீர்வதிக்கின்றேன் எனத் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.



## துன்புறும் வன்னி மக்களுக்காக
## மன்னார் பேராலயத்தில் உண்ணாவிரதமும் செபவழிபாடும்



வன்னி மக்களுக்கான செபவழிபாடும் உண்ணாவிரதமும் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 03ம் திகதி அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை இந்நிகழ்வு நடைபெற்றது. மன்னார் மறை மாவட்டத்திலுள்ள சகல கத்தோலிக்க தேவாலயங்களிலும் வன்னி மக்களுக்காக செபவழிபாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் தலை-மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. செல்வம் அடைக்கலநாதன் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர். அத்துடன் இந்த செபவழிபாடுகளிலும் உண்ணாவிரதத் திலும் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குகொண்டனர்.

இதேவேளை, வன்னியிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள நூற்றுக்கணக்கான காயப் பட்ட மக்களுக்கு தொண்டர் நிறுவனங்களோடு திருச்சபைப் பணியாளர்களும் உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வன்னி மண்ணில்
## துன்புறும் மக்களைப் பாதுகாப்பது அரசின் கடமை
### துறவற நிறுவனங்களின் தலைமையகம் ஜனாதிபதிக்கு கடிதம்

உலகெங்கிலும் உள்ள துறவற நிறுவனங்களின் தலைமையகம் உரோமாபுரியில் அமைந்துள்ளது. இதில் அங்கம் வகிக்கும் ஆண், பெண் துறவற நிறுவனங்களின் தலைவர்கள் ஒன்றிணைந்து இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அவர்களுக்கும் வன்னி நிலமைகள் தொடர்பாக அவசர கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளனர்.

அதில் இலங்கைப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அகப்பட்டு வன்னி மண்ணில் சொல் லொண்ணாத் துயரை அனுபவித்து வரும் மக்கள் மட்டிலான தமது கவலையையும் அக்கறையையும் வெளிப்படுத்தி உள்ளனர்.

யுத்தத்தினாலும் குண்டுத்தாக்குதல் களினாலும் மக்கள் பயங்கர ஆபத்துக்குள் சிக்கியுள்ளனர். பலர் உயிரிழந்துள்ளனர். பலர் காயங்க ளுக்கு உள்ளாகியுள்ளனர். உணவோ தேவையான மருத்துவ வசதிகளோ போதியனவாய் இல்லை என்றும் அம்மடலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சர்வதேச சட்டத்திற்கமைய பாதுகாப்பு வலையம் அமைக்கப் படுவது குடிமக்களின் உரிமை எனினும் அதனைச் செயற்படுத்து வதற்கு முன்பே அவ்விடத்தைவிட்டு விலக வேண்டுமென்று அங்கு பணியாற்றிய ஐ. நா. அலுவலகம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்க ளுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எனவே நம்பிக்கை இழந்த, தேவையிலுள்ள மக்களுக்கு மனிதாபி மான உதவிகளை வழங்குவது அரசாங்கத்தின் மேலதிக கடமையா யுள்ளது என்றும் அம்மடலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### ஒடுக்கமான பிரதேசத்திற்குள் அடர்த்தியாக வாழும் மக்கள்
### தமது உயிருக்கு பாதுகாப்பற்ற நிலையில்
## தொடர்ச்சியான ஆபத்துகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்
### இலங்கை ஆயர் பேரவை ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம்


கடந்த ஜனவரி 17ம் நாள் கத்தோலிக்க ஆயர் பேரவையினர் இலங்கை ஜனாதிபதிக்கு எழுதிய மடலில் யுத்தப்பிரதேசங்களில் அகப்பட்டுள்ள பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும்படி அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். அக்கடிதத்தின் முழு விபரமும் வருமாறு.

ஜனாதிபதியாகிய தாங்களும் தங்களது அரசாங்கமும் யுத்தப் பிரதேசங்களில் சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டும் அதேவேளை ஒடுக்கமான பிரதேசத்திற்குள் அடர்த்தியாக வாழும் மக்கள் தமது உயிருக்கு பாதுகாப்பற்ற நிலையில் தொடர்ச்சியான ஆபத்துக்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள் என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## தவக் காலம்

*தவக்காலம் அருளின் காலம் ஆண்டவரோடு நெருங்கியிருக்கும் காலம்*



எதிர்வரும் பெப்ரவரி 25ம் திகதி திருநீற்றுப் புதனுடன் இவ்வாண்டு தவக்காலம் ஆரம்பமாகின்றது. கிறிஸ்தவர்களின் மிக உன்னதமான, அருளின் காலமாகிய இத் தவக்காலத்தில் நாட்டின் அமைதிக்காக உண்ணா நோம்பிருந்து வேண்டுதல் செய்யும்படி மன்னாவின் அன்பு நெஞ்சங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

*(தவக்காலம் பற்றிய சிறப்பு கட்டுரையை 16ம் பக்கத்தில் காணலாம்)*

# Pictures Don't Lie!
# படங்கள்
## பொய் சொல்வதில்லை!













கடந்த 17.02.2009 அன்று வன்னியில் இடம்பெற்ற தாக்குதல்களின் போது மரணித்த, காயமடைந்த மக்களின் துயரகாட்சிகள்



# வாசகர் எண்ணங்கள்

## ஓ. ஓ. மன்னவா



ஓ... ஓ... மன்னவா ஓ .... மன்னவா
உள்ளம் கொள்ளை கொண்டாய் மன்னவா

பசி தீர்க்கும் மன்னா, நீ உணவாக வந்தாய்
இல்லங்கள் தோறும் சுடர் ஒளியாக வந்தாய் - 2)
பாரெங்கும் சுற்றி நீ நடைபோட்டு வந்தாய்
வாழிய மன்னா நீ பல்லாண்டு வாழ்க!

பதிப்பாளர் பகிர்வாலே சிந்திக்க வைத்தாய்
இறைவார்த்தை ஊடாக வாழவே செய்திட்டாய் - 2
சிறுகதை, கவிதைகள், தொடர் ஆக்கம் தந்தாய்
பெரியப்பா பதிலாலே உறவை நீ வளர்த்தாய்!

மறைவட்டம், திருச்சபைச் செய்திகள் தந்தாய்
ஆங்காங்கே நடைபெறும் புதினங்கள் தந்தாய் -2
நீங்க ரெடியா சிரிப்பதற்கென்றாய்
புன்னகை மன்னா உன் புகழோங்க வேண்டும்!

*பீ. கிறிஸ்பி குரூஸ், 5ம் வட்டாரம், பேசாலை*



## வழிமேல் விழி வைத்து



என்னில் பாசம் கொண்டு தேடி வரும் மன்னாவே
என் இனிய இதயத்தில் இறைசெய்தியை
இனிமையாய் விதைக்கின்றாயே!
சிந்தனையை செயலாக்கி
சிந்திக்க வைத்துவிடும் நீ
ஊரெல்லாம் சிட்டாய்ப் பறந்து
ஒவ்வொரு உள்ளங்களிலும் பதிய வேண்டும்.
உனக்காக உள்ளங்கள் ஏங்குகின்றன.
நீ தேர்ந்த பாதையில் தொடர்ந்து பயணிக்க
உன்னை வாழ்த்துகிறேன்.
உன்னை வெளிக்கொணருகின்ற
நல் உள்ளங்களுக்கு நன்றிகள் பல!
உன்னைக் காண நான் மாதாந்தம்
வாசலில் காத்து நிற்கின்றேன்.
மன்னாவே நீ எப்போது வருவாயென்று
வழிமேல் விழிவைத்துக் காத்துக்கிடக்கின்றேன்.

*டி. கிறிஸ்ரினா - சாந்திபுரம், மன்னார்.*



# வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வருபவர்களின் கண்ணீர்க் கதைகள்!

**வன்னியில் இருந்து பல ஆபத்துக்களைக் கடந்து வந்து தற்போது வவுனியா மற்றும் செட்டிகுளம் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களோடு உரையாடிப் பெற்றுக்கொண்ட அம்மக்களின் கண்ணீர்க் கதைகளின் தொகுப்பு இது. தொகுத்துத் தருபவர் : சமூகச் செயற்பாட்டாளர் திரு. சிங்கிளாயர் பீற்றர் (மன்னார்) அவர்கள்.**

இலங்கையில் தமிழராகப் பிறப்பதும் அதுவும் வன்னியில் வசிப்பதும் நாம் செய்த குற்றமா என எமது வளரும் சமுதாயம் எம்மைப் பார்த்துக் கேட்கிறது. கடந்த 2007 புரட்டாதி மாதம் மன்னார் முசலிப் பகுதியிலிருந்து 'சமாதானத்திற்கான யுத்தம்' எனும் போர்வையில் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்கத்தின் மனித நேயப் பணியானது அடம்பன், இலுப்பைக்கடவை, நாச்சிக்குடா, கிளிநொச்சி, பூநகரி, பரந்தன், முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு என்று தொடர்கதையாகி இப்போது இப்பணியானது முடிவுறும் கட்டத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இச்சமாதானத்திற்கான யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் இறந்தும் குறிப்பாக குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர் என 60%இற்கும் மேலானோர் இறந்தும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் காயப்பட்டும் உள்ளனர். யுத்தத்தில் சம்மந்தப்பட்டவர்களும் ஏனைய மாவட்டங்களில் பிறந்து உயிருக்காக இடம்பெயர்ந்தவர்களும், தமது சக்திக்கு அப்பாற்பட்டு ஆயுத முனையில் வலுக்கட்டாயமாகப் போரில் இணைத்துக் கொள்ளப்பட்ட இளைஞர்களும் சிறுவர்களும் இதில் அடங்குவர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்று அங்கு இரத்த வியர்வை சிந்தி கடும் குளிரிலும் வெயிலிலும் பணத்தைச் சேகரித்து தமது உறவுகளுக்கு வழங்கி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் தடைகளுக்கு மத்தியில் இல்லிடங்களை அமைத்தவர்களும், பொருட்களை சேகரித்து வசதியாக வாழ்ந்த அப்பாவித் தமிழ் மக்கள் பல கோடிக்கணக்கான தமது உடைமைகளை இழந்துள்ளனர்.

மனிதாபிமானப் பணிகளைப் புரிவதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரும்பணியாற்றிய அரச சார்பற்ற ஸ்தாபனங்கள், சமய ஸ்தாபனங்கள் போன்றவற்றின் மனித நேயப் பணிகளை திடீரென அகற்றியதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் குறிப்பாக சிறுவர்கள், பெண்கள், வயோதிபர் மூன்று வேளை உணவின்றி ஒரு நேர உணவுடன் வாழ்ந்த கதைகள் பலவுண்டு. தமது நாட்டு மக்களுக்கு மீட்புப் பணியெனக் கூறி போரை ஆரம்பித்த அரசு தமது முழுச் சக்தியையும் பாவித்து தரை, கடல், வான், மூலமாக நான்கு முனைகளிலும் இரவு பகல் என்று பாராது ஓய்வின்றி யுத்தத்தைத் தீவிரப்படுத்தியது.

கடந்த 1 1/2 வருடங்களாக 500,000 இலட்சம் தமிழ் மக்கள் ஒரு நாளாவது நிம்மதியான நித்திரை இன்றி தமது இல்லிடங்களைத் துறந்து காடுகளிலும், தெருக்களிலும், வீதிகளிலும், மரங்களுக்குக்கீழும், கோவில்களிலும், பாடசாலைகளிலும், கூடிய நேரம் பதுங்குகுழிகளுக்குள்ளும் உயிர் வாழ்ந்ததை எவ்வாறு மறக்க முடியும்?

சராசரி ஒரு குடும்பம் 6இற்கும் மேற்பட்ட தடவைகள் இடம்பெயர்ந்ததான பல சோகக் கதைகள் உண்டு. ஆரம்பத்தில் தமக்குத் தேவையான உணவு, உடை, சிறுதளபாடங்கள், சமையல் பாத்திரங்கள், தற்காலிக கூடாரங்களை எடுத்துச் சென்ற மக்கள், படிப்படியாக தமது உடலில் வலுவின்றி உடுத்திய உடைகளுடனும், கைகளில் சிறு குழந்தைகள் அல்லது காயப்பட்டவர்கள் அல்லது பிணங்களைக் காவிக்கொண்டும் அரசு அறிவித்த பாதுகாப்பு நிலையங்களை நெருங்கி வந்ததை யார் அறிவார்?

இப்போரின் மத்தியில் கடந்த 10 வருடங்களுக்குள் பிறந்த குழந்தைகள் நாம் ஏன் தமிழர்களாகப் பிறந்தோம் என தமது பெற்றோரையும், உறவுகளையும் அடிக்கடி கேட்பதுண்டு. பல பொது ஸ்தாபனங்கள் மத்தியில் விடிவு பிறக்கும் என எண்ணியிருந்த இவர்கள் (WFP) உலக உணவு ஸ்தாபனங்கள் உணவுத் தொடர் அணியை எதிர்பார்த்த காலங்கள் பல உண்டு. காயப்பட்டவர்கள் நோய் தீர்ப்பதற்காக நீண்ட சிரமத்திலும் வைத்தியசாலைகளை அண்மித்தபோது அங்குள்ளவர்கள் போதிய மருத்துவ வசதியின்றி எம் கண் முன்னால் உயிரிழந்ததைக் கண்ட பல சாட்சிகள் உண்டு.

மின்சாரம், பற்றரி, பத்திரிகைகள் இன்றி அரசு அறிவிக்கும் அறிக்கைகளை பதுங்குகுழிகளுக்குள் இருக்கும் மக்கள் எவ்வாறு அறிவர்? வதந்திகள் பரவும் பக்கம் மக்கள் போய்க் கொண்டிருப்பார்கள். நாலா திசையையும் நோக்கிச் செல்வார்கள். தெருவில் நடந்தும் காடுகளில் பதுங்கியும், நீர் நிலைகளில் நனைந்தும், கடும் பனியில் நடுங்கியும், உடலில் வலுவின்றி நடந்து சென்றபோது இரு பக்கமும் பேரிரச்சலோடு வரும் வான் தாக்குதல்கள், பல்குழல் எறிகணை, செல் வீச்சுக்கள் நிலத்தில் புதைத்து வைத்த கண்ணிவெடிகள் போன்றவற்றினால் நிமிடத்திற்கு ஒருவராக உயிரிழந்தும் கைகளை, கால்களை ஏனைய உடல் அவயங்களை இழந்தும், மரண ஓலமிடும் மக்கள் மத்தியில் நடைபிணங்களாக பாதுகாப்பைத் தேடி பல நூற்றுக்கணக்கான மக்கள் சென்றதை எவ்வாறு மறக்கமுடியும்?

நாம் நடந்து வரும் வேளையில் செல்வீச்சுக்காரணமாக 10ற்கும் மேற்பட்டோர் துடிதுடித்து இரத்தம் அதிகம் வெளியேறி மரணம் அடைந்தனர். மேலும் 40ற்கும் மேற்பட்டோர் காயப்பட்டனர். இறந்தவர்களின் உடலுடன் ஓர் இரவு முழுவதும் கட்டிப்பிடித்து அழுதோம். கடும் இருட்டிலும், பனியிலும் விளக்குக் கொழுத்தி நெருப்பு மூட்டினால் இராணுவத்தினர் தாக்குவார்கள் என அஞ்சி எமது இஸ்ர தெய்வங்களை வணங்கினோம்.

எம்மில் சிலர் பிரேதங்களுடன் தங்கினர். ஒரு சிலர் தடிகளினாலும், கைகளினாலும் கிடங்கு கிண்டி இறந்தவர்களைப் புதைத்தனர். ஏனையோர் பிரேதங்களை பத்தைக்குள் வைத்து மரக்கிளைகளால் மூடிய பின் பாதுகாப்பு வலயத்தை நோக்கி தமது நடையை ஆரம்பித்தனர்.

காயமடைந்தவர்களுக்கு எமக்குத் தெரிந்த முதலுதவிகளைச் செய்து காட்டில் உள்ள பச்சிலைத்தாவரங்களை கசக்கிப்பிழிந்து ஆடைகளினால் கட்டினோம். இருப்பினும் எமது மத நம்பிக்கை எம்மைக் கைவிடவில்லை. சற்றுத்தூரம் நடந்த பின் நல் இதயம் படைத்த இராணுவத்தினர் எம்மை நோக்கி ஓடி வந்து காயப்பட்டவர்களுக்கும் குழந்தைகளுக்கும் உடனடி மருத்துவ சிகிச்சை புரிந்தனர். இதுபோன்ற சோகக்கதைகள் எம்மிடம் பலவுண்டு. இவற்றை யாரிடம் கூறி ஆறுதல் அடைவோம்?

பாதுகாப்பைத் தேடி நடந்து வரும் வேளையில் விமானத்தின் ஓசையைக் கேட்டும் விமானக் குண்டு வீச்சிலும் நாலாபுறமும் ஓடியபோது குடும்பத்தில் பலர் காணாமல் போயுள்ளனர். அவர்களைத் தேடுவதற்கும் வழியின்றி அருகிலுள்ளவர்களுடன் தொடர் பயணமாக நடந்து வந்தவர்கள் பலர். எம்முடன் நடந்து வந்தோரில் சிலர் தமது உடைமைகளை பெறுமதிமிக்க நகைகளை இழந்ததாக முகாம்களிலும் வைத்தியசாலைகளிலும் கூறினர்.

எமக்கு உதவுவார் என நினைந்திருந்த அரச சார்பற்ற, இயக்கப் பிரதிநிதிகள் தமது இயலாமையினால் படிப்படியாக எம்மைக் கைவிட்டு வெளியேறினர். இருப்பினும் கடைசிக்காலம் மட்டும் எமக்கு உதவி செய்த வெளிநாட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் (ICRC) உலக உணவு ஸ்தாபன (WFP) உறுப்பினர்கள் குறிப்பாக வைத்தியர்கள், தொண்டர்களை நாம் என்றும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

பாதுகாப்பு நிலையங்கள் திறக்கப்பட்டதாகவும் அவற்றை நோக்கிப் போனவர்கள் முதல் 10 நாட்களில் செல் குண்டு வீச்சுக்கு இலக்காகி காயப்பட்டதாகவும், சிலர் இறந்ததாகவும் ஆதாரபூர்வ செய்திகள் அங்கு நிலவியது. கடந்த மூன்று நாட்களாக பகலில் பதுங்கியும், இரவில் நடந்தும் வழியில் கிடைக்கும் காட்டுப் பழங்களை உண்டும், கிழங்குகளை நெருப்பில் சுட்டுச் சாப்பிட்டும் ஓடைகளின் நீரை அருந்தியும் உயிரை தக்கவைத்துக்கொண்டு பாதுகாப்பு நிலையங்களை அடைந்தபோது, கடந்த 15 ஆண்டுகளாக இலங்கை இராணுவத்தைக் கண்டிராத எமக்கு பயப் பிராந்தி தொற்றியது. இருப்பினும் வாழவேண்டும் என்ற நோக்குடன் அவர்களை அணுகியபோது அவர்கள் எம்மை ஒவ்வொருவராக கையை உயர்த்திக்கொண்டு வருமாறு பணித்தனர். தீவிர உடல் பரிசோதனை கேள்விக் கணைகளின் பின் மரங்களின்கீழ் அமர்ந்திருக்குமாறு கூறி எமக்கு என்ன வேண்டும் எனக் கேட்டனர். அவர்களில் பலரின் முகத்தில் சோகம் தவழ்ந்ததையும் பயந்த நிலையில் இருப்பதையும் எம்மால் அறிந்துகொள்ள முடிந்தது.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# வன்னியில் ஏற்பட்டிருக்கும் மனிதப் பேரவலம் தொடர்பாக
# சர்வதேச சமூகம் மௌனம் சாதிக்கின்றது!

## அருட்பணி. எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் கண்டனம்

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கும் மனிதப் பேரவலம் தொடர்பாக சர்வதேச சமூகம் மௌனம் சாதிப்பது குறித்து அருட்பணியாளர் எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் பகிரங்கக் கண்டனக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

பொது மக்களின் அவலங்கள் தொடர்பாக இலங்கையிலிருந்து கிடைக்கும் பிந்திய செய்திகள் ஏற்படவிருக்கும் மனித நெருக்கடிகளின் பரிமாணத்தை முன்கூட்டியே அறிவிக்கின்றது.

முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களைச் சகல முனைகளிலும் சுற்றி வளைத்துள்ள இராணுவம் ஆட்லறித் தாக்குதல்களை நடாத்தி வருகிறது. யுத்த வலயத்துள் பன்னாட்டு ஊடகங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. அரச நிர்வாக அதிகாரிகளும் வெளியேற்றப்பட்டு உள்ளார்கள்.

ஏற்கனவே வசதிகள் குறைந்த இம்மாவட்டங்களில் இடம்பெயர்ந்தோரின் தொகை அதிகரித்திருக்கின்றது. இன்னொரு நாட்டு மக்கள்மீது படையெடுக்கும் நடவடிக்கை போன்றே அங்குள்ள மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் அமைந்துள்ளன.

இன்னும் ஓரிரு மாதங்களில் யுத்தம் முடிவடைந்துவிடும் என்றும் அடிப்படையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தமிழ் மக்களின் கோரிக்கைகளும் எப்போதுமே மௌனித்து விடும் என்ற எதிர்பார்ப்பே தென்னிலங்கை மக்களுக்கு வழங்கப் - படுகின்றது. அத்துடன் இலங்கையின் பூர்வீகக்குடிகள் பெரும்பான்மைச் சிங்கள மக்களே என்ற நம்பிக்கையும் ஊட்டப்பட்டு வருகிறது.

பிராந்தியத்தின் சக்திமிக்க நாடான இந்தியா உட்பட பன்னாட்டுச் சமூகமானது பல தசாப்தங்களாகத் துன்பப்படும் தமிழ் மக்களின் துயரங்கள் தொடர்பான தமது பொறுப்பை ஒதுக்கிவைக்க முடியாது.

இலங்கையின் மனித உரிமை மீறல்களை கண்டுகொள்ளாமல் யுத்த நடவடிக்கைகளுக்கு வலுவூட்டுவது தொடர்பான சக்திவாய்ந்த நாடுகள் ஆற்றிவரும் பங்களிப்பானது பன்னாட்டு சமூகத்தின் பாசாங்குத் தனத்தையும் இரட்டை வேடத்தையுமே வெளிப்படுத்துகிறது. இது தமிழ் மக்களின் மனதில் இருந்து ஒருபோதும் அழியப்போவதில்லை.

முழு உலகுமே இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக நின்றாலும் அவர்கள் தமது நீதியான போராட்டத்தைக் கைவிடக்கூடிய நிலையில் இல்லை என்பதை அக்கறையுடைய சகலரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.



அருட்பணியாளர்
எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார்

## சீனாவிற்கு 10 இலட்சம்
## விவிலியப் பிரதிகள்

சீனாவில் கிறிஸ்தவர்களின் தேவைகளை நிவர்த்திசெய்யும் விதமாக பத்து இலட்சம் விவிலியப் பிரதிகளை அச்சடிக்க உள்ளதாகத் தேஸே கிறிஸ்தவ ஒன்றிப்புக்குழுவின் தலைவர் அருட்சகோதரர் அலாய் அறிவித்துள்ளார்.

பிரசல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய இளையோர் மாநாட்டில் இதனை அறிவித்த அருட்சகோதரர் அலாய், 2009ல் பல நிலைகளில் இவ்விவிலியப் பிரதிகள் விநியோகிக்கப்படும் என்றார்.

இறைவார்த்தை எல்லைகளைக் கடந்து நம்மை ஒன்றுசேர்க்கும் என்று அம்மாநாட்டில் கலந்துகொண்ட ஏறத்தாழ நாற்பதாயிரம் இளையோரிடம் அவர் கூறினார்.

2009ம் ஆண்டில் சீனாவுக்கென 2 இலட்சம் முழு விவிலியப் பிரதிகளும் திருப்பாடல்களை உள்ளடக்கிய 8 இலட்சம் புதிய ஏற்பாட்டுப் பிரதிகளும் அச்சடிக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தில் இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் ஸ்பானிய மொழியில் 10 இலட்சம், போர்த்துக்கீசியத்தில் 5 இலட்சம் புதிய ஏற்பாட்டுப் பிரதிகளை தேஸே கிறிஸ்தவ ஒன்றிப்புக்குழு விநியோகித்தது. மேலும் 1989ல் இரஷ்ய ஆர்த்தோடாக்ஸ் சபைக்கென இரஷ்ய மொழியில் 10 இலட்சம் புதிய ஏற்பாட்டுப் பிரதிகளையும் இக்குழு அச்சடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### இரண்டாம் உலகப்போரின்போது
## இலங்கையைக் காப்பாற்றிய அன்னை மரியாள்

1942ம் ஆண்டு 2ம் உலகப்போர் இலங்கையின் கதவண்டை வந்துவிட்டது. திருகோணமலைமீது யப்பான் குண்டுகள் பொழியப்பட்ட ஒருசில தினங்களின் பின்னர் அதாவது உயிர்ப்பு ஞாயிறு அன்று யப்பான் குண்டுகளைக் கொழும்பு முதன்முதலாக உருசி பார்த்தது. சேதம் சிதறியதேயாயினும் மக்களுக்கு ஏற்பட்ட தாக்கம் பெரியது. இலங்கைவாழ் மக்களில் விசுவாசம் கொண்ட ஒவ்வொருவரது இதயத்திலிருந்தும் எழுந்த வேண்டுதல்கள் விண்ணகத்தை நோக்கிப் பறந்தன. நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அனைத்து மறை மாவட்டங்களிலும் விசேட செபவழிபாடுகள் இடம்பெற்றன.

தனது மக்களின் வருங்காலத்தைக் கருத்தில் கொண்ட அன்றைய கொழும்பின் அதிமேதகு பேராயர் மேசன் ஆண்டகை கனத்த இதயத்துடனும் மிகுந்த கவலையுடனும் இலங்கையை அனைத்து விதமான ஆபத்துக் - களிலுமிருந்தும் பாதுகாக்கும்படி இறைவனின் மாசற்ற அன்னையை நோக்கிக் குரல் எழுப்பினார். நாடு காப்பாற்றப்படுமானால் தேவத்தையில் மரியன்னைக்கு ஒரு ஆலயத்தைக் கட்டியெழுப்புவதாக முழந்தாழி -ட்டபடி வாக்குறுதி அளித்தார். இறைவன் ஆயிரக்கணக்கான தனது மக்களின் அழு - குரலைக் கேட்டார். மரியன்னை தனது மக்களுக்காகப் பரிந்துபேசினார். இதன்மூலம் தனது எதிரிகளிடமிருந்து இலங்கை காப்பாற்றப்பட்டது.

1947ம் ஆண்டு பெப்ரவரி 5ம் நாள் தேவத்தையில் குழுமியிருந்த பல்லாயிரக் - கணக்கான மக்கள் மத்தியில் பேராயர் பின்வரும் வார்த்தைகள் மூலம் மரியன்னையை இலங்கையின் அரசியாகப் பிரகடனப்படுத்தினார். "திருத்தந்தை 12ம் பத்திநாதரின் அதிகாரத்தினால் மாசற்ற கன்னிமரியாளை எமது தீவின் அரசியாகப் பறைசாற்றுகின்றோம். அன்றியும் அவர் இலங்கை மாதா என அழைக்கப்படுவார் என்றும் நாம் அறியத்தருகிறோம்."

### செட்டிகுளம் பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்களின்
## புதிய கட்டிடங்கள் திறப்பு விழா

செட்டிகுளம் பங்கில் துடரிக்குளம் கிராமத்தில் இருந்து பணியாற்றிவரும் பிரான்சிஸ்கன் அருட் சகோதரர்கள் தமது பணியை விஸ்தரிக்கும் பொருட்டு இரண்டு பெரிய கட்டிடங்களைக் கட்டி முடித்து அண்மையில் திறந்தனர்.

கடந்த ஜனவரி மாதம் 29ம் திகதி அன்று துடரிக்குளத்தில் இச்சகோதரர்கள் வாழ்ந்துவரும் வளாகத்தில் 75 இலட்சம் ரூபா பெறுமதியான மாணவர் இல்லம் ஒன்றும், செட்டிகுளம் பொலிஸ் நிலையத்திற்கு அருகே ஏறக்குறைய ஒரு கோடி ரூபா பெறுமதியான செலவில் கட்டப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் திறந்து - வைக்கப்பட்டன.

மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களும், பிரான்சிஸ்கன் அருட் சகோதரர்களின் இலங்கை மாகாண முதல்வர் அருட்சகோதரர் ஜெறமி கிறிஸ்ரி அவர்களும் இவற்றைத் திறந்துவைத்தனர்.

தொழில்நுட்பக் கல்லூரியில் கணனி, தச்சுவேலை, ஆங்கிலம் போன்ற பயிற்சி நெறிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ஏறக்குறைய 100 மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெறுகின்றனர்.

மாணவர் இல்லத்தை அதன் மேலாளர் அருட்சகோ. யோசவ் குரூஸ் அவர்களும், தொழில்நுட்பக் கல்லூரியை அதன் இயக்குனர் அருட்சகோ. தோமஸ் மத்தியு அவர்களும் முயற்சி எடுத்துக் கட்டி முடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் முயற்சிக்கு மன்னாவின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

## கிறிஸ்தவ பாடத்தில் 100 வீதம் A சித்தி

அண்மையில் வெளிவந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் மன்/ சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் இருந்து கிறிஸ்தவ பாடத்திற்கு 13 மாணவர்களே தோற்றினர். தோற்றிய இந்த 13 மாணவர்களும் A சித்தி பெற்று வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளனர். இம்மாணவர்களுக்கு கிறிஸ்தவ பாடத்தைக் கற்பித்து வருபவர் மன்னாரைச் சேர்ந்த திருமதி ஜெனிவி ஸ்ரீபன் ஆவார். இவர் மன்னா பத்திரிகையில் மாணவர் பக்கத்தில் கிறிஸ்தவ பாட மாதிரி வினாவிடைகளைத் தொகுத்துத் தருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 100 வீதம் A சித்தியைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்த ஜெனிவி அவர்களுக்கு மன்னா பத்திரிகை சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

### வன்னியில் மக்கள் அனுபவித்துவரும் துன்பங்களை
## திருத்தந்தையிடம் எடுத்துரைப்பேன்
### – திருத்தந்தையின் பிரதிநிதி –

வன்னியில் தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற துன்ப துயரங்களை விரைவில் வத்திக்கான் சென்று பரிசுத்த பாப்பரசருக்கு எடுத்துரைப்பேன் என்று பாப்பரசரின் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் அதி வண. மாரியோ செனாரி ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு வருடங்களாக இலங்கைக் - கான வத்திக்கான் தூதுவராக பணியாற்றி சிரியாவுக்கு இடமாற்றமாகிச் செல்லும் அவருக்கு ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் பிரிவுபசார நிகழ்வு நடாத்தப்பட்டது.

யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையுடன் சேர்ந்து திருத்தந்தையின் பிரதிநிதி அவர்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது: வன்னிப் பகுதியில் இடம் பெற்றுவரும் யுத்தத்தினால் அங்கு வாழுகின்ற மக்கள் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்கியுள்ளனர். இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும். வன்னியில் வாழுகின்ற மக்கள் அமைதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கு ஏற்ற நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்காக அனைவரும் மேற்கொள்கின்ற பிரார்த்தனைகள் வரவேற்கத்தக்கது.

விரைவில் நான் வத்திக்கான் சென்று பரிசுத்த பாப்பரசரைச் சந்திக்கும்போது வன்னியில் இடம்பெற்றுவரும் யுத்தத்தால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவது தொடர்பாக தெளிவாக எடுத்துக்கூறுவேன் என்றார்.


### ஒடுக்கமான பிரதேசத்திற்குள்...... (1ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மக்கள் விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்குள் வருவார்களேயானால் அவர்களின் பாதுகாப்பைத் தம்மால் உறுதிப்படுத்த முடியும் என்று அரசாங்கம் கூறியுள்ளது. எனவே அவர்கள் பாதுகாப்பான ஒரு பாதை வழியாக வருவதற்கான வழிவகைகளைச் செய்துகொடுக்கும்படி நாம் தங்களையும் அரசாங்கத்தையும் கேட்டு நிற்கின்றோம். அத்தகைய பிரதேசத்திற்குள் வரவிரும்பும் மக்களின் பாதுகாப்பை இது உறுதிப்படுத்தும்.

அப்பாவிப் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பாவிக்க வேண்டாம் என்று நாம் எல். ரீ. ரீ. யினரைக் கேட்டுள்ளோம். மக்கள் பெருந்திரளாக வரும்பொழுது இரு பக்கங்களிலும் இருந்து ஏவப்படும் எறிகணைகளில் அகப்பட்டு காயமடையும் மக்களின் தொகை அதிகரித்து வருகிறது என்று திருச்சபை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அதிகளவானோர் கொல்லப்பட்டுள்ளதுடன் காயப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதிகளும் கிடைப்பதில்லை. ஆகவே ஜனாதிபதியாகிய தாங்கள் இதனைக் கவனத்திலெடுத்து உடனடியாகச் செயற்படும்படி கேட்டு நிற்கிறோம்.

### நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்
## நினைவு தினம்



கன்னித் தமிழுக்கும் கத்தோலிக்க திருமறைக்கும் பெருந்தொண்டாற்றிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளின் 62வது நினைவுதினத்தையொட்டி யாழ். கத்தோலிக்க கலை, இலக்கிய வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

திருப்பலியும் சிறப்புரையும் இடம்பெற்றன. ஒவ்வொரு வருடமும் யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டமே இந்த நிகழ்வை மேற்கொண்டு வருகிறது.


## ஞானோதயம்
ஆன்மீகக் கல்வி நிலையம் நடாத்தும்
### இறையியல் டிப்ளோமா
## கற்கைநெறி

ஆரம்பம் : 04 - 04 - 2009
இடம் : ஞானோதயம், தாழ்வுபாடு வீதி, மன்னார்.
காலம்: இக்கற்கை நெறியில் பங்கு பற்றுபவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களின் வசதிக்கேற்ப நாள், நேரம் தீர்மானித்து வகுப்புக்கள் நடாத்தப்படும்.
பங்கேற்பாளர் : பொதுநிலையினரும், துறவியரும். குறிப்பாக பங்கிலே ஆர்வத்தோடு மறைப்பணி ஆற்றுவோர்.
தகமை : கிறிஸ்தவ பாடத்தை உயர் தரப் (A/L) பரீட்சையில் எடுத்திருத்தல் விரும்பத்தக்கது.

பொதுநிலையினர் உங்கள் பங்குத் தந்தையின் சிபாரிசுடனும். துறவியர்கள் தங்கள் சிரேஷ்ரரின் சிபாரிசுடனும் பங்குனி மாதம் 15ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பியுங்கள்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
*அருட்தந்தை எட்வின் வசந்தராசா (அ. ம. தி)*
*பயிற்சி இயக்குனர்,*
*ஞானோதயம், தாழ்வுபாடு வீதி, கீரி, மன்னார்*
தொலைபேசி இல. 023 - 2222969

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## திருத்தந்தையின் பிரதிநிதி மேதகு மாறியோ ஆண்டகை

# வங்காலைப் பங்கிற்கு விஜயம்

திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு மாறியோ செனாறி ஆண்டகை அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று வங்காலைப் பங்கிற்கு விஜயம் செய்தார்.

அன்றைய தினம் வங்காலைப் பங்கில் நடைபெற்ற திருப்பாலத்துவசபைத் திருவிழாவில் கலந்துகொள்வதற்காகவே அவர் வருகை தந்திருந்தார். திருப்பாலத்துவ சபையானது திருத்தந்தையின் நேரடிக் கண்காணிப்பில் உள்ள சபை ஆகும். திருத்தந்தையின் பிரதிநிதியினுடைய திடீர் விஜயம் பங்குமக்கள் அனைவருக்கும் மகிழ்வூட்டும் நிகழ்வாக அமைந்திருந்தது.

திருத்தந்தையின் பிரதநிதி அவர்கள் அன்றைய தினம் சிறப்புத்திருப்பலியை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். அவருடன் முன்னையநாள் குருமுதல்வர் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளாரும் அருட்பணி. விக்ரர் குரூஸ் (அ. ம. தி.) அவர்களும் சிறப்புத் திருப்பலியை நிறைவேற்றினார்கள்.

பாடல்கள், வேண்டுதல்கள், செபங்கள் யாவும் இலத்தீன், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் இடம்பெற்றன. ஆண்டகை அவர்கள் தன் மறையுரையில் தான் இப்பங்கின் அழைத்தல்களை எண்ணி மகிழ்ச்சி - யடைவதாகவும், இன்னும் இப்பங்கில் விசுவாச வாழ்வு அதிகரிக்க வேண்டுமென்றும், போராட்டமான சூழ்நிலையில் வாழும் வன்னி மக்களின் நிலையை திருத்தந்தைக்கு எடுத்து இயம்புவதாகவும், திருப்பாலத்துவசபை சிறார்களின் உற்சாகமான வரவேற்பும் தமிழர் பண்பாடும் தன்னைக் கவர்ந்ததாகவும் குறிப்பிட்டார். ஈற்றில் திருத்தந்தையின் திருக்கர ஆசீரை அளிப்பதாகக் கூறி அனைவரையும் ஆசீர்வதித்தார். இந்த விழாவை வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம், உதவிப்பங்குத் தந்தை லக்ஸ்ரன் டீ சில்வா ஆகியோரும் ஆலய அருட்பணிச்சபையினரும் ஒழுங்கமைத் -திருந்தனர். ஊர் முழுவதும் பாடசாலை நுழைவாயிலில் திரண்டு அவரை வரவேற்ற சம்பவம் அழகாக அமைந்திருந்தது.



இச்சிறப்புத் திருப்பலியில் அரச அரசசார்பற்ற அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தகவல் : திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்.

## மன்னாரில் கடந்த வருடம் 97 பேர் காணாமல் போயுள்ளனர்

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மட்டும் 97 பேர் காணாமல் போயிருப்பதாக மன்னார் மாவட்டத்தில் மனிதாபிமான பணியில் ஈடுபட்டு வரும் அமைப்பு ஒன்றின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- மன்னார் மாவட்டத்தில் 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான ஒரு வருட காலப்பகுதிக்குள் 97 பேர் காணாமல்போயுள்ளனர். அவர்களில் பலர் இரவு நேரங்களில் வீடுகளில் வைத்து ஆயுத முனைகளில் காணாமல்போயுள்ளனர். ஆயுத முனைகளில் வருபவர்கள் சரளமாக தமிழில் பேசியே இவர்களை அழைத்துச் செல்வதாகக் கூறியதும் முறைபாடுகளில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பலர் தங்களது கடமையின் நிமித்தம் தங்களுடைய வீடுகளில் இருந்து வெளியில் சென்ற வேளையில் காணாமல்போயுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. காணாமல் போன மற்றும் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்டவர்களில் பலர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காணாமல்போன மற்றும் கடத்தப்பட்டவர்கள் மீண்டும் வீடு திரும்பு - வார்கள் என அவர்களுடைய உறவினர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

தகவல் : எஸ். ஆர். லெம்பேட்

## மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் நிர்வாக உறுப்பினர்களது ஒன்றுகூடல்

மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் நிர்வாக உறுப்பினர் - களுக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடலானது கடந்த 20-12-2008 அன்று வவுனியா பங்கின் மேய்ப்புப்பணி மண்டபத்தில் இடம்பெற்றது.

மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. பி. ஜேசுறாஜா அடிகளாரின் தலைமையில் இந்த ஒன்றுகூடல் இடம்பெற்றது. இவ்வொன்றுகூடலில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை அ. விக்ரர் சோசை அடிகளாரும், மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு நிர்வாக உறுப்பினர்களும், பங்குகளில் இளைஞர் ஒன்றியங்களுக்குப் பொறுப்பாக நியமனம் பெற்றுள்ள ஊக்குவிப்பாளர்களும் பங்கெடுத்தனர்.

இவ்வொன்றுகூடலின்போது 2008ம் ஆண்டில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் பற்றிய மீளாய்வும், புதிய வருடத்திற்கான உத்தேசத் திட்டத் தயாரிப்பும் மற்றும் கிறிஸ்மஸ் ஒன்றுகூடலும் இடம்பெற்றன. மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் நிர்வாக அமைப்பில் ஒவ்வொரு பங்கிலிருந்தும் இருவர் அங்கத்துவம் வகிக்கின்றனர். இவர்களது அங்கத்துவக் காலம் நியமனம்பெற்ற தினத்திலிருந்து இரு வருடங்கள் மட்டுமே. ஊக்குவிப்பாளர்கள் பங்குத் தந்தையருக்குப் பக்கபலமாக இருந்து இளைஞர்களையும் பங்கு இளைஞர் ஒன்றியங் -களையும் வழிநடத்தும் நோக்கோடு பங்குத்தந்தையர்களால் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

இளைஞர் ஆணைக்குழுவின் நிர்வாகக் கூட்டமானது மாதாந்தம் இடம்பெற்றுவரும் அதேவேளையில் ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நடைபெறுமென இக்கட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது காலை 10.00 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வானது பி. ப. 2.30 மணியளவில் மதிய உணவுப் பரிமாற்றத்துடன் நிறைவுபெற்றது.

தகவல் : செல்வி கவிதா சேனாதிறாஜா மன்னார் மறை மாவட்ட இளைஞர் ஆணைக்குழுச் செயலாளர் - வவுனியா

## படிப்பு குறும்படப் பிரதி மன்னார் ஆயரிடம் கையளிப்பு

கடந்த 20-12-2008 அன்று பெரிய கோமரசன்குளம் பரலோக மாதா ஆலயத்திறப்பு விழாவின்போது வவுனியா பொன் வீடியோவின் மீடியா கலையகம் தயாரித்த ‘படிப்பு’ என்ற பெயரைத் தாங்கிய குறும்படத்தின் பிரதி ஒன்றை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கு ‘படிப்பு’ குறும்பட இயக்குனர் திரு. எஸ். சுபாஸ் அவர்கள் வழங்கும் காட்சி இது. பங்குத்தந்தை வண. அ. சகாயநாதன் அவர்கள் இதற்கான ஒழுங்கைச் செய்திருந்தார்.



## உன்னிடமுள்ள தகமைகளை இனங்கண்டு வெளிக்கொண்டுவா!

### – இளைஞர் கருத்தமர்வில் அருட்சகோதரி கிறிஸ்ரபெல் –



இளைஞனே! நீ சமுதாயத்திற்கு வேண்டியவன். சமுதாயத்திற்கு நீ அதிகம் கொடுக்கக் கடப்பாடு உடையவனாய் உள்ளாய். உன்னில் பொதிந்து கிடக்கும் தகமைகளை இனங்கண்டு அவைகளை வெளிக்கொணர்ந்து நீ வாழும் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக அவைகளை அர்ப்பணி. நீயும் வளர்வாய், நீ வாழும் சமுதாயமும் வளரும்.

இம்மாதம் 11ம் ந் திகதி ஞாயிற்றுக் கிழமை முருங்கன் மறைக்கோட்டப் பங்குகளில் ஒன்றான கற்கடந்தகுளம் பங்கில் அப்பங்கு இளைஞர்களுக்கென மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக் குழுவினால் நெறிப்படுத்தப்பட்ட முழுநாட் கருத்தமர்வில் வளவாளராகப் பங்காற்றிய திருக்குடும்ப கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரி கிறிஸ்ரபெல் அவர்கள் தனது உரையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஒவ்வொரு இளைஞனும் தன்னை முதலில் முழுமையாக அறிந்துகொண்டால்தான் அடுத்த நடவடிக்கையில் இறங்க முடியும் எனவும், தேடல்களில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்திரு பி. ஜேசுறாஜா அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் அருட்சகோதரி கிறிஸ்ரபெல் அவர்களுடன் அருட்சகோதரியின் பமிலியன் என்னும் அமைப்பின் பணியாளர்கள் எண்மரும் வளவாளர்களாகப் பணியாற்றினர். அன்று காலை 9.00 மணியளவில் அந்நாள் நிகழ்வுகள் திருப்பலியுடன் ஆரம்பமாகியது. திருப்பலியில் இடம்பெற்ற மறை உரையில் அருட்திரு. பி. ஜேசுறாஜா அவர்கள் இயேசு இளமைப் பராயத்தில் தனது பகிரங்கப் பணிகளை ஆரம்பித்தாரெனவும் ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் தனது இளமைப்பருவத்தில் கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்ந்து நற்செய்தியின் தூதுவர்களாகச் செயற்படல் வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

திருப்பலியைத் தொடர்ந்து அனைவரும் பங்குத்தந்தை அருட்திரு. ச. மரியதாசன் சீமான் அடிகளாரினால் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வுகள் யாவும் உரைகள், குழு ஆய்வு, பொது அமர்வு, குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல் மற்றும் விளையாட்டுக்கள் போன்றவைகளினால் அலங்கரிக்கப்பட்டன. குழு ஆய்வுகளை முன்னின்று நடத்தியவர்கள் அருட்சகோதரி அவர்களும் அவர்களது பணியாளருமாவர். பங்கெடுத்தோர் அனைவரும் அதிக ஆர்வத்தோடும் திறந்த மனத்தோடும் செயற்பட்டமை இங்கு குறிப்பிட வேண்டிய தொன்றாகும. (தொடர்ச்சி 19ம் பக்கம்)

## பேசாலையில் வீதிக்கு புனித பவுலின் பெயர்

நற்செய்தி அறிவிப்பு ஆண்டு மற்றும் புனித பவுலின் ஆண்டையொட்டி பேசாலைப் பங்கில் திருதூதர் பவுல் அடிகள் பெயரில் வீதி ஒன்றை உருவாக்கும் முயற்சி பங்குத் தந்தை அருட்பணி. அகஸ்ரின் அடிகளார் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 01.01.2009ஆம் ஆண்டு காலை நடைபெற்ற திருப்பலியின் முடிவில் பேசாலையின் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் அசிசி அடிகளார் ஆசீர்வதிக்க திருத்தொண்டர் ரஜனிகாந்த் அவர்களால் இப்புதிய வீதி புனித பவுலின் பெயரில் திரை நீக்கம் செய்யப்பட்டது. திருத்தொண்டர் தமது உரையில், நற்செய்தி அறிவிப்பது திருமுழுக்குப் பெற்ற நம் ஒவ்வொருவரின் கடமை என்று கூறினார். அதே தினம் புனித வெற்றி அன்னை வீதியை திருத்தொண்டர் அவர்கள் ஆசீர்வதிக்க உதவிப்பங்குத்தந்தை திரைநீக்கம் செய்துவைத்தார். 2007ம் ஆண்டில் ஆலய அருட்பணிப் பேரவையில் பேசாலைப் பங்கில் உள்ள பெயரற்ற வீதிகளுக்கு கத்தோலிக்கப் பெயர்களைச் சூட்டுவதாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது - **ஜே. அன்ரன் பிரான்சிஸ், அன்பிய இணைப்பாளர், பேசாலை.**





## வங்காலைப் பங்கில் மேய்ப்பு பணி மகாநாடு

இவ்வருடம் நற்செய்தி அறிவிப்பு ஆண்டை மையப்படுத்தி கடந்த 11-01-2009 அன்று வங்காலைப் பங்கில் மேய்ப்புப் பணி மகாநாடு பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. இதற்கு வழிகாட்டியாக குடும்ப மேய்ப்புபணி இயக்குனர் அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் கலந்துகொண்டார்.

உதவிப் பங்குத்தந்தையின் ஒழுங்கமைப்பின் படி பங்குச் செயற்திட்டங்கள் வட்டாரப் பிரதிநிதிகளுடன் இணைந்து முன்னெடுக்கப் - பட்டன. குருமுதல்வர் அ. விக்ரர் சோசை அடிகளாரும் இதில் பங்கெடுத்தார். அருட்பணி. அந்தோனிதாஸ் அடிகள் பங்கின் முன்னெடுப்புத் திட்டங்களை மக்களிடமிருந்து பெற்று முன்னுரிமைப்படுத்தினார். அருட்பணி. ஸ்ரனி அன்ரனி விசுவாச வாழ்வில் முதிர்ச்சியை நோக்கிய பயணத்தில் பவுலடியாரின் வாழ்வைப் பற்றிய உரையை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து பவுலடியாரின் மறையுரை பற்றிய இறுவட்டு ஒன்றையும் காண்பித்தார். அன்றைய நிகழ்வுகளை திரு. எஸ். சூசைநாயகம் றெவல் (நிர்வாக அதிகாரி) அவர்கள் நெறிப்படுத்தினார்.

தகவல்: திருமதி. பெப்பி

## மன்னார் மறைமாவட்டத்தின் திருவழிபாட்டு நாட்காட்டி



மார்ச் மாதம்

19 - தூய சூசையப்பர் திருவிழா - தாழ்வுபாடு, காத்தான்குளம்.
- மன்னார் ஆயரின் பெயர்கொண்ட தினம்,
- திருமலை மட்டுநகர் ஆயரின் பெயர்கொண்ட தினம்.
- மன்னார் மறைமாவட்ட மறைவாழ்வுக் கல்விப் பணியாளர் தினம்

20 - கோமரசன்குளம் கல்வாரித் திருத்தல விழா

27 - ஓலைத்தொடுவாய் கர்த்தர் கோயில் திருவிழா

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# வன்னியிலுள்ள அப்பாவி மக்களின் நிலை குறித்து பாப்பரசர் உரிய கவனம் செலுத்த வேண்டும்!

### திருமலை மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி

வன்னியில் தொடரும் மோதல்களுக்கு மத்தியில் சிக்குண்டுள்ள அப்பாவித் தமிழ் மக்களின் நிலை குறித்து இந்தியா, இணைத்தலைமை நாடுகள் உட்பட பிரித்தானியாவும், அமெரிக்காவும் விஷேடமாக பரிசுத்த பாப்பரசரும் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று மட்டக்களப்பு திருகோணமலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம் பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னியில் அப்பாவித் தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், வைத்திய வசதிகள் வழங்கப்படவேண்டும், மக்களின் துயரங்கள் களையப்பட வேண்டும். அதற்காக தற்காலிகமாவது போர் நிறுத்தப்பட வேண்டும் என்று அழுத்தங்கள் கொடுத்தும் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் மக்கள் துயரங்கள் நீண்டுகொண்டே போகின்றன.

உண்மையை ஏற்க மறுப்பதும் பொறுப்புள்ள -வர்கள் பேசுவதை நசுக்குவதும் மனித சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத - தொன்றாகும்.

ஒரு நாட்டில் அதன் சுதந்திர தினம் மிகவும் முக்கியமான தினம். அத்தினத்திலேயே வன்னி மக்கள் இரத்தம் சிந்தினார்கள் என்றால் இதைவிட மோசமான விடயம் வேறு எதுவும் இருக்க முடியாது. இது நிச்சயமாகக் கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும். மக்கள் தாங்கள் எங்கு வாழ வேண்டும் என்பதனைத் தீர்மானிக்கின்ற பொறுப்பு அவர்களைச் சார்ந்ததே. ஆகவே இவ்விடயத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப் - படுவது ஒரு பொறுப்பற்ற செயலாகும்.

யுத்தப் பிரதேசத் தகவலின்படி இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித்தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஈராயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காயப்பட்டிருப்பதாகவும் அறிகின்றோம். போர் நீடிக்குமானால் இத்தொகை நிச்சயமாக நீடிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இந்நிலை தொடராமல் வன்னித் தமிழ் மக்களின் துயர் நீங்க யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் தாமதமின்றி ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்பு - கின்றோம். மேலும் கிழக்கு மாகாணத்தில் மூன்றாண்டுகளுக்கு முன்னர் போரினால்



இடம்பெயர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னும் தற்காலிக முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள். மூதூர், சம்பூர், குடும்பி மலை போன்ற பிரதேசங்களில் இவர்கள் கூடிய விரைவில் மீளக்குடியமர்த்தப்பட்டு உரிய கொடுப்பனவுகளும் கொடுக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நவோதய நிறுவனத்தின் மற்றுமோர் உன்னத பணி

காலி மறைமாவட்ட தெனியாய பங்கில் நவோதய (Codesep) நிறுவனம் தென்மாகான மலையக மக்களில் மதுபோதைக்கு அடிமையாகி அல்லல்படும் குடும்பங்களுக்கு நிரந்தர விடிவு கிடைக்க வேண்டுமென்று புதியதோர் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

நவோதய நிறுவனத்தின் இயக்குனர் அருட்திரு. மைக்கல் ராஜந்திரம் அடிகளார் இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளார். முதன் முறையாக முழுமையாக மதுவுக்கு அடிமையாகிய வைத்தியர் ஒருவரும் மற்றும் மறை ஆசிரியர் ஒருவரும் சிகிச்சை பெற்று நல்ல குணமடைந்து தற்போது ஏனைய மதுவுக்கு அடிமையானவர்களுக்கு சாட்சி பகர்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பின் 2009 ஜனவரி 4ம் திகதி முழுமையாக மதுவுக்கு அடிமையானவருக்கான முழுநாள் கருத்தரங்கு புனித சூசையப்பர் ஆலயக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் சுமார் 60 பேர் கலந்து கொண்டார்கள். சமூகம் அளித்தவர்களில் 25 பேரைத் தேர்ந்தெடுத்து 5 பேர் கொண்ட குழுவாக பேராதெனிய மாம்பிட்டியவிலுள்ள வைத்தியசாலைக்கு இரு வாரத்திற்கு ஒருமுறை அனுப்பி அவர்களுக்கு முழுமையான சிகிச்சை கொடுத்து பூரண சுகம் அளிக்கப்படுகிறது. இச்சேவை மூலம் இப்பகுதியில் வாழும் மலையக மக்களின் வாழ்க்கை நிலையை மாற்ற முடியும் என்பது உறுதி.

## அ.ம.தி. களின் புதிய நியமனங்கள்

- ♣ அருட்பணி. ஸ்ரனி அன்ரனி (அமதி) அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தில் விவிலிய மற்றும் மறைபரப்புப் பணிகள் ஆணைக்குழு இயக்குனராக மாகாண முதல்வரின் சம்மதத்தோடு மேதகு மன்னார் ஆயரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ♣ அருட்பணி. அல்பன் ராஜசிங்கம் (அமதி) அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தில் வஞ்சியன்குளம் பங்குத் தந்தையாக மேதகு மன்னார் ஆயரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ♣ அருட்பணி. பி. பெனிக்னஸ் (அமதி.) அவர்கள் வன்னியில் உள்ள அன்பகம் சிறுவர் இல்லத்தின் இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு பொறுப்பாக இருந்த அருட்பணி. பிரான்சிஸ் லொசிங்டன் அவர்கள் உயர் கல்வியை மேற்கொள்ளவுள்ளார்.
- ♣ அருட்பணி. ஜேக்கப் யோகராஜா (அமதி) அவர்கள் கடந்த காலத்தில் மன்னார் மறைமாவட்டத்தில் பணிசெய்து வந்தார். தற்போது அவர் மன்னார் ஞானோதய நிதியாளராக செயற்பட உள்ளார்.
- ♣ அருட்சகோதரர் அமிர்தராஜ் டபரேரா (அமதி) அவர்கள் யாழ் கோப்பாய் சங்கமம் இல்லத்தில் அருட்பணி. றெனி பீஸ்மன் அவர்களின் குழுவில் அங்கம் பெறுவார்.
- ♣ அருட்பணி. ஜெரோம் லெம்பட் (அமதி) அவர்கள் மன்னாரில் உள்ள அமதி நவ சன்னியாச இயக்குனராகவும் ஞானோதயம் என்ற அமதிகளின் ஆன்மீகக் கல்வி நிலையத்தின் இயக்குனராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ♣ அருட்பணி. பிரான்சிஸ் டேனியல் (அமதி) அவர்கள் இதுவரை காலமும் மன்னார் ஞானோதயம் மற்றும் நவசன்னியாச இயக்குனராக சிறப்பாகச் செயற்பட்டபின்னர் தற்போது மறைப்போதகராக வெளிநாடு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றார்.
- ♣ அருட்பணி. ஜீவனதாஸ் பெனாண்டோ (அமதி) - மேலாளர், அமல உதயம், திருகோணமலை.
- ♣ அருட்பணி. எட்வின் வசந்தராஜா (அமதி) - நிகழ்ச்சி இயக்குனர், ஞானோதயம், மன்னார்
- ♣ அருட்சகோதரர் பேர்னாட்சோ (அமதி) - நிதியாளர், புனித சூசையப்பர் குருமடம், யாழ்.
- ♣ அருட்பணி. பி. ஜெயபாலன் (அமதி) - அமதி அகம், மறையுரைஞர் குழு, வவுனியா.
- ♣ அருட்பணி. யூஜின் பெனடிக்ற் (அமதி) - இயக்குனர், ஜே. ஆர். எஸ். திருகோணமலை.
- ♣ அருட்பணி. தேவதாசன் எட்வின் (அமதி) - இயக்குனர், ஜே. ஆர். எஸ். யாழ்ப்பாணம்.
- ♣ அருட்பணி. எஸ். எம். செல்வரெட்ணம் (அமதி) - அமதி அகம், வவுனியா.
- ♣ அருட்பணி எச். வேதநாயகம், (அமதி) தற்காலிக இல்லிடம், கொழும்பு அமதிகளின் இல்லம்

நன்றி - 'யாழ் தொனி' (யாழ் மாகாண அமதிகளின் செய்தி மடல்)

## சஞ்சிகைகள், பத்திரிகைகள்
### சமூக மாற்றத்திற்கு ஏற்றவாறு செயற்பட வேண்டியது அவசியம்

**தொண்டன் சஞ்சிகையின் 40வது ஆண்டு விழாவில் துணை ஆயர் பொன்னையா யோசப்**

ஒரு சஞ்சிகையின் நாற்பது ஆண்டுகால நிறைவு அடுத்து வரும் நானூறு ஆண்டுகால இலக்கியப்பணிக்கு அத்திவாரமாக அமைவதாக என திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத் துணை ஆயர் கலாநிதி பொன்னையா யோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் 'தொண்டன்' இலக்கிய மாத சஞ்சிகை 40வது ஆண்டு (1969-2009) நிறைவு நிகழ்வு திருகோணமலை புனித மரியாள் பேராலய அரங்கில் நடைபெற்றது.

முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு பேசிய துணை ஆயர், மனிதன் தனது நாற்பதாவது வயதை அடைந்தவுடன் தனது குடும்பத்தின் எதிர்காலம், தனது உடல்நிலை பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கின்றான். அதற்கேற்ற விதத்தில் திட்டம் தயாரித்துச் செயற்படுகின்றான். அதுபோன்றே சஞ்சிகை, பத்திரிகையின் வாழ்வும் அமைகின்றது. சஞ்சிகைகள், பத்திரிகைகள் சமூக மாற்றத்துக்கு ஏற்றவாறு செயற்பட வேண்டும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் கத்தோலிக்க மக்களின் மறுமலர்ச்சி மற்றும் மறை அறிவை



விருத்தி செய்யும் நோக்குடன் செயற்பட்டு வந்தது. தொண்டன் சஞ்சிகை ஆரம்பத்தில் தமிழ் கத்தோலிக்க மக்களை மையமாக வைத்து வெளிவந்துகொண்டிருந்தது. தற்போது அனைத்து மத மக்களையும் உள்வாங்கி விரிந்த பார்வையுடன் அகலக்கால் வைத்து தொண்டன் பணியாற்றுகிறது என்றும் துணை ஆயர் கூறினார்.

## 'சிரச' மீதான தாக்குதலைப் பேராயர் கண்டிக்கின்றார்
# தகவல் சுதந்திரம் ஒரு அடிப்படை உரிமை

**- மேதகு பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் -**

ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் மக்கள் அனைவரதும் சுதந்திரத்தின்மேல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே இது என்று கூறினார் மேதகு பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை. 2009 ஜனவரி 6ம் நாள் சிரச மற்றும் எம். ரீ. வி தொலைக்காட்சி நிலையங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்தே அவர் இவ்வாறு கூறினார்.

அன்று காலையும் அதற்கு முன்னரும் 'சிரச' தொலைக்காட்சி நிலையத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது மிகவும் பயங்கரமான வன்செயலாகும். மானிட சமூதாயத்தில் தகவல் சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதரதும் அடிப்படைச் சுதந்திரமாகும். ஒரு சமுதாயத்தில் பகிரங்கமாகப் பேசுவது ஜனநாயகம். எனவே இதனை "சிரச"மீது விழுந்த அடியாக மட்டும் நோக்கக்கூடாது.

இத்தகைய தாக்குதல்கள் எமது நாட்டில் சில தடவைகள் நடந்துள்ளன. இவை உலக சமுதாயத்தின் கண்ணோட்டத்தில் எமது நாட்டின் தரத்தைக் குறைக்கும் செயலாகும். ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ள ஒரு சில நாடுகளின் பட்டியலில் எமது நாடும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இத்தகைய செயற்பாடுகள் உலகின்முன் எமது நாட்டை இன்னும் அதிகம் கீழ்நிலைக்குக் கொண்டு செல்லும்.

ஆகவே இத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் யாராயிருந்தாலும் சமுதாயத்தில் அவர்களது தரத்தையும், செல்வாக்கையும் பொருட்படுத்தாது சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும். இத்தகைய வன்செயலை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு நீதியை நிலைநாட்டுவதற்கான உடனடி நடவடிக்கைகளில் இறங்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

## அமதிகளின் நித்திய அர்ப்பணமும் தியாக்கோன் பட்டமும்

அருட்சகோதரர்களான ஏ. இயூஜின் அமல்ராஜ் மற்றும் டி. ஏ. மனோ பஸ்ரி ஜெயந்தா (பள்ளிமுனை) ஆகிய இருவரும் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் கடந்த 2008 டிசம்பர் 17ம் நாள் தமது இறுதி அர்ப்பணத்தைச் செய்தனர். டிசம்பர் 18ம் நாள் யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகையினால் இவர்கள் தியாக்கோன் நிலைக்கு உயர்த்தப்பட்டனர்.

## அமதிகளின் நிர்வாகத்தில் யாழ். சாட்டி அன்னைத் திருத்தலம் பொலிவுறுகிறது

**- அருட்பணியாளர் ஸ்ரான் பிலிப் (அமதி) -**

பயணத்தின் பாதுகாவலியான சாட்டி மாதாவுக்கு இத்திருத்தலம் அர்ப்பணிக்கப்பட்டதை யிட்டு நீண்ட வரலாறு உண்டு. பயங்கரப் புயலிலிருந்து காப்பாற்றப்பட்ட போர்த்துக்கேயர் தமது நேர்த்திக்கடனைச் செலுத்துவதற்காக ஒரு சிறிய கிராமத்தில் இந்தப் புதுமையான திருச்சொரூபத்தை நிர்மாணித்தனர் என சாட்டித் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்பணி. ஸ்ரான் பிலிப் அடிகளார் தெரிவித்தார்.

அமதிகளின் யாழ் மாகாண செய்தி மடலாகிய யாழ் தொனியின் டிசம்பர் மாத இதழில் அவர் எழுதியுள்ள சிறிய கட்டுரையிலேயே இதைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஒல்லாந்தரின் வருகையால் இத்தேவாலயம் அழிக்கப்பட கிறிஸ்தவர்கள் இத்திருச் சொரூபத்தை எடுத்துச் சென்று ஒரு கிணற்றுக்குள் ஒளித்து வைத்தனர். பிரித்தானியர் நாட்டிற்குள் பிரவேசித்தபோது இத்திருச்சொரூபத்தை எடுத்துவந்து சாட்டியில் நிர்மாணித்தனர். உள்ளூர் மக்கள் சாட்டி அன்னையின் பரிந்து பேசுதலால் பல நன்மை - களைப் பெற்றனர். சாட்டி என்பது வேலணைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர். வேலணையில் 99%மான மக்கள் இந்துக்கள். அவர்கள் சாட்டி அன்னையைத் தமது இந்து தெய்வமான காளியின் மூத்த சகோதரியாக ஏற்றுக்கொண்டதோடு இந்து சமூகத்தினராலேயே

**அமதிகள் இத்திருத்தலத்தைப் பொறுப்பேற்றதுடன் திருத்தலத்தின் முகப்பு புதுப்பொலிவு பெற்றது. யாத்திரிகர் தங்குவதற்கென விடுதி வசதிகள் அமைக்கப்பட்டன!**

திருவிழாவும் கொண்டாடப்பட்டது. சிறிது காலத்தின் பின்னர் கரம்பன் பங்கைச் சேர்ந்த ஒருசில கத்தோலிக்க குடும்பங்கள் முன்வந்து தற்போதைய திருத்தலத்தைக் கட்டி முடித்தன. காலகதியில் இது யாழ் மறைமாவட்டத்தின் பிரசித்திபெற்ற திருத்தலமாயிற்று. அமலமரித் தியாகிகள் சபையினர் இத்திருத்தலத்தைப் பொறுப்பேற்றதுடன் திருத்தலத்தின் முகப்பு புதுப்பொலிவு பெற்றது. யாத்திரிகர்கள் தங்குவதற்கென விடுதி வசதிகள் அமைக்கப் பட்டன. மடுத்திருத்தலத்தைப் போன்று திருச் சிலுவைப் பாதைச் சொரூபங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அ.ம.தி.களால் குழுக்களுக் -கான தியானங்கள் போதிக்கப்பட்டன. இது கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கு உரமூட்டுவதாய் அமைந்தது.



# சிறுவர் பொழில்



## கண் திறந்தது



எஸ். மெற்றில்டா (சோனியா)
அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்

அது 7ம் தரத்தின் வகுப்பறை ஒரே ஆரவாரமும் கூச்சலுமாக இருந்தது. சுரேஷ் அந்த வகுப்புக்குப் புதிய மாணவன் அப்போது தான் உள்ளே நுழைந்தான் அவனது காதில் காது கேளாதவருக்குரிய சிறிய மெஸின் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. சுரேஷையும் அவனது காது மெஷினையும் பார்த்த சக மாணவர்கள் ஹ.. ஹ... என்று சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள் ஒரு மாணவன் சுரேஷின் அருகே வந்து நீ செவிடா? என்று காதருகில் கேட்டான் மற்றொருவன் உனக்கு ஒரு சைட் அவுட்டா? இல்லை டபிள் சைட்டா, என்றான் கிண்டலாக இன்னொருவன் அந்த செவிட்டு மெஸின் எவ்வளவுடா? என்று அலறினான் இன்னொரு குறும்பன் குரங்கைப் போலக் கையை ஆட்டினான் சுரேஷிற்கு அழுகையே வந்து விட்டது.

சுரேஷின் பிஞ்சி இதயம் பஞ்சாக எரிந்தது கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்தது இதைபார்த்த சுட்டிப்பயல் ஒருவனுக்கு கொண்டாட்டம் அருகே வந்து ஓசை எழும்பாமல் வெறும் வாயைமட்டும் அசைத்து ஏதோ பேசினான் சுரேஷிற்கு ஒன்றும் புரியவில்லை என்னென்று கேட்பது போல முகத்தைத் தூக்கினான் அதற்கு அவன் டேய்! செவிட்டு மெஷின் போட்டும் கூட இவனுக்குக் காது கேட்கலைடா என்று மற்றவர்களைப் பார்த்து கூவிக்கொண்டே சிரித்துகொண்டான் இவை எல்லாவற்றையும் பார்த்த வகுப்பாசிரியர் உள்ளே நுழைந்தார். வகுப்பு நிசப்தமானது ஆசிரியர் இருக்கையில் அமர்ந்து அவர்களை உற்றுப்பார்த்தார். ஆசிரியர் பேச ஆரம்பித்தார்.

ராஜேஸ், குமார், விக்கி நீங்களெல்லாம் எதற்காகக் கண்ணாடி போட்டிருக்கிறீர்கள் அவர்கள் அது.. அது... வந்து என்று இழுத்தனர் நான் சொல்கிறேன் உங்களுக்குச் சரியாக கண்தெரியாது கண்ணாடி போட்டால் தான்தெரியும் அதுபோல் காது கேளாதவருக்குரிய மெஷினும் இந்த சமுதாயத்தில் கண்ணாடி போட்டால் ஸ்டைல் என்று நினைக்கிறோம் காது கேளாதவனுக்கு தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கின்றோம் ஒரு மனிதனிடம் என்ன குறை இருக்கின்றதென்று பார்ப்பதைவிட என்ன நிறை இருக்கின்றதென்று பாருங்கள் அவர்களுக்கும் இந்த சமுதாயத்திலே மதிப்பு கொடுங்கள் என்று ஆசிரியர் கூறினார். அனைவரும் தலைகுனிந்து சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

### சிந்தனைக் கதை
## அன்பின் மகிமை

க.ஜெயக்குமார் இல 138 சிதம்பரபுரம் வவுனியா



ஒரு தினம் ஒரு இடையன் தனது செம்மறி ஆடுகளை மேய்த்துவிட்டு மாலை வீடு திரும்பினான். பின் அனைத்து ஆடுகளையும் கூடாரத்தில் அடைத்துவிட்டு தனது தோளில் இருந்த ஆட்டுக்குட்டியை கொண்டு சென்று அதை குளிப்பாட்டி பசுமையான புற்களை உண்ணக் கொடுத்து விட்டு அதை மடியில் வைத்து நீண்ட நேரம் தடவிக்கொண்டு இருந்தான். அருகிலிருந்த மரமொன்றின் கீழ் சீடர்களுக்கு போதித்துக்கொண்டிருந்த இயேசு அதனை கவனித்து விட்டு அந்த இடையனிடம் நீ அனைத்து ஆடுகளையும் அடைத்துவிட்டு இந்த குட்டி ஆட்டின் மீது மட்டும் ஏன் இவ்வளவு அன்பு காட்டுகிறாய் என கேட்டார். உடனே அந்த இடையன் இது எப்போதுமே வழிதவறி விடுகின்றது. அதனால்தான் இனியும் வழிதவறி போகாமல் இருக்க அன்பு காட்டுகிறேன். என கூறினார். இதனைக் கேட்ட இயேசு பிரான் மனம் மகிழ்ந்து தனது சீடர்களைப் பார்த்து அன்பின் மொழியை வாய்பேசாத செம்மறி ஆடு கூட விளங்கி கொள்கின்றது. அன்பு என்ற ஒன்று இல்லாததனாலேயே மக்கள் வழிதவறினார்கள் வழிதவறிய மக்களை அன்பு என்னும் ஒரு கருவியால் மட்டுமே நேர் வழிநடத்த முடியும்.

'அன்பென்னும் மழையில்
அகிலமே நனைய யேசு வந்தார்"

## சிந்தனைத்துளிகள்

♦ கோபத்தை அன்பாலும், அமைதியாலும் வெல்லுங்கள். தீமையை நன்மைசெய்து வெல்லுங்கள். பேராசை ஏற்பட்டால் பெருந்தன்மையாக இருந்து வெல்லுங்கள் பொய்மையை உண்மையால் வெல்லுங்கள்.

♦ நல்லவற்றை கூட்டிக்கொள், அன்பைபெருக்கிக்கொள். வாழ்க்கையை வகுத்துக்கொள்.

♦ தற்பெருமை எங்கு முடிவடைகின்றதோ அங்குதான் ஒழுக்கம் தொடங்கும்.

♦ உன் கையை பணத்தால் நிரப்பு. ஆனால் உன் மனதை குணத்தால் நிரப்பு

♦ பிறர் துன்பத்தை நீ துடைப்பாயானால் உன்னை தேடிவரும் துன்பம் உன்னை விட்டு அகன்று போகும்.

அ. சுவேந்திரன், களிமோட்டை, முருங்கன்.

---

♦ மனிதனின் உரையாடல் இதயத்தின் கண்ணாடி போன்றது.
♦ கடவுள் துணையோடு சென்றால் நிச்சயம் இலக்கை அடைவோம்.
♦ இயற்கையை நேசித்தால் இறைவனை காண்பாய்
♦ ஒன்றாய் இருந்தால் அன்பு வளரும்
♦ அன்பை பார்க்க முடியாது ஆனால் மறக்க முடியாது.
♦ பேசுவதற்கு முன் இரு முறை யோசி
♦ வாழ்க்கை ஒரு போராட்டம்
♦ மனிதன் ஒரு சமூகப்பிராணி
♦ சிந்தி சிறப்பு பெறுவாய்
♦ நீ எனக்கு முன்னே போனால் நான் உன்னை இழந்து விடுவேன். நீ எனக்கு பின்னால் வந்தால் நான் உன்னை வழி நடத்த முடியாது அருகில் வா நண்பா.

*ஜெ. சுகிர்த நிர்மலா - பிச்சை குளம்*

## மெல்லச் சிரிங்க

நேர்ஸ் - டாக்டர், வாட்டில் இருந்த சக்கரை வியாதி நோயாளியைக் காணவில்லை. தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை.
டாக்டர் - கவனமாகத் தேடுங்க, எறும்புகள் எங்காவது கொண்டு போய் வைத்திருக்கும்

..........................................

மகள் :- அப்பா, தேவி என்ற என்னோட பேரை மாத்துங்கள் இல்லாவிட்டால் மூர்த்தி என்ற உங்கட பேரையாவது மாத்துங்க.
அப்பா :- ஏம்மா திடீரென்று இப்படிக் கொதிக்கிறா?
மகள்:- நானா கொதிக்கிறன், பள்ளிக்கூடத்தில் எல்லாரும் என்னை மூதேவி என்று கூப்பிடுறாங்க...!

**- மேரி கொண்செப்ரா, மடுக்கோவில், மடு**

..........................................

**செமினறிக்குப் போ!**

ஒருவன் :- சுவாமியாய் போவதற்கு என்ன செய்ய வேண்டும்
மற்றவன்:- சுவாமிக்குப் படிக்க வேண்டும்
ஒருவன் :- எங்க நாட்டுக் கூத்திலயா?
மற்றவன்:- இல்லை செமினறியில்

**ஒரே வழி!**

ஒருவன் :- ஞானத்தை அடைய வழி சொல்லு மச்சான்!
மற்றவன்:- பேசாமல் (போய்) ஞானத்தின்ர அப்பா அம்மா வீட்டிற்குப் போய் முறைப்படி பெண் கேட்டுப்பார் மச்சான்

**யோ. சே. நவரெத்தினராசா
குளக்கரை வீதி, உயிலங்குளம்.**

## அகதி வாழ்க்கை



ஆடி ஆடித் திரிந்த - வாழ்க்கை
அலங்கோலமாய் ஆனதுவே
ஆசையோடு இருந்த வாழ்க்கை
அகதியாக ஆனதுவே

சின்னஞ்சிறு உள்ளங்கள் - தம்
நினைப்பு எல்லாம் கனவாக
அள்ளிக் கொண்டு போனது - தான்
அகதியாக மாற்றியது

பெட்டி எடுத்து விட்டேன்
பெருங்காடு சென்றிடுவோம்
உணவு வேண்டாம்மா
உயிர் தப்பி ஓடிடுவோம்!

கண்ணி வெடி நம்
கால்களைத் தாக்கும் முன்பே
நடந்து சென்று நாம்
காட்டுக்குள் பதுங்கிடுவோம்



ஓடி ஓடித்தான்
உள்ளங்காலும் தேய்ந்ததம்மா
வாடித் தவிக்கின்றேன்
வாரி அணைப்பாயம்மா!

**செ. நவராஜ், ஒலிமடு, நானாட்டான்.**

# கவிதைப் பூக்கள்

## சமாதானம்



புதுமலர் பொலிவாய்ப் பூத்திட
புதிய சமாதானச் செய்தி வராதா என்று
புதுவருட நாளிலே காத்திருக்கின்றோம்.
குண்டுச் சத்தம் கேட்டு குறைமாதத்தில்
சிசு ஒன்று பிறக்க .........
தவழ்கின்ற பொழுதில்
தாயைப் பிரிந்த குழந்தை அலற .......
ஓடி விளையாடும் நேரம்
பதுங்கு குழிதேடும் சிறுவன் தவிக்க ........
சிகரத்தை தொடும் துணிவு இருந்தும்
துவண்டு கிடக்கும் வாலிபன் விம்ம ........
முதியோர் புலம்ப ..........
புதுமலர் பொலிவாய் - சமாதானமே!
புதுவருட நாளிலே மலர்ந்திடு எம் மண்ணில்!

*அ. சித்திராளன் - ஆத்திக்குளி*



## ஒற்றுமை வேண்டும்



சாந்தி சமாதானம் வேண்டும்
சகவாழ்வு என்றுமே வேண்டும்
காந்தி சொன்ன வார்த்தை
கட்டாயம் நிறைவேற வேண்டும்.

அடிமை என்ற வாழ்வு
அறவே அகல வேண்டும்
இனம் என்ற வார்த்தை
இல்லாமல் போய்விட வேண்டும்
தினம் தினம் ஒற்றுமை இங்கே
தித்திப்புடன் திகழ வேண்டும்.



ஒற்றுமை என்ற சொல்லே
ஒன்றுடன் ஓங்கிட வேண்டும்.
வேற்றுமை வேருடன் விட்டகன்று
வேட்டுக்கள் ஒழியவே வேண்டும்.

## இக்காலம் மாறும் இவ்வாழ்வு



நாட்டில் மீண்டுமொரு யுத்தம்
நீண்டு வந்ததனால்
மீண்டுமொரு இடப்பெயர்வு
நீண்டு செல்கின்றன.

மர நிழலின்கீழ் பல இரவுகள்
மன அழுத்தத்திலும் பல இரவுகள்
பசி இல்லாது பல இரவுகள்
பட்டினியாகவும் பல இரவுகள்
பய நடுக்கத்திலும் பல இரவுகள்
செல்லுமிடம் தெரியாது பல இரவுகள்
செல்லடிக்கு நடுவிலும் பல இரவுகள்
உறவுகள் பிரிந்து பல இரவுகள்
உடைமைகள் இழந்து பல இரவுகள்
உதிரம் படிந்த கிழிந்த ஆடைகளுடன் பல இரவுகள்
நிம்மதி இல்லாத பல இரவுகள்
நித்திரை வராத பல இரவுகள்.
இப்படிப் பல இரவுகள்!
இனிமேல் வரவேண்டாம் இவ்விரவுகள்!
இழப்பதற்கு இனி எதுவுமில்லை எம் உயிரைத் தவிர

*செ. மேரி ஜெசில்டா - கல்மடுநகர், வட்டக்கச்சி.*

## வாழ வழி அமைத்திடு



யுத்தம் என்ற போர்க்களத்தில் சிக்கி
மூத்த உறவுகளை பிரிந்து
பெற்றோர்களை பிரிந்து தவிக்கின்றோம்
பிரிந்த உள்ளம் ஒன்றாய் சேர்ந்திட
கனவுகள் ஓட நிஜங்கள் பலிக்க
சண்டைகள் ஓய சமாதானம் நிலைக்க
எப்போது வரும் சமாதானம்
மிக விரைவாக எம்மத்தியில்
சமாதான புறாவே வட்டமிடு எம் உறவுகளுடன்
நாங்கள் முத்தமிட

ஆக்கம். G. குயின்சி சாளம்பன்

## சமாதானம்



வருக வருக சமாதானம்
இலங்கை வாழ் மக்களுக்கு சமாதானம்
சிறிய நாட்டிற்கு சமாதானம்
சிறுவராகிய எமக்கு சமாதானம்

மண்ணில் பிறந்த மனிதனுக்கு சமாதானம்
மனு உரு எடுத்த யேசுவின் சமாதானம்
வறுமையில் பிறந்த மனிதனுக்கு சமாதானம்
வாடிடும் மக்களுக்கு சமாதானம்

போர் முழக்கங்கள் நீங்கிட சமாதானம்
எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்ந்திட சமாதானம்
சின்னஞ் சிறுவர்களாகிய எங்களுக்கு
வருக வருக சமாதானம்

வ. சுறேக்கா - மணற்குளம், உயிலங்குளம்.



# உலகத் திருச்சபைச் செய்திகள்

## கிறிஸ்தவர்களுக்கெதிராக நடந்த கொடுமைகள் இனிமேலும் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்

### பன்னாட்டுத் தூதர்கள் மத்தியில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் உரை

கிறிஸ்தவர்களுகெதிராக இந்தியா ஈராக் போன்ற நாடுகளில் சென்ற ஆண்டில் நடந்த சகிப்பற்றதன்மை, கொடுமைகள் ஆகியன இனி நடக்காமல் இருக்கவும், சேதங்களுக்கு - சிறப்பாக, வழிபாட்டுத்தலங்கள் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு ஈடு கிடைக்கவும், எல்லா மதங்களும் உரிய மரியாதைபெற இயன்ற ஒவ்வொரு வகையிலும் ஆதரவு கொடுக்கவும், உலகின் எல்லா சமூக மற்றும் அரசியல் தலைவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள். திருப்பீடத்தோடு உறவுகொண்டுள்ள நாடுகளின் தூதர்களுக்கு ஜனவரி 8ம் தேதி ஆற்றிய வழக்கமான ஆண்டுத் தொடக்க உரையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அமைதியைக் கட்டி எழுப்பவும் ஏழ்மையைக் களையும் முயற்சியிலும் மதங்கள் ஆற்றக்கூடிய மிக உயர்ந்த பங்களிப்பை சுட்டிக்காட்டியதோடு, மதத்தொடர்புடைய ஒருதலைப்பட்சத்தால் பாதிக்கப் - பட்டுள்ளோருக்குத் தந்தைக்குரிய தன் பாசத்தையும் வெளிப்படுத்தினார்.

உலகின் அனைத்து நாடுகளையும் பிரதிபலிக்கும் இச்சபையின்முன் மீண்டும் கூறுகிறேன், "கிறிஸ்தவ மதம் சுதந்திரம் சமாதானம் இவற்றின் மதம். மனிதகுலம் நன்மைபெறச் சேவையில் ஈடுபட்டுள்ள மதம்" என்று திருத்தந்தை குறிப்பிட்டார்.

இந்தியா, ஆப்கானிஸ்தான், பாக்கிஸ்தானில் நடந்தேறிய பயங்கரவாதத் தாக்குதல்களை, ஸ்ரீலங்கா இன்னும் வேறு ஆசிய நாடுகளில் தொடர்ந்து அரங்கேறும் போர், பரிசுத்த பூமியில் கட்டவிழ்க்கப்பட்டுள்ள வன்முறை இவற்றை - யெல்லாம் தன் வருடாந்த உரையில் திருத்தந்தை நினைவுகூர்ந்தார்.

நாம் ஏங்கிக்கொண்டிருக்கும் சமாதானம், நம் நல்முயற்சிகளையும் தாண்டி வெகு தொலைவில் இருப்பதாய்த் தெரிகிறது. எனினும் நாம் ஒருபோதும் அவநம்பிக்கை கொள்ளவோ, சமாதான வாழ்வுக்கலை முயற்சிகளில் தொய்வு கொள்ளவோ கூடாது. மாறாக மக்களின் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்திற்குமான நம் செயற்பாடுகளை இரட்டிப்பாக்க வேண்டும் என்று திருத்தந்தை கூறினார். மியான்மார், சீனா, வியெட்னாம் போன்ற நாடுகள் இயற்கைச் சீற்றத்தால் அடைந்த அழிவுகளையும் அவர் மறக்கவில்லை.

ஆயுதக்குறைப்பு, அணு ஆயுதங்கள் பரவாமை இவற்றில் வெற்றிகாணா நிலையில், மனித மற்றும் பண வளங்கள் மனித மேம்பாட்டுக்கு, சிறப்பாக. மிக ஏழையான மக்களின் மேம்பாட்டிற்கு. மறுக்கப்பட்டு ஆயுதக்குவிப்புக்குத் தீனியாகும்போது, சமாதானம் எனும் கட்டடம் எவ்வாறு எழும்பி வருமெனத் திருப்பீடம் கூறியுள்ளதை மீண்டும் கூறுகிறேன் என்றார் அவர்.

இவ்வாண்டின் உலக சமாதான தினத்துக்கான விருதுவாக்கான, "ஏழ்மைக்கெதிராய்ப் போராடி சமாதானத்தைக் கட்டி எழுப்பு" என்பதைச் சுட்டிக்காட்டி, நிறையச் செய்ய, நிறையத் தெரிந்துகொள்ள நிறையச் சம்பாதிக்க எல்லோரும் இன்று முயல்கிறோம். எனினும் இத்தகைய நியாயமான விருப்பங்களை எவ்வகையிலும் நிறைவேற்ற இயலாத நிலையில் பலர் தொடர்ந்து இருக்கிறார்கள். உலகளாவிய பொருளாதார நெருக்கடியில் உழலும் குடும்பங்கள் எத்தனை எத்தனையோ! பணக்கார நாடுகளிலும் ஏழைகள் அதிகரித்து வருகிறார்கள். சமாதானத்தைக்கட்டி எழுப்ப வேண்டுமாயின் ஏழைகளுக்கு நாம் புது நம்பிக்கை தரவேண்டு - மென்றார் திருத்தந்தை.

> **உலகின் அனைத்து நாடுகளையும் பிரதிபலிக்கும் இச்சபையின்முன் மீண்டும் கூறுகிறேன் "கிறிஸ்தவ மதம் சுதந்திரம் சமாதானம் இவற்றின் மதம். மனிதகுலம் நன்மைபெறச் சேவையில் ஈடுபட்டுள்ள மதம்" என்று திருத்தந்தை குறிப்பிட்டார்.**

கவனிப்பாரில்லா நோயுற்றோர், வயோதிபர் மற்றும் குலைந்த குடும்பங்கள்மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் இளையோர் வளர்ப்பில் தனி அக்கறை காட்டி உண்மையான சகோதரத்துவத்துக்கு நாமே எடுத்துக்காட்டாய் விளங்கவேண்டும் என்றும் கூறினார்.

ஏழ்மையை எதிர்கொண்டு சமாதானம் என்னும் கட்டடத்தை உருவாக்க சகோதரத்து - வத்தில் ஒன்றுபடுவோம் என்று அறைகூவல் விடுத்துத் தன் உரையை திருத்தந்தை அவர்கள் நிறைவுசெய்தார்.

## சீனாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன!

கிறிஸ்மஸ் நெருங்கி வரவர, சீன அதிகாரிகள் திருத்தந்தைக்கு விசுவாசமாக இருக்கும் கிறிஸ்தவர்களுக்கெதிரான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டதாக ஆசிய செய்தி நிறுவனம் கூறியது. கிறிஸ்தவர்களின் செப அறைகளை மூர்க்கத்தனமாகத் தாக்கியும், கிறிஸ்தவர்களை அடித்தும் அச்சுறுத்தியும் வந்தார்களெனவும் அச்செய்தி நிறுவனம் கூறியது.

மக்களின் பொருளாதார உரிமைகளைப் பாதுகாக்க முயற்சிப்போர், இன்னும் அது குறித்து புகார்கள் எழுத முனைவோர் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது, சிறையில் இருப்பவர்கள் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர் என்றும் அச்செய்தி நிறுவனம் தெரிவித்தது.

## மக்கள் தன்னலத்திலேயே இன்னும் உழன்றுகொண்டிருந்தால் உலகம் சிதைந்துவிடும்

### – திருத்தந்தை எச்சரிக்கை –

மக்கள் தன்னலத்திலேயே இன்னும் உழன்றுகொண்டிருந்தால் உலகம் சிதைந்துவிடும் என்று கிறிஸ்து பிறப்புவிழா செய்தி மூலம் உலகை எச்சரித்துள்ளார் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் ஊர்பி எத் ஓர்பி (உரோம்) நகருக்கும் உலகுக்கும் எனும் வருடாந்தச் செய்தியில் புனித பேதுரு பசிலிக்கா பெரு வளாகத்தில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமாகக் கூடியிருந்த மக்களுக்கு நண்பகல் வேளையில் அவர் உரைநிகழ்த்தினார்.

கிறிஸ்து பிறப்பின் ஒளி இருளைப்போக்கி நம் வாழ்வின் பொருள் மற்றும் மதிப்பீடுகள் என்ன என்பதை உணரவைக்கின்றது. மனித உருவில் சீசர் அகஸ்துஸ் ஆட்சியில் பெத்லகேமில் நமக்காக இறையருள் ஒளிரத் தோன்றிய அவர் நம்மை மீட்பவர் என்னும் பொருள்கொண்ட இயேசு என்ற பெயர் தாங்கி வருகிறார். எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்குமான இச்செய்தி நம்பிக்கை தரும் செய்தி, உலகத் தீமையிலிருந்து மீட்டு நன்மைக்கு இட்டுச் செல்லக்கூடியது இது ஒன்றே என்பதை உணரவைத்து மக்கள் மனங்களை மாற்றி சமாதானத்தின் சோலைகளாக்கும் இறை அருளின் சக்தியை அறியவைக்கும் செய்தி என்றார் அவர். இவ்வொளி புனித பூமி, லெபனான், ஈராக், மத்திய கிழக்கு நாடுகள், ஜிம்பாப்வே, காங்கோ, சூடான் சோமாலியா நாடுகளின் கிவு, டார்பூர் மற்றும் எங்கெல்லாம் குழந்தைகள் துன்புறுகிறார்களோ அங்கெல்லாம் எதிர்காலத்தை நம்பிக்கையுள்ளதாக்க வேண்டும் என்றார் திருத்தந்தை.

அன்பை நமக்குக் காட்ட, அமைதிக்கு வழிகாட்ட இயேசு அழைக்கிறார். அவரின் ஒளி நம் கவலைகளையும் அச்சத்தையும் போக்குவதாக எனக்கூறி தமிழ், இந்தி, மலையாளம், சிங்களம், வங்காளி, உருது உள்ளிட்ட 64 மொழிகளில் இனிய கிறிஸ்மஸ்தின நல்வாழ்த்துக்களை எல்லோருக்கும் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் கிறிஸ்து பிறப்பு நடுச்சாம திருப்பலியைப் புனித பேதுரு பசிலிக்காவில் நிறைவேற்றி மறையுறை நிகழ்த்தினார். எல்லாம் படைத்த இறைவனே வீடற்ற ஏழையாக நம் அன்பைக்கேட்டு நம்மைத்தேடி இறங்கிவந்துள்ளார். எனவே பெற்றோர் அன்பு புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளை இவ்விரவு நினைத்துப் பார்ப்போம். குடும்பம் வீடு எனும் பாக்கியம் இல்லாமல் தெருவில் திரியும் சிறுவர், பிஞ்சுவயதிலேயே ஆயுதம் தாங்கக் கட்டாயப்படுத்தப்படுவோர், ஒப்புரவுக்கும் சமாதானத்திற்கும் கருவியாகாமல் வன்முறைக்குக் கருவியாவோர், பாலியல் அடிமைத்தனத்திற்கு ஆளாவோர், கொடுமைகளுக்கு இலக்காவோர், உள்ளத்தின் ஆழ்கிடங்கில் ஆறா வடுக்களைச் சுமக்கும் சிறுவர்கள் போன்றோரை இன்று மனதில் கொள்வோம் என்றார்

## கருணைச் சாவை ஆதரிப்பதைத் திருத்தந்தை கண்டிக்கிறார்

அப்பாவி உயிர்களைக் கொல்வது எப்போதுமே குற்றம் எனத் திருத்தந்தை லக்சம்பர்க் நாட்டின் தூதரிடம் தெரிவித்தார். அவர் திருத்தந்தையைச் சந்திக்க வந்தபோதே திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

லக்சம்பர்க் நாட்டின் திருப்பீடத்துக்கான அரசுத் தூதர் கடந்த டிசம்பர் மாதம் 18ம் திகதி திருத்தந்தையைச் சந்தித்து அவர் தூதுவராக நியமனம் பெற்றதற்கான சான்றிதழ்களைச் சமர்ப்பித்தார். தற்போது லக்சம்பரக் பாராளு மன்றம் கருணைச் சாவை அனுமதிக்கும் சட்டத்தை அமுல்படுத்த உள்ளது 31 ஓட்டுக்கள் கருணைச் சாவுக்கு ஆதரவாகவும், 26 எதிர்ப்புத் தெரிவித்தும் விழுந்துள்ளன. சட்டம் தோல்வியுறுவதற்கு இன்னும் வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிகிறது. முன்னரே ஐரோப்பாவில் பெல்ஜியமும், நெதர்லாந்தும் கருணைச் சாவை அனுமதித்துச் சட்டம் இயற்றியுள்ளன. லக்சம்பர்க் நாட்டின் திருப்பீடத்துக்கான தூதர் பால் தூ திருத்தந்தையைச் சந்தித்தபோது, கருணைச் சாவை அனுமதிப்பதையும் தற்கொலைக்குத் துணையான சட்டங்களை இயற்றுவதையும் திருத்தந்தை கண்டித்தார். இது நன்னெறிக் கோட்பாடுகளுக்கு எதிரானது. இது உண்மையான அன்புக்கும் இரக்கத்துக்கும் எதிரானது என்றார் திருத்தந்தை. எனினும், சாவின் வேதனையின் தவிக்கும் ஒருவருக்கு நாம் துணையாகவும் ஆறுதலாகவும் இருக்கவேண்டும். மானிட வாழ்வின் இறுதி வேளையில் பாசம் காட்டி அருகிலிருப்பது குடும்பத்தில் கூட்டுப் பொறுப்புணர்வுக்கும் துணையாக இருக்கும் எனவும் திருத்தந்தை மேலும் தெரிவித்தார்.

## இந்துத் தீவிரவாதிகள் தாக்கியதில் மறைபோதகர் கொல்லப்பட்டார்

20 பேர் கொண்ட தீவிரவாதக் கும்பல் தாக்கியதில் 40 வயதுடைய யுவராஜ் டிகால் என்ற மறைபோதகர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்நிகழ்ச்சி கடந்த டிசம்பரில் நடந்துள்ளது. அவரும் அவர் மகனும் மோட்டார் சைக்கிளில் வந்தபோது நிறுத்தித் தாக்கப்பட்டதில் அவர் இறந்துவிட்டார் என தப்பித்துக்கொண்ட 20 வயதுடைய அவருடைய மகன் பித்யாதர் கூறியுள்ளார்.

இந்தியாவின் காந்தமால் மாவட்டத்தைச் சேர்ந்த யுவராஜ் டிகால் நல்ல மறை போதகர் என்றும் உள்ளூர் கிறித்தவக் குழுவின் தலைவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர் - களுக்கு எதிரான வன்முறையில் இதுவரை 500க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப் - பட்டுள்ளார்கள்.

## 2008 ஆம் ஆண்டு அதிக இயற்கைப் பேரிடர்கள்

உலகம் - குறிப்பாக ஆசியா, 2008ம் ஆண்டில் இயற்கைப் பேரிடர்களால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று உலகின் மிகப் பெரிய ஆயுள்காப்பு நிறுவனங்களில் ஒன்றான மியூனிக் ரே அறிவித்துள்ளது.

சென்ற ஆண்டில் ஆசியா இயற்கைப் பேரிடர்களால் அதிகம் பாதிக்கப்பட்டதாகவும் மியான்மாரில் ஏற்பட்ட நர்கீஸ் கடும் புயலில் 1,30,000பேர் இறந்தனர் எனவும் மியூனிக் ரே கூறியது.

2008ம் ஆண்டில் இயற்கைப் பேரிடர்களால் உலகில் ஏறத்தாழ 20,000 கோடி டொலர் இழப்பு ஏற்பட்டது என்றுரைக்கும் அந்நிறுவனம், இது 2007ம் ஆண்டைவிட ஏறத்தாழ ஐம்பது விழுக்காடு அதிகம் என்றும் கூறியது.

## கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு இறையியல் உரையாடல் அவசியம்

### கிறிஸ்தவ ஒன்றிப்பு அவையின் ஆண்டுக் கூட்டத்தில் திருத்தந்தை

முழுமையான கிறிஸ்தவ ஒன்றிப்பை மீண்டும் ஏற்படுத்துவதற்கு இறையியல் உரையாடல் அவசியம் என்று திருப்பீட கிறிஸ்தவ ஒன்றிப்பு அவை நடத்திய ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களிடம் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார். என்பது பிரதிநிதிகளை வத்திக்கானின் கிளமெண்ட்டைன் அறையில் சந்தித்து உரையாற்றிய அவர், "கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடலை வரவேற்பதும் அதன் எதிர் காலமும்" என்ற தலைப்பில் தன் சிந்தனைகளை வழங்கினார்.

நாம் எதிர்நோக்கும் முழு கிறிஸ்தவ ஒன்றிப்பை மீண்டும் ஏற்படுத்துவதற்கு இறையியல் உரையாடல் அவசியம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்ற அவர் எனவே இது ஊக்குவிக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என்றார். இவ்வுரையாடலில் மேய்ப்பர்கள் மட்டுமன்றி இறைமக்கள் அனைவரும் ஈடுபடுமாறு அவர் வலியுறுத்தினார்.

## பொறுப்புணர்ச்சியே சுதந்திரத்தின் வெளிப்பாடு

### பிரான்ஸ் நாட்டிலுள்ள தேஸே கிறிஸ்தவ ஒன்றிப்புக் குழுவின் தலைவர்

ஒருவரின் ஒருங்கிணைந்த ஆளுமையை நெறிப்படுத்துவதற்குள்ள கூறுகளைத் தேர்ந்தெடுப்பதற்கான பொறுப்பு உண்மையான சுதந்திரத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டும் என்று பிரான்ஸ் நாட்டிலுள்ள தேஸே கிறிஸ்தவ ஒன்றிப்புக் குழுவின் தலைவர் அருட்சகோதரர் அலாய் லாசர் கூறியுள்ளார்.

2009ஆம் ஆண்டுக்கென அவர் எழுதியுள்ள கடிதத்தில், சோர்வு மற்றும் கைவிடப்பட்ட நிலையில் வாழ்வின் ஊற்று எங்கிருக்கிறது என்று பலர் கேள்வி எழுப்புகின்றனர், இறைவனின் பெயர்கூட புரிந்துகொள்ளா நிலையிலும், ஏன் முழுவதும் மறந்த நிலையிலும் இருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இறைவனின் பிரசன்னத்தை உணர மிகுந்த கவனமுடன் இருப்பதன் மூலம் வாழ்வின் ஊற்றைக் கண்டுபிடிப்பதற்கானத் தடங்கல்களைத் தவிர்க்க முடியும் என்றும் அருட்சகோதரர் அலாய் லாசர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நாம் யார் என்பதும், நாம் யார் இல்லை என்பதும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும், நாம் அன்புகூர அழைக்கப்பட்டுள்ளோம், எதற்கும் காத்திராமல் நற்காரியங்களைச் செய்வோம் என்றும் இவரின் செய்தி கூறுகிறது.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### நாம் பாடும் தாலாட்டு!

ஆராரோ... ஆரிரரோ.. ஆரிவர் ஆராரோ
மரியின் பாலா தூங்கு
மழலை நீ தேவா தூங்கு
இதமான தாலாட்டு நான் பாட நீ கேட்டு
இனிதாகவே நீயும் தூங்கு!

தேர்போன்ற தமிழீழம் சிதைகின்ற போதினிலே
இனிதாகவே நீயும் தூங்கு
தேன் நிலவாய் இருந்த இனம்
தேய்பிறையாய் மாறிவர
இனிதாகவே நீயும் தூங்கு!



தெருவெல்லாம் பலிப்பீடம்
தினம் மக்கள் அவலக்கோலம்
இனிதாகவே நீயும் தூங்கு
ஒளியில்லை விளியில்லை
உயிருக்கும் விலையில்லை
இனிதாகவே நீயும் தூங்கு!

தமிழீழ உரிமைக்காய்த்
தவிக்கின்றோம் வழியின்றி
இனிதாகவே நீயும் தூங்கு
ஓடிவரும் குருதி நதி நிறுத்திட வேறாருண்டு
இனிதாகவே நீயும் தூங்கு!



ஆயுதப்போர் ஓய்ந்திடவே
அருள்தர நீ வாராயோ?
இனியாதல் நீ எமைப் பாரு!
ஆனந்தம் பொங்கிவர
ஆசிகள் நீ தாராயோ?
இனியாதல் நீ எமைப் பாரு!!!

*'முகத்தார்' எஸ். ஜேசுறட்ணம், பிரான்ஸ்*

### கேட்டது கிடைக்குமா?

தாகம் தீர்க்க தண்ணீர் கேட்டேன்
தாய்மையற்ற சுனாமியை அல்ல.
தேகம் சுகம் பெற தென்றல் கேட்டேன்
தேசத்தை அழித்திடும் அக்கினியை அல்ல.
புற்களின்மீது பனித்துளி கேட்டேன்
உடல் உறையும் கடும்பனியை அல்ல.
தாயின் மடியில் தாலாட்டுக் கேட்டேன்
தாய் மண்ணில் குண்டுச் சத்தத்தை அல்ல.
அமைதியான அரசியல் கேட்டேன்
ஆர்ப்பாட்டமான அதிகாரத்தை அல்ல.
தமிழன் தலை தூக்க தனித்துவம் கேட்டேன்
தனத்தை அழித்திடும் சண்டையை அல்ல.
நிரந்தர சமாதான அமைதியைக் கேட்டேன்
மக்களை அழித்திடும் கிபிரை அல்ல.
அளவுடன் தானே அனைத்தும் கேட்டேன்
அவை அளவுக்கு மீறி கிடைப்பது ஏனோ?

*- எஸ். ஜெனற் அனுஷியா*
*மன் /ஆண்டாங்குளம் றோ.க.த.மா.வி.*

### கனவுகள்

யுத்தங்கள் நிறுத்தப்பட வேண்டும்
சகோதரத்துவம் பிறக்க வேண்டும்
சமாதானம் துளிர வேண்டும்
சமத்துவம் தழைக்க வேண்டும்
சன்மார்க்கம் வளர வேண்டும்
சஞ்சலம் உதிர வேண்டும்
சாதி பேதம் மறைய வேண்டும்
சர்வ மதமும் இணைய வேண்டும்
சமாதானத்திற்காக உழைக்க வேண்டும்
இன ஐக்கியம் பிறக்க வேண்டும்
எம் கனவு இதுதான் நிறைவேறுமா?

### புத்தாண்டே வருக!



தொட்ட இடமெல்லாம்
தோட்டாத் துளைகள்.
கண்பட்ட இடமெல்லாம்
கண்ணி வெடிகள்.
புத்தக அறைகளோ
இன்று புற்றறைகள்.

இப்புதிர் துடைக்க வருவாய் புத்தாண்டே!
சமயத் தலங்கள் எல்லாம்
சமாதி இல்லங்கள்.
கல்விக் கூடங்கள் எல்லாம் கல்லறைகள்.
ஊரெங்கும் பெரும் உயிரிழப்புகள்
வீட்டிற்கொரு விதவை! - இதற்கெல்லாம்
விடியல்காண விரைந்து வா புத்தாண்டே!

வண்டிலில் பயணம் செய்த
வறுமைக் குடும்பம் - இப்போ
வண்டி மட்டும் செல்கிறது
வந்த வழி எங்கும்
வானம் பார்த்த உடல்கள் - அந்தக்
கானல் நீரோடு கருகிக் கிடக்கும் காட்சி
காணவா வருகிறாய்? இல்லை இதை
புதைத்தொழிக்க புதியவனாய்ப்
புறப்பட்டு வா புத்தாண்டே!

யே. மொறின் சிந்து,
கன்னாட்டி, அடம்பன்

### அமைதியில்லை

போர் கொண்ட பூமியில் பூக்காடு காணவே
மரிமைந்தன் தோன்றினார்.
உன் பிறப்பை நாம் இனிது கொண்டாட
இப்பூமியில் வழியில்லை.



வானத்தைப் பார்க்கின்றோம்
விடிவெள்ளிக்காக அல்ல
ஒரு டசின் தடவைகள்
ஓர் நாளில் வந்துபோகும்
மிகையொலி விமானங்களை
அவதானிப்பதற்காக!

அகதி முகாம் தஞ்சம் என்று
வலியோடு முடங்கியிருக்கும் வேளை
வெள்ளம் வந்து எம்மை
வெறுமையாய் ஆக்கிவிட
உள்ளம் நொந்து உடல் நலிந்து
வள்ளத்தை நாடுகின்றோம்
வல்லமையாய்க் கரைசேர.

கடவுள் மகன் போதித்த போதனையை
யாம் உணரும்வரை
உலகமெல்லாம் அமைதியில்லை

பி. அலன்றினா றெவல்,
முள்ளிக்குளம் (தாழ்வுபாடு)

### வையகம் ஒளி பெற பாலகன் பிறந்தார்


நெல்மணி மானிடர் உயிர்தனைக் காக்கும்
நற்கருணை என்றுமே மனக்குறை போக்கும்
வல்லமை மிகுந்த வானத்தின் தூதர்
வந்தாரே வையகம் ஒளிபெற நாதர்
அல்லல்கள் பலவுமாய் இன்னல்கள் படிந்து
ஊரெல்லாம் பரவியே அழிந்திட வைத்தது
பல்வகைப் புதுமை பாரினில் செய்தநல்
பாலகன் பிறப்பு நாள்தனைத் துதிப்போம்

அல்வையூர் - கே. ஆர். திருத்துவராசா

## சிறுகதை

### ஒரு பறவையின் முறையீடு.....

சதா தமிழ்



உலகெல்லாம் ஒளிகொடுத்து ஓய்ந்து பகலவன் தன் பயணத்தை முடித்துக்கொள்ள முனைந்து - கொண்டிருந்தான். ஆடி மாதம் முழுவதும் ஆடி ஓடி அலைந்து வேலை செய்துவிட்டு மாதத்தின் இறுதியில் என்னை மறந்து சற்றுக் காலாறி ஓய்வெடுத்துக்கொண்டிருந்தேன். அது அந்திமாலை வேளை! கடல் அன்னையின் கரகோசத்தை இரசித்தபடி அவள் கரையில் பாதம் பட சற்று மெதுவாகவே நடந்துகொண்டிருந்தேன்.

அவ்வேளையில் என் இதயத்தை வருடியவை ஒன்றா இரண்டா, அப்பப்பா..... எவ்வளவு இனிமை! சொல்லிலே அடக்க முடியாத செறிவான காட்சிகள்! அலைகளின் அசைவுகளுக்கேற்ப ஆடியாடி கரைசேரும் வள்ளங்கள், நிலாவின் ஒளியில் பணியாற்றி பயன்பெற ஆழ்கடல் நோக்கி விரையும் படகுகள், அடங்கிப் போகின்ற மனிதக்கூட்டத்தின் அதிர்வலைகள், கண்கூசும் பொன் மேகங்களுக்கிடையில் உறைவிடம் நோக்கிப் பறந்துபோகும் பறவைக் கூட்டங்கள், பகலவனின் பயண இறுதியில், பொன்னாடை போர்த்தி வாழ்த்தி வழியனுப்ப நிற்கும் கடல் அன்னை....! ஆகா எத்தனை இனிமை.........! இவ்வாறு அடுக்கடுக்காக அடுக்கிக்கொண்டே போகலாம்.

இத்தனை இனிமைக்கும், சாந்திக்கும் இடையில்தான் நான் சற்றும் எதிர்பார்க்காத வகையில் எதிர்கொண்டேன் அச்சம்பவத்தை... பலருக்கு வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவங்கள் பலவிருக்கலாம். ஆனால் எனக்கு அது ஒன்றுதான் உள்ளத்தை வருடிய உண்மைக்காவியம்; அதுதான் இது.

பொன்னிற மேகங்களுக்கிடையில் புகுந்து பறந்து கொண்டிருந்த பறவைக்கூட்டத்தில் இருந்து ஒரு வெண்புறா தன் கூட்டத்தின் வழி விலகி எனை நோக்கி வந்தது. எனை நோக்கி வந்த அந்த வெண்மையின் ஒளி தாங்கமுடியாமல் இமைமூடி ஒரு நிமிடம் தடுமாறிவிட்டேன். மீண்டும் இமையகழ்ந்து விழி திறக்கையில்தான் கண்டேன் அத்தேவதையை. கலங்கியே விட்டேன். அந்நொடியில் எனைச் சற்றே சுதாகரித்துக்கொண்டு வினாக்களை வினவுமுன்னே "சாந்தி..." என்று உரைத்தாள் தன் பெயரை. சாதாரண பெண்ணான சாந்திதானோ என நான் ஊகிக்குமுன் "சாந்தி, சமாதானம், அமைதி, தேடியலையும் ஜீவன் நான்" என்று மீண்டும் உரைத்தாள். அப்போதுதான் புரிந்துகொண்டேன் அது சமாதானம் என்னும் கருவைத்தாங்கிய ஒருமைச் சொற்பதமான "சாந்தி" என்று.

எனவே மேற்கொண்டு அவள் பேசுமுன்னே நான் தொடுத்தேன் ஓர் வினாவை, "ஏன் இங்கே நீ' இவ் மூன்று வார்த்தைகள்தான் நான் தொடுத்த வினாவை முற்றுப்பெற வைத்தவை. அதற்கு அவள் அளித்த பதில் அப்பப்போ... எவ்வளவு வார்த்தைகள், எவ்வளவு மணித்துளிகள் எவ்வாறு கடந்து சென்றன என்றே எனக்குப் புரியவில்லை. ஆனால் முழு நேரமும் என்முன்னே வைத்தவை முறைப்பாடு என்பதை மட்டும் புரிந்துகொண்டேன். அவள் பேசிய வார்த்தைகள் சில... "இதமான இதயத்தை எடுத்தெறிந்துவிட்டு கல்நெஞ்சைக் கட்டிக்கொண்டு உலாவும் மனிதர்கள் மத்தியில் வாழ்வதைவிட இறப்பதே மேல் நண்பா!... அடிக்கடி என்னைப் பெயர் சொல்லி அழைத்து வேண்டும், வேண்டும் என்று உரைக்கும் ஒவ்வொரு உள்ளங்களும் நான் அருகிலிருக்கும்போது எனை அரவணைக்கத் தயங்குகின்றார்களே? எனைப் பெயர் சொல்லி அழைக்கும் ஒவ்வொரு நாவும் நான் பேசும்போது மட்டும், ஓடி அடங்கி செவிமடுக்க மறுக்கின்றனவே? சமாதானம் வேண்டும், சமாதானம், வேண்டும் என எனை அழைத்துக்கொண்டு எனக்காக அடுத்தவரோடு யுத்தம் செய்யும் நாடுகள், வீடுகள், வீதிகள், எத்தனை எத்தனை....? நான் பலவேளை தட்டிக்கேட்கும்போது "இது சமாதானத்திற்கான யுத்தம்" என என்னிடமே கூறி எனையே கொலைசெய்யத் துடிக்கும் கல் நெஞ்சங்கள் எத்தனை பேர்? "மனிதன் ஜெயிக்காத ஒரே ஒரு விஷயம் மரணம் மட்டும்தான்" இதை புரிந்துகொண்டும், ஏன் மனிதன் என்னைக் கொன்று அம்மரணத்தை அணைக்க முயல்கின்றான்.

"ஆடிய மனிதர்கள் உறங்குவதற்கு செய்த ஆடாத தொட்டில்தானே மயானம்" இதைப் புரியாமல் மனிதன் புரியும் கொடுமைகள், அக்கிரமங்கள் எத்தனை... எத்தனை... இப்போது கூட உன்னோடு இணைந்து இந்த அமைதியான இனிமையை ரசிக்கக்கூட மனம் இல்லாமல், அடுத்தவரைப் பழிவாங்கவும், பழிதீர்க்கவும் திட்டம் போடும் கூட்டங்கள் எத்தனை... எத்தனை... !

இத்தனைக்கும் மத்தியில் எவ்வாறு நான் வாழ முடியும்? எனக்காக குரல் கொடுக்கும் ஓரிரு நெஞ்சங்களும்கூட உயிரைவிட்டு இவ்வுலகை நீங்கும் அபாயம்கூட தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றது. இவ்வுலகில் நான் எங்கு செல்வேன்? எங்கே அடைக்கலம் புகுவேன்? பதில் கூறு மனிதா ... பதில் கூறு ......!

இவ்வளவுதான் அவள் பேசியது. ஆடியே போய்விட்டேன் அந்தச் சில மணித்துளியில். எவ்வளவு கொடுமைகளைத் தாங்கி உடைந்து போயிருக்கும் இவளுக்கு நான் அடைக்கலம் கொடுத்தால் என்ன? இதுதான் என் மனதில் எழுந்த கேள்வி ... கேட்டேன்.. சிந்தித்தேன்.. முடிவும் எடுத்துவிட்டேன் "சரி நீ என்னுடன் தங்கிவிடு" எனக் கைநீட்டி அழைக்க முயல .. "படார்" என ஒரு சத்தம் பதறிப்போய் விழித்தெழுந்தேன். அப்போது என் படுக்கையருகே அம்மா கவிழ்ந்து விழுந்த தேனீர் தம்ளரை தட்டி தாங்கியவாறு நின்றிருந்தாள். அப்போதுதான் புரிந்தது அதுவரை நான் கண்டது வெறும் கனவு என்று.

சடபுடவென எழுந்து என் காலைக்கடன்களை முடித்துவிட்டு பாடசாலை நோக்கி என் துவிச்சக்கர வண்டியில் புறப்பட்டேன். ஆனால் என் கனவில் சமாதானம் கொடுக்க வந்த "சாந்தி" யை என்னால் மறக்க முடியவில்லை, அவளுக்கு அடைக்கலம் கொடுக்க முடியாத எனது நிலையை நினைத்து வருந்தியது என் மனது. அது கனவாக இருந்தாலும், நடைமுறை வாழ்க்கையில் நடப்பது அதுதானே! எவ்வாறு மறக்க முடியும் அப்பறவையின் முறையீட்டை?

## துளிப்பா

கடிகாரம்
ஓய்வு இல்லாமல் உழைக்கும் ஒரே நண்பன்.

கடல்
வான் இல்லை என்றால் நிறம் இல்லை
மீனவர் எல்லோருக்கும் வாழ்க்கை கொடுக்கும்
உன்னதமான கொடை வள்ளல்.

கிளி
பிடிக்கும்போது மொழி தெரியாதவன்
வளர்ந்தபின் எம்மோடு வசனம் பேசுகின்ற
ஐந்தறிவு ஜீவன்

காதலி
நிம்மதியே இல்லாதவனுக்கு நினைவே அவள்
தன் நிழலே இல்லாதவனுக்கு நிஜமே அவள்
ஊசி குத்தி வலி தெரியாதவனுடைய
உயிரைப் பறித்ததும் அந்த விழிதான்.

*- ஜே. நித்தியா நொச்சிகுளம்,*
*உயிலங்குளம்*

அம்மா
கருவிலே எமைச் சுமந்து
தன் குருதியினால் உணவளித்து
எவ்வித எதிர்பார்ப்புகளும் இன்றி இறுதிவரை
எம் நலனுக்காய் உழைத்திடும் உத்தமி.

பூமி
பகைமை கொலைவெறி கொன்டு
வாழ்வைச் சிதறடித்தபோதும்
இன்னும் மரணங் கொள்ளா
நல்ல மனங்களுக்காய்
சுழன்றுகொண்டிருக்கும் சுழற்சி வீரன்

நண்பன்
ஒன்றாய்க் கதை படித்து
ஒற்றுமையாய்ப் பொய்யுரைத்து
துன்பமதைத் தூர விரட்டி
இன்பமதைக் கட்டியணைத்து
கடைசிவரை கைகொடுக்கும் உற்ற ஜீவன்!

*- திருமதி. றூபி. விமலதாஸ், நவாலி*

## படித்துச் சுவைத்தவை

இறைவனிடம் பலத்தைக் கேட்டேன்.
அவரோ என்னைப் பலப்படுத்த
பாடுகளை அனுமதித்தார்.

ஞானத்தைக் கேட்டேன்.
என் புத்தியை விருத்தியாக்க
பிரச்சினைகளை அனுமதித்தார்.

செல்வத்தைக் கேட்டேன்.
நான் உழைக்கத்தக்கதாக
என் கைகளைத் திடப்படுத்தினார்.

தைரியத்தைக் கேட்டேன்.
என்னில் திடமதை உண்டாக்க
ஆபத்துக்களை அனுமதித்தார்.

அன்பைக் கேட்டேன்
ஆதரவற்ற மக்களை எனக்குக் காட்டினார்.

நான் சுகத்தைக் கேட்டேன் உன் பலவீனத்தில்
என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.

நான் கேட்டது எதுவுமே எனக்குக்
கிடைக்கவில்லை!
ஆனால் அவரோ எனக்குத் தேவையான
எல்லாவற்றையும் தந்திருக்கிறார்.

*எஸ். பெனிற்றா*
*புதுவாழ்வுப் பணியாளர் - பள்ளமடு.*



## புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு
## சிறப்புக் கட்டுரை

# "நற்செய்தியை அறிவிக்காவிடில்..."

**வேதியர். ச. இதயசாமி**

### இயேசுவின் நற்செய்திப் பணியும் கட்டளையும்

ஆண்டவர் இயேசு தாம் சென்ற இடமெல்லாம், நற்செய்தியைப் பறைசாற்றினார். இறையாட்சியை நிறுவிட உழைத்தார்.

தம்முடைய சீடர்கள் தமது நற்செய்திப் பணியைத் தொடர்ந்து செய்திட வேண்டும் என்று இயேசு விரும்பினார். ஆகவே தான் தமது இறுதிக் கட்டளையில், "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என்று கூறினார். அரும் அடையாளங்களும் அற்புதங்களும் நம்பிக்கை கொண்டோரிடம் காணப்படும் என்று மொழிந்த இயேசு நம்பிக்கை கொண்டோர் அனைவரையும் "சீடராக்குங்கள்" (மத் 28:19) என்றும் தெளிவுபடக் கூறினார்.

நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார். ஏன் அவற்றை விட மேலானவற்றையும் செய்வார்கள் (யோவான் 14:12) என்றும் இயம்பினார். எனவே நற்செய்தி அறிவிப்பதும் நோய் பிணிகளை குணமாக்குவதும், அனைவரையும் சீடராக்குவதும் இயேசு தமது மறையுடலாம் திருச்சபைக்குத் தந்த கட்டளை மட்டுமன்று திருச்சபையின் தலையாயக் கடமையுமாகும்.

### திருச்சபையின் திருப்பணி

தந்தையின் விருப்பத்தைப் பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டும். அதுபோல இயேசுவின் விருப்பத்தைத் திருச்சபை நிறைவேற்ற வேண்டும் திருச்சபை என்றால் "அனைவரும் பொறுப்பேற்க" வேண்டும். திருத்தூதர்கள் காலம் தொடங்கி இயேசுவின் இரண்டாம் வருகை வரை திருச்சபை இப்பணியை ஆற்றும் கடமையைப் பெற்றிருக்கின்றது.

திருச்சபையின் தொடக்கக் காலத்தில் இயேசுவின் கட்டளையைத் திருத்தூதர்கள் தங்களது தலையாயக் கடமையாகக் கருதிச் செயற்பட்டார்கள். இக்கடமையை நிறை - வேற்றியதற்காக இயேசுவின் பெயரை முன்னிட்டு தாங்கள் அவமரியாதையாக நடத்தப்பட்டபோது மகிழ்ச்சியடைந்தார்கள். (தி. ப. 5:41)

இக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உலகின் பல்வேறு பகுதிகளுக்கும், போக்குவரத்து இல்லாத அக்காலத்தில் சிரமங்களைப் பாராது நீண்ட நெடும் பயணம் செய்தார்கள். திருத் தூதருள் ஒருவரான தோமா இந்தியாவிற்கு வருகை தந்து நற்செய்தியை அறிவித்து மறைசாட்சியாக இறந்தார். திருத்தூதர் பவுலிடம் விளங்கிய இதே ஆர்வம், அர்ப்பணம், திருச்சபையிலிருந்த அனைத்து மக்களிடமும் அன்று நிலவியது (திப 8:4).

புனித பவுல் நற்செய்திப் பணிக்காக ஆற்றிய பயணங்களும் அதன் மூலம் ஆற்றிய திருப்பணிகளும் திருச்சபையின் நற்செய்திப் பணியை மேற்கொள்ளும் அனைவருக்கும் பாடத் திட்டங்கள் ஆகும். அவை தூய ஆவியார் கற்றுத்தரும் பாடங்களாகும். நற்செய்தி அறிவிப்புப் பணியில் புனித பவுல் கடைப்பிடித்த அணுகு - முறைகள் இன்றைய நவீன கணனி யுகத்திற்கு மிகப்பெரிய சவால்களாய் உள்ளன. நற்செய்திப் பணியை நாம் தலையாயக் கடமையாகக் கருதிச் செய்ய வேண்டும் என்பதற்குத் தூய ஆவியார் தரும் சிறந்த முன்மாதிரி திருத்தூதர் பவுல் ஆவார்.

### பணிபுரியக் கற்றுக்கொண்டேன்

+2 படித்து முடித்துவிட்டு வேதியர் பயிற்சிப் பள்ளியில் 1980 ஜூன் மாதத்தில் சேர்ந்த நான் அங்கே பயில வந்த அனைவரிலும் வயதில் குறைந்தவனாக இருந்தேன். இரண்டு ஆண்டுகள் திண்டிவனம் முப்பணி நடுநிலையம் எனக்குச் சிறந்த பயிற்சியை வழங்கியது.

ஆயினும் 1982 மே மாதத்தில் பாளையங்கோட்டை மறைமாவட்டத்தில் பங்குப் பணியாற்றிய எனது முதல் அனுபவம் மிகவும் கசப்பானதாகவே அமைந்தது. ஆர்மோனியம் தெரியவில்லையென்றால் பங்கிலே வேதியரின் பணி வெற்றியாக அமையாது என்று சிலர் கூறியதால் மிகவும் சிரமப்பட்டு ஆர்மோனியம் கற்றுக் கொண்டிருந்தேன். எனது முதல் பங்கின் கிராமத்தில் நடைபெற்ற ஆலயத் திருவிழாவிற்கு வருகை தரும் ஆயர் திருப்பலியில் பாடற்குழுவில் ஆர்மோனியம் வாசிக்கப் போறோம் என்ற நினைப்பில் இருந்தேன். ஆனால் என்னிடம் நீ வாசிக்க வேண்டாம் என்றும் வேறு ஒருவர் ஆயர் திருப்பலிக்கு வாசிப்பார் என்றும் பங்குத்தந்தை சொன்னபோது எனது தலையில் இடி விழுந்தது போல் உணர்ந்தேன். அன்று எனது அறியாமையால் நான் அடைந்த வருத்தத்திற்கு அளவேயில்லை.

ஆனால் அதே (1982) செப்டம்பர் மாதத்தில் சென்னையில் பூந்தமல்லியில் தொடங்கப்பட்ட புனித பவுல் விவிலிய நிலையத்தில் திருவிவிலியம் பயிலும் வாய்ப்பு கடவுள் எனக்கு அருளிய கொடை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் இங்கு மிகவும் அனுபவமும் வயதும் நிறைந்த வேதியர்களோடு வயதில் மிகவும் குறைந்த எனக்கும் பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. அதனை நான் பெற்ற பேறு என்பேன். புத்தருக்குப் போதி மரத்தில் ஞானம் கிடைத்ததுபோல ஆர்மோனியம் மட்டுமே முதல் இடம் பிடித்திருந்த எனது வாழ்க்கையில் திருவிவிலியம்தான் ஒரு வேதியர் வாழ்க்கையில் முதல் இடம் என்ற மதிப்பீட்டைக் கற்றுத்தந்தது புனித பவுல் விவிலிய நிலையம். அன்றிலிருந்து இன்று வரை கடந்த 26 ஆண்டுகளாக நற்செய்தியும், நற்செய்திப் பணியும்தான் எனது வாழ்வில் முதலிடம் வகிக்கிறது. கடந்த 18 ஆண்டுகளாக ஒவ்வொரு மாதமும் சுமார் 3000 முதல் 5000 கிலோ மீட்டர் வரை பயணம் செய்துகொண்டே இருக்கின்றேன். மேலும் கடந்த 16 ஆண்டுகளாகத் தூய ஆவியார் எனக்குக் கற்றுத்தரும் பாடம் நற்செய்திப்பணிக்கு புனித பவுலை மேல்வரிச் சட்டமாகக் கொள்ள வேண்டும் என்பதுதான். புனித பவுலின் பயண அனுபவங்களும், பணியில் அவர் சந்தித்த இடர்களும், துன்பங்களும், எனது பயணத்திலும் பணியிலும் நாள்தோறும் புதுத்தெம்பையும் வலுவையும் ஊட்டி வருகின்றன.

### காலத்தின் குரல் புது வாழ்வு இயக்கம்

எனது நற்செய்திப் பணி அனுபவமும் புதுவாழ்வு 2000 என்ற மாபெரும் பேரியக்கத்தில் இணைந்து உழைத்த எனது நண்பர்களின் அனுபவமும் காலத்தின் குரலுக்குச் செவிமடுக்கத் துணை புரிந்தது. நாம் ஆற்றும் இந்நற்செய்திப் பணி எங்களோடு நின்றுவிடக்கூடாது; நமது தலைமுறைக்குப் பின்பும் நடைபெற வேண்டும் என்று சிந்தித்துச் செபித்ததன் விளைவே கத்தோலிக்கப் புதுவாழ்வு என்னும் இயக்கமாகும்.

இதில் இணைந்துள்ள ஆயிரக்கணக்கான செப உறுப்பினர்கள், நூற்றுக்கணக்கான நன்கொடை உறுப்பினர்கள், முழுநேரப் பணியாளர்கள், தன்னார்வப் பணியாளர்கள், பயிற்சியாளர்கள், பணிக்குழுவினர் மற்றும் அமைப்பு ரீதியாகச் செயல்படத் தல ஆயரால் அங்கீகரிக்கப்பட்ட புதுவாழ்வு நம்பிக்கை நிதியம் (ட்ரஸ்ட்) ... இவையெல்லாம் 16 ஆண்டுகள் காலப் பணியில் கடவுள் எனக்குக் கொடுத்த கொடைகள்.

நற்செய்தியின்மீதும் நற்செய்தி அறிவிப்பின்மீதும் எங்களிடம் விளங்கும் தாகமே தூய ஆவியின் புதுவாழ்வு மாத இதழாக மலர்ந்து இன்று 10,000க்கும் மேற்பட்ட குடும்பங்களை சென்று சேர்கின்றது. நாம் வாழும் இக்காலத்தில் நற்செய்திப்பணி பல்வேறு சவால்களுக்கு இலக்காகி உள்ளது. பல்வேறு சவால்களுக்குப் பதிலளிக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. நற்செய்தி பணிக்குத் தன்னை அர்ப்பணித்துள்ள துறவிகளுக்கு என்று பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன, ஆனால் நற்செய்திப் பணியாற்ற விரும்பும் பொதுநிலையினர் தன்னார்வமாகவோ, முழு நேரமாகவோ இணைந்து பணியாற்றிடவும் நாம் வாழும் நாட்டுச் சூழலுக்கு ஏற்பச் செயற்படவும் ஓர் இயக்கம் தேவையே எனத் தென்பட்டது. நாம் வாழும் இக்காலத்தில் பொதுநிலையினர் திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப் பணியில் சிறந்த விதமாகப் பங்கேற்கப் புதுவாழ்வு இயக்கம் கடவுள் தந்த அருட்கொடை ஆகும். புனித பவுலிடம் விளங்கிய நற்செய்தித் தாகமே இவ்வியக்கத்தின் உயிர் நாடியாகத் திகழ்கின்றது.

**நாம் வாழும்**
**இக்காலத்தில் உயிருடன்**
**வாழ்ந்துகொண்டிருக்கும்**
**புனித பவுல் நாம்தான்**
**என்பதை மறந்துவிடக்கூடாது.**
**மக்களுக்கு இயேசுவைக்**
**கொடுக்க வேண்டிய**
**மிகப்பெரிய கடமையை**
**தூய ஆவியார்**
**நம்மிடம் கொடுத்துள்ளார்.**




### நற்செய்திப் பணி நமது பணி

நாம் வாழும் இக்காலத்தில் உயிருடன் வாழ்ந்துகொண்டிருக்கும் புனித பவுல் நாம்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. மக்களுக்கு இயேசுவைக் கொடுக்க வேண்டிய மிகப்பெரிய கடமையை தூய ஆவியார் நம்மிடம் கொடுத்துள்ளார். புனித பவுலுக்கும், புனித அந்தோனியாருக்கும், புனித சவேரியாருக்கும் பக்தர்களாயிருப்பதைவிட இயேசுவுக்கு அவர்களைப்போல் சீடராயிப்பதே நமது முதல் கடமை. சீடன்தான் சீடனை உருவாக்க முடியும்; சீடனிடம்தான் தனது இறையாட்சியை இயேசு ஒப்படைக்க விரும்புகின்றார்.

எனவே நமது தலைவன் இயேசுவுக்காகவும் அவரின் நற்செய்திக்காகவும் நமது நேரம், திறமைகள், செல்வம் அனைத்தையும் கொடுக்கவும் இழக்கவும் முன்வருவோம். நற்செய்திப் பணி நமது பணி எனக் கண்டுணர்வோம்.

- **வேதியர். ச. இதயசாமி** கத்தோலிக்க புதுவாழ்வு இயக்கம், பாளையங்கோட்டை

---

## கிறிஸ்தவ வாழ்வை ஆழப்படுத்த
## திருத்தூதர் பவுல் சிறப்பு யூபிலி ஆண்டில் சில பரிந்துரைகள்



# திருத்தந்தையின் எதிர்பார்ப்புகள்

புனித பவுல் யூபிலி ஆண்டில் விவிலியம் கூறும் இறையியல் விழுமியங்களை உள்வாங்கிக் காலத்திற்கு ஏற்ற அருங் - குறிகளையும் கவனத்தில்கொண்டு செயல்பட வேண்டுமென்று திருத்தந்தை அழைப்பு விடுத்தார். பின்வரும் எதிர்பார்ப்புகளைச் செயல்படுத்தவும் திருத்தந்தை விரும்புகிறார்.

I). புனித பவுல் யூபிலி ஆண்டில் 1) திருவழிபாடு 2) கலாச்சாரம் 3) கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆகிய துறைகளில் செயல்திட்டத்துடன்கூடிய பல நிகழ்வுகள் நடைபெறல் வேண்டும்.

II). புனித பவுலின் ஆன்மீகத்தால் தூண்டப்பட்டு படைப்பாற்றலுடன் கூடிய 1). மேய்ப்புப் பணி சார்ந்த 2). சமூகப் பணி சார்ந்த புதிய நிகழ்வுகள் திட்டமிடல் வேண்டும்.

III). இம்மனுக்குலம் கிறிஸ்துவால் மீட்கப்பட்டது என்னும் பேருண்மைக்குத் தமது எழுத்துக்களாலும் ஆழமான கருத்துக்களாலும் அழகு சேர்த்த புனித பவுலின் கடிதங்கள் பற்றிக் கருத்தரங்குகள், மாநாடு, விவிலிய வகுப்புகள், ஆய்வுப் படிப்புகள் நடத்தப்படல் வேண்டும்.

IV) உலகெங்கும் உள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும் திருத்தலங்களிலும் வழிபாட்டுத் தலங்களிலும் துறவியர், கல்வி மற்றும் சமூக மேம்பாட்டு நிறுவனங்களிலும் பவுலின், வாழ்வு, பணி பற்றி ஆழமாகப் பயிலவும் பயிற்சிகள் தரவும் செயல்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

V) புனித பவுலின் பெயரைத் தாங்கியுள்ள கோவில்கள், நிறுவனங்கள், இயக்கங்கள், அமைப்புக்கள், துறவற சபைகள் அனைத்தும் புனித பவுலின் வாழ்வாலும் போதனைகளாலும் இன்னும் அதிகமாகவும் தூண்டப்படல் வேண்டும்.

VI) ஒவ்வொரு கிறிஸ்தவரிலும் திருச்சபையின் செயற்பாடுகளிலும் நம்பகத் தன்மையும், சான்று பகர்ந்து கனி தரும் பண்பும், வாழ்வின் அனைத்துச் சூழல்களில் கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருக்கும் தன்னார்வ அர்ப்பணிப்பும் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும்.

VII) கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையில் முழுமையான ஒற்றுமையை அனைத்துத் துறைகளிலும் உருவாக்கிடப் பவுலைப் போன்று தாழ்ச்சியும் ஈடுபாட்டுடன்கூடிய இதயத்துடிப்பும் உடையவர்களாக நாம் பங்களிப்புத் தரவேண்டும். இந்தச் சிறப்பு யூபிலி ஆண்டில் பின்வரும் செயற் திட்டங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

♦ அனைத்து மறைமாவட்டங்களிலும் இந்தச் சிறப்பு யூபிலி ஆண்டில் உருவாக்கும் புதிய பங்குகளை புனித பவுலைப் பாதுகாவலராகக் கொண்டு தொடங்கலாம். மேலும் கிறிஸ்தவர்கள் அல்லாத இடங்களில் புதிய பணித்தளங்களைப் பவுலின் பெயரில் உருவாக்கலாம்.

♦ இந்த ஆண்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு பவுல் பவுலின் பெயர் சூட்டி மகிழலாம். மறைமாவட்டங்கள் இக்குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி உற்சாகப்படுத்தலாம்.

♦ மறைமாவட்டப் பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஒவ்வொரு பணிக்குழுவும் புனித பவுலின் ஆன்மீகத்தை வளர்த்தெடுக்கத் திட்டங்கள் தீட்ட வேண்டும்.

♦ குருக்களுக்கும் துறவியருக்கும் மாதந்தோறும் நடைபெறும் ஒரு நாள் தியானக் கூட்டங்களிலும் ஆண்டுத் தியானத்திலும் புனித பவுலின் ஆன்மீகம் மையப்படுத்தப்பட வேண்டும்.

♦ பொதுநிலையினருக்குப் புனித பவுலைப் பற்றிய கருத்தரங்குகள், சிறப்புப் பயிற்சிகள், தியானங்கள் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

♦ புனித பவுலின் வாழ்வு, பணி இவற்றை அடிப்படையாகக்கொண்டு நாடகங்கள், ஒலி ஒளிக் காட்சிகள், படக் கண்காட்சிகள் ஆகியவற்றை வழங்கக் கலைக்குழுவை உருவாக்க வேண்டும்.

♦ பட்டி மன்றங்கள், வழக்காடு மன்றங்கள் போன்றவற்றை நடத்தும் கருத்தாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்கள் மூலமாகத் திருவிழாக் காலங்களில் புனித பவுல் பற்றி ஆன்மீகச் சொற்பொழிவுகள், நகைச்சுவை மற்றும் வாழ்வியல் எதார்த்தங்கள் கலந்து வழங்கப்படல் வேண்டும்.

♦ மறைமாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவர் அல்லாத பிற இனத்தவருக்கும் இயேசுவின் அன்பையும் மீட்பையும் எடுத்துரைக்கத் திட்டங்கள் உருவாக்க வேண்டும்.

- தமிழக விவிலியப் பணிக்குழு, திண்டிவனம்

# மாணவர் பக்கம்



## 2008ம் ஆண்டு நடைபெற்ற உயர்தர பரீட்சை வினாவிடை

## கிறிஸ்தவம்

2008ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் கிறிஸ்தவ பாட முதலாம் வினாத்தாளின் முதலாவது பகுதி வினாக்களும் விடைகளும் 2வது பகுதியின் சென்ற மாதத் தொடர்ச்சியான வினாக்களும் விடைகளும் இங்கு தரப்படுகின்றன.

இங்கு வழங்கப்படும் விடைகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவைப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டவையாகும். இது விடைத்தாள் பரீட்சிகர்களின் பயன்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டது. இதனை வகுப்பறைக் கற்பித்தலின் துணைச் சாதனமாகக் கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பகுதி -1

**01.** 1..1 "நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே, ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்" என்பதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது,
1. மனித தொடர்புகள் வீழ்ச்சியடைதல் 2. பௌதீகத் தொடர்புகள் வீழ்ச்சியடைதல் 3. புனிதநிலை வீழ்ச்சியடைதல்
4.இறைதொடர்பு வீழ்ச்சியடைதல் 5. ஞான நிலை வீழ்ச்சியடைதல்

1.2 ஏவாளைச் சோதிக்க வரும் சாத்தானைப் பாம்பின் உருவில் எடுத்துக்காட்டியிருப்பது,
1. பாவத்தின் இழிவான தன்மையை எடுத்துக்காட்ட
2. பாவியின் இழிவான தன்மையை எடுத்துக்காட்ட
3. கானானில் இடம்பெற்ற பாம்பு வழிபாட்டினைத் தாக்கிப் பேச
4. பாம்பானது மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் என்பதை எடுத்துக்காட்ட
5. பாம்பானது ஒரு கீழ்த்தரமான படைப்பு என்பதை எடுத்துக்காட்ட

1.3 மேகத்தின்மேல் வானவில் தோன்றும்பொழுது நாம் விளங்கிக்கொள்ள வேண்டியது,
1. படைப்பின் அழகை 2. இயற்கையின் செயற்பாட்டை
3. இறைவெளிப்பாட்டை 4. இறை மகிமையை
5. இறை பராமரிப்பை

1.4 ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை என அறிமுகம் செய்யப்படுவது,
1. இறைவனிடம் மூன்று வாக்குறுதிகளைப் பெற்றதனாலாகும்.
2. அறியாத தேசத்திற்குப் போனதனாலாகும்.
3. தனது மகனைவிட இறைவனை அன்பு செய்ததனாலாகும்.
4. அவர் நீதிமான் என இறைவன் ஏற்றுக்கொண்டதனாலாகும்
5. இவ்வுலக சுக செல்வங்களை வெறுத்ததனாலாகும்.

1.5 விடுதலைப் பயணம் என்பதன் பொருள்,
1. செங்கடலைக் கடத்தல்
2. அடிமைத்தனத்திலிருந்து விடுதலையைத் தேடிச் செல்லல்
3. சீனாய் உடன்படிக்கையுடன் தொடர்புபடுதல்
4. பாஸ்கா சடங்குகளை நிறைவேற்றுதல்
5. மோசேயின் தலைமைத்துவத்திற்குக் கீழ்ப்படிதல்

1.6 இஸ்ராயேலர் இறைமக்களாக உருவாக்கப்படல் இடம்பெற்றது,
1. கோசேன் பகுதியில் குடியேறிய பின்னர்
2. பாலைநிலத்தில் இறைபராமரிப்பைப் பெற்ற பின்னர்
3. வாக்குப்பண்ணப்பட்ட பூமியை உரிமையாக்கிக்கொண்ட பின்னர்
4. யோசுவாவின் தலைமைத்துவத்தின் பின்னர்
5. சீனாய் உடன்படிக்கையின் பின்னர்

1.7 "நாட்டை ஆட்சிசெய்ய வேண்டியது, காலத்திற்குக் காலம் மாறும் மக்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அன்றி, இறை சட்டங்களுக்கும் கொள்கைகளுக்குமேற்ப" என்பதனை மக்களுக்குக் கற்றுக்கொடுத்தோர்,
1. இறைவாக்கினர் 2. நற்செய்தியாளர் 3. ஆதிப்பிதாக்கள்
4. திருச்சபையின் தந்தையர்கள் 5. நீதிபதிகள்

1.8 இறைவாக்கினரால் காலத்திற்குக் காலம் முன்னறிவிக்கப்பட்ட மெசியா இயேசு என்பதை யூத மக்களுக்கு எடுத்துக் காட்டியவர்,
1. புனித பேதுரு 2. புனித பவுல் 3. புனித மத்தேயு
4. புனித யோவான் 5. புனித யாக்கோபு

1.9 "நீர் யார் எலியாவா? " நானல்ல" "நீர்தாம் வரவேண்டிய இறைவாக்கினரா? " இல்லை" "நீர் யார் எங்களை அனுப்பியவர்களிடம் நாங்கள் மறுமொழி சொல்லியாக வேண்டும்". இந்த உரையாடலுடன் தொடர்புடையவர்கள்
1. திருமுழுக்கு யோவானும் யூதப் பிரதிநிதிகளும்
2. திருமுழுக்கு யோவானும் தலைமைக் குருக்களும்
3. திருமுழுக்கு யோவானும் படைவீரர்களும்
4. திருமுழுக்கு யோவானும் ஆயக்காரரும்
5. திருமுழுக்கு யோவானும் பரிசேயரும்

1.10 நாங்கள் அவரைக் காதால் கேட்டோம். கண்களால் கண்டோம். கைகளால் தொட்டுணர்ந்தோம். இவ்வாறு இயேசுவைப் பற்றிய அனுபவத்தை வெளிப்படுத்தியவர்
1. புனித தோமையார் 2. புனித பிலிப் 3. புனித பேதுரு
4. புனித யோவான் 5. புனித பவுல்

1.11 வலை பற்றிய உவமையில் அறிவுறுத்தப்படுவது
1. இயேசு மீன்பிடிப்பவர்களைப் பற்றி கவனம் செலுத்தினார்
2. மீன்பிடிப்பவர்களுக்குக் கிடைக்கும் இறைபராமரிப்புப் பற்றியது
3. இயேசுவின் அப்போஸ்தலர்களில் அதிகமானோர் மீன்பிடியாளர்
4. நல்லது தீயது தீர்மானிக்கப்படுவது உலக முடிவில் என்பது
5. உலக முடிவுவரை அனைவரும் மகிழ்ச்சியாக வாழவேண்டும்

1.12 "இதைப்போல நாம் ஒருபோதும் கண்டதில்லையே" இவ்வாறு மக்கள் கூறியது,
1. குருடர்கள் இருவரைக் குணமாக்கிய சந்தர்ப்பத்தில்
2. அசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட ஊமையைக் குணமாக்கிய சந்தர்ப்பத்தில்
3. முடக்குவாதக்காரனைக் குணமாக்கிய சந்தர்ப்பத்தில்
4. முடவனைக் குணமாக்கிய சந்தர்ப்பத்தில்
5. தண்ணீரை இரசமாக மாற்றிய சந்தர்ப்பத்தில்

1.13 யூதர்கள் தமது விசுவாசத்தின் முன்மாதிரிகையாகப் பின்பற்றியவர்,
1. ஆபிரகாம் 2. யாக்கோபு 3. ஈசாக் 4. யோசேப்பு 5. மோசே

1.14 "ஆண்டவரே என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர், எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எந்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்" இவ்வாறு வினவியவர்?
1 புனித தோமஸ் 2. புனித யோவான் 3. புனித பேதுரு
4. புனித யாக்கோபு 5. புனித பெலவேந்திரர்

1.15 "ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்மேல் சுமத்தாதேயும்" என்று வேண்டியவர்?
1. இயேசு 2. புனித ஸ்தேவான் 3. நாத்தான் இறைவாக்கினர்
4. புனித பவுல் 5. புனித திருமுழுக்கு யோவான்

1.16 புனித பேதுருவின் அறிக்கையின் மூலம் நாம் விளங்கிக்கொள்ள வேண்டியது,
1. இயேசுவுடன் நெருங்கிய உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது
2.முழு வாழ்வையும் யேசுவுக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்பது
3.இறைவனுக்காக எத்தகைய பரித்தியாகத்தையும் செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டுமென்பது,
4.யேசு காட்டிய மீட்பின் பாதையில் வழிநடக்க வேண்டும் என்பது
5. தனது வாழ்வில் உண்மையாகவே இறை யேசுவை அனுபவிக்க வேண்டுமென்பது.

1.17 அப்போஸ்தலர்கள் ஆரம்பத் திருச்சபையில் திருத்தொண்டர்கள் ஏழு பேரைத் தெரிவுசெய்து கொண்டது,
1. திருச்சபையில் பொதுநிலையினருக்கு இடமளிக்க
2. திருச்சபைக்குள் பாகுபாடு இல்லை என்பதை எடுத்துக்காட்ட
3.கடவுளுடைய வார்த்தையைக் கற்பிக்க நேரத்தை ஒதுக்குவதற்காக 4. குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபட
5. இயேசுவின் கட்டளைகளை நிறைவேற்ற

1.18 ஜெருசலேம் பொதுச்சங்கத்தைக் கூட்டியது,
1. எபிரேய எலிஸ்தேய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு
2. வேற்றினத்தாருக்கு கிறிஸ்தவக் கடமைகளை விளக்குவதற்கு
3.புனித பவுலின் சேவைக்கு அதிகாரபூர்வ அனுமதி பெற்றுக் கொடுக்க
4. விருத்தசேதனம் பற்றிய தீர்மானம் எடுப்பதற்கு
5. கிறிஸ்தவர்களை யூத சாசனத்திலிருந்து பிரிப்பதற்கு

1.19 "பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதுபோல மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கைகொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்". இவ்வாறு இயேசு வெளிப்படுத்தியது,
1. பிலாத்து அரசனிடம் 2. புனித யோவானிடம்
3. நூற்றுவர் தலைவனிடம் 4. தலைமைக் குருவிடம்
5. நிக்கோதேமுவிடம்

1.20 யாயீரின் மகளை உயிர்ப்பித்த நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்படுவது,
1. இளம்பராயத்தினர் மட்டில் இயேசுவிடமிருந்த இரக்கம்
2. உயிர்கொடுக்கும் அதிகாரம் இயேசுவிடமிருந்தது
3. யாயீரின் விசுவாசத்தை முன்மாதிரிகையாகக் கொள்ள வேண்டும்.
4. இயேசு தமது சீடர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவார்
5. இயேசுவைச் சந்தித்து வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

### விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01.4 | 04.4 | 07.1 | 10.4 | 13.1 | 16.5 | 19.5 |
| 02.3 | 05.2 | 08.3 | 11.4 | 14.3 | 17.3 | 20.2 |
| 03.5 | 06.5 | 09.1 | 12.2 | 15.2 | 18.4 | |

### பகுதி II

(சென்ற மாதத் தொடர்ச்சி)

**வினா 7.** (அ.) புனித மத்தேயு குறிப்பிடும் திருமணவிருந்து தொடர்பான உவமையை வசனித்த இயேசு அதன்மூலம் முன்வைக்கும் படிப்பினைகள் ஐந்தினை 125 சொற்கள் அளவில் விவரிக்குக.

(ஆ.) நயீம் பட்டண உயிர்ப்பித்தல் நிகழ்ச்சியின் வாயிலாக இன்றைய இளம் சந்ததியினர் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் ஐந்தினை முன்வைக்குக. விடையை 20 வரிகள் அளவில் வரையறுக்குக.

**விடை(அ)** தனக்குக் கிடைக்கும் அழைத்தலுக்கு தகுந்த முறையில் பதில் அளித்தல் அவசியமாகும். இலௌகீக தேவைகளுக்காக அழைப்பைப் புறக்கணித்தல் கூடாது. அழைப்பு பலவழிகளில் கிடைக்கிறது. பலருக்கு அழைப்புக் கிடைக்கிறது. ஆனால் தெரிந்துகொள்ளப்படுவோர் சிலராகும். அழைப்பை ஏற்றுக்கொள்வோர், அதன் மேன்மைக்கு ஏற்ற நிலையில் இருத்தல் வேண்டும் அன்றேல் அதன் பிரதிபலனை அனுபவிக்க நேரிடும்.

(ஆ) இளம் சந்ததினர் இளமைக்கு உரிய புதுவாழ்வை கிறிஸ்துவிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். என்ன நிலையில் இருந்தாலும் கிறிஸ்துவைச் சந்தித்தால் புதுவாழ்வுப் பாதையில் செல்ல முடியும். இளம் சந்ததியினர் தமது பெற்றோர் மட்டில் அக்கறை கொள்ளவேண்டும். நண்பர்கள் தவறான பாதையில் செல்லும்போது அதில் கவனம் கொள்ள வேண்டும். இன்று அதிகமான இளம் சந்ததியினரிடம் ஆன்மீக வாழ்வு பற்றிய அக்கறை இல்லை. அதைப் பெற்றுக்கொள்ள முடிவது கிறிஸ்துவைச் சந்திப்பதால் மட்டுமே.

**வினா 8.** அ. தமது மறைப்பணியை ஆரம்பிக்கும்போதே சோதனைகளுக்கு முகம்கொடுத்த இயேசு மறைப்பணியை முடிப்பதற்கு முன்பாகவும் பாரிய சோதனைகளுக்கு முகம்கொடுத்தார் என்பதனை 125 சொற்கள் அளவில் விளக்குக.
ஆ. புனித லூக்கா குறிப்பிடும் எம்மாவுஸ் பயணம் தொடர்பான விளக்கத்தில் உமது வாழ்க்கைக்குக் கிடைக்கும் காலத்திற்கேற்ப வழிகாட்டுதல் என்ன? என்பதை 20 வரிகள் அளவில் எழுதுக.

**விடை** அ. இயேசு பாலைநிலத்தில் முகம் கொடுத்த பிரச்சினைகள் மூன்று. தமது பாடுகள் பற்றி அப்போஸ்தலருக்கு முன் அறிவித்தது. பேதுரு மூலம் முன்வைக்கப்பட்ட சோதனை. கெத்சமனித் தோட்டத்தில் துக்க துயரமும், மனக்கலக்கமும் அடைதல், "என் தந்தையே முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும்" என வேண்டல், சிலுவையில் இடதுபக்கக் கள்வனால் முன்வைக்கப்பட்ட சோதனை. (இத்தகைய கருத்துக்கள் இருந்தால் புள்ளிகள் 10)

ஆ. கிறிஸ்து இயேசுவை எவ்விடத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் சந்திக்க நேரலாம். அதுபற்றி நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். நமது எதிர்பார்ப்புக்கள், நாம் நினைப்பவை நினைத்தபடி நிறைவேறாதபோது மனம் தளர்ந்து பின் அடைதல் கூடாது. நம்மிடம் வருவோரை வரவேற்கும் பண்பு இருத்தல் வேண்டும். திருப்பலி வேளையில் உத்தானமான கிறிஸ்துவை அடையாளம் காண முடிவது ஒரு பேறாகும். அவ்வாறு அடையாளம் காண்பதால் ஒரு புதிய உயிருள்ள உலகு நம்மிடையே உருவாகிறது. நற்செய்தியை எடுத்துரைக்கப் பொருத்தமான நேரம், சந்தர்ப்பம் பற்றியோ, உடல் சோர்வுகளைப் பற்றியோ பாராது நற்செய்தியை எடுத்துரைத்தல். (இத்தகைய கருத்துக்கள் இருந்தால் புள்ளிகள் 10)

**வினா 9.** "பெந்தகோஸ்தே நாளில் தூய ஆவியின் வருகை" என்ற தலைப்பின் கீழ், பின்வரும் விடயங்களை அடிப்படையாக கொண்டு 250 சொற்கள் அளவில் கட்டுரை எழுதுக.
அ. தூய ஆவியின் வருகை இடம்பெற்ற விதம்
ஆ. அப்போஸ்தலர்களில் ஏற்பட்ட மாற்றம்
இ. புனித பேதுருவின் அருளுரை
ஈ. அருளுரையின் பிரதிபலன் நமக்குக் கிடைக்கும் செய்தி

**விடை** அ. ஒன்பது நாட்கள் தொடர்ந்து செபித்தல், கொடுங்காற்று வீசுவதுபோன்று ஓர் இரைச்சல், நெருப்புப் போன்ற பிளவுபட்ட நாவுகள், அவர்கள் பெற்ற சக்தியின் அடையாளம், திருத்தூதரில் ஏற்பட்ட புத்துணர்வும், உற்சாகமும்.
ஆ. அறிவாற்றலில் புத்தூக்கம் - திடம் - பேச்சுவன்மை - பற்றுணர்வு ஏற்படுதல்
இ. யோவேல் இறைவாக்கினர் முன்னறிவித்தது நிறைவேறுதல், அதாவது நாசரேத்தூர் இயேசுவின் வழியாக இறைவன் வல்ல செயல்களையும் அருஞ்செயல்களையும் செய்தல், திருச்சட்டம் அறியாதோர் யேசுவைச் சிலுவையில் அறைதல், ஆனால் இறைவன் அவரை உயிர்த்தெழச் செய்து அவர் இறைமகன் என்பதை அனைவரும் அறியச் செய்தார்.
ஈ. மக்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டுமெனத் திருத்தூதர்களைக் கேட்டல், மனமாற்றம் அடைந்து திருமுழுக்குப் பெறுதல், அவ்வாறு திருமுழுக்குப் பெற்றவர்கள் தொகை ஏறக்குறைய மூவாயிரம் பேர். நாமும் கிறிஸ்தவை உண்மையாகவே பின்பற்றுவோரா? என நம்மையே சோதித்துப் பார்த்தல். இன்று நமது பொறுப்பு கிறிஸ்து இயேசுவை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தல்
(இத்தகைய கருத்துக்கள் இருப்பின் ஒன்றுக்கு 5 வீதம் 4X 5 = 20.

**வினா 10.** பின்வரும் தலைப்புக்களில் நான்கினைத் தெரிவு செய்து ஒவ்வொரு தலைப்பிற்கும் 10 வரிகள் அளவில் குறிப்பெழுதுக அ. இயேசுவின் வேண்டல் ஆ. விவாகரத்து தொடர்பாகக் கிறிஸ்துவின் படிப்பினை இ. இறையரசின் அடையாளங்களான புதுமைகள். ஈ. இன்றைய மறைபரப்பாளருக்கு புனித பவுலின் மூலம் கிடைக்கும் முன்மாதிரிகை உ. கிறிஸ்துவைப் பின்செல்பவராவதற்குரிய தகுதி

**விடை** அ. இயேசு தமக்காகச் செபித்தல் (யோவான் 17:1-15)
தமது சீடருக்காகச் செபித்தல் (யோவான் 17:6-19)
சபைக்காகச் செபித்தல் (யோவான் 17:10-26)
ஆ. விவாகரத்து தொடர்பாகக் கிறிஸ்துவின் போதனை மத் 5: 31-32 ;27 -32 மத் 19:9 மாற் 10:11-12 லூக் 16:18 வரைபகுதிகளை விபரித்து எழுதியிருத்தல் வேண்டும்

இ. புதுமைகள் மூலம் இடம்பெற்றது யாதெனில் பாவத்தினால் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து மனிதனை மீட்டுக்கொள்வதாகும் பாவமும் பாவத்தின் விளைவுகளும் இல்லாத இடத்தில் இறை அரசு இருக்கிறது. புதுமைகள் இயற்கைச் சட்டங்களைத் தாண்டிச் செல்லும் ஒன்றாகும். அதை மனிதன் அனுபவித்து, அதில் வெளிப்படும் இறைவனின் செய்தியை அறிய வேண்டும்.

ஈ. விடா முயற்சிகொண்ட அர்ப்பணம், பணிக்காக ஆயத்தமாகுதல், தனது முன்னைய அறிவை நற்செய்தியை நன்கு புரிந்துகொள்ளப் பயன் படுத்துதல், எவ்வேளையிலும் நற்செய்தியை எடுத்துரைக்கக்கூடிய ஆற்றல், எவ்வித சவால்களுக்கும் தண்டனைகளுக்கும் முகம் கொடுக்ககூடிய ஆன்ம சக்தி கொண்டிருத்தல், எச்சந்தர்ப்பத்திலும் எதற்கும் பின்வாங்காமை, காலத்திற்கு ஏற்றவிதமாக நற்செய்தியை முன்வைத்தல், நமது மறைப்பாடசாலைகளை மேலதிக வகுப்புகள்போல் நடத்தாமல், உண்மையான மறைப்பாடசாலையாக நடத்துதல்.

உ. தன் மட்டிலோ அல்லது தனது உடன் பிறப்புக்கள், உற்றார்மீதோ அளவுமீறிய பற்றுக்கொள்ளாதிருத்தல், எவ்விதமான் தியாகத்தையும் செய்வதற்குத் தேவையான ஆன்ம சக்தி, சமுதாயத்தைத் தீய சக்திகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளக்கூடிய ஆற்றல். தீய சக்திகளுக்கு எதிராகச் செயற்படக்கூடிய ஆற்றல், இலௌகீகத்தைத் தாண்டிச் செயற்படக்கூடிய தீர்மானம், மனஸ்தாபமும் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளலும். (ஒரு பகுதிக்கு 5 வீதம் 5X4 = 20)

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்: அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam,
Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk

இயக்குனர்: அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்


## தேசிய சமாதானச் செயற்திட்டம்
## National Peace Programme

"இப்பொழுதே என் கடவுளாகிய ஆண்டவர் என் எல்லைகள் எங்கும் அமைதி நிலவும்படி செய்திருக்கிறார். எனக்கு எதிரியுமில்லை, இடையூறுமில்லை"
(1 அரசர் 5: 4)

# சமூகங்களில் விட்டுக்கொடுத்தல் உருவானால் முரண்பாடு குறைவடையும்

### மடு உதவி அரசாங்க அதிபர்

சமூகத்தில் விட்டுக்கொடுத்தல் உருவானால் முரண்பாடு குறைவடையும் என மடு உதவி அரசாங்க அதிபர் திரு. திரேஸ்குமார் கூறினார். கடந்த 16.01.2009 திகதியன்று தம்பனைக் குளத்தில் நடைபெற்ற வாழ்வுதயத்தின் தேசிய சமாதானப் பிரிவினால் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கு இடம்பெற்ற பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், விழாக்கள் இனங்களின் அடையாளத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. பொங்கல் விழா தமிழ் மக்களின் அடையாளத்தை வெளிக்கொண்டுவரும் ஒரு முக்கிய விழா. அது மட்டுமன்றி அது ஒரு நன்றி விழாவாகவும் அமைகின்றது. மனிதன் தனது உணவு உற்பத்திக்கு உதவிபுரிந்த சூரியனுக்கு நன்றியினை வெளிப்படுத்தி இவ் விழாவினைக் கொண்டாடுகின்றான். மதங்கள் பலவாயினும் இறைவன் ஒருவன்தான். நாம் ஒவ்வொருவரும் எம் உள்ளங்களில் இறைவனைப் பதித்திருக்கின்ற வடிவம்தான் வேறு. மதங்களை மதிக்கின்ற பண்பு கொண்ட ஒரே ஒரு நாடு எம் இலங்கை நாடுதான். மதம் சார்ந்த முரண்பாடுகள் இங்கு குறைவாகக் காணப்படுகின்றது என்றும் அவர் தமதுரையில் எடுத்துக்கூறினார்.

இந்நிகழ்வு தம்பனைக்குளம் பொதுநோக்கு மண்டபம் அமைந்துள்ள வளவில் நடைபெற்றது. இதில் கற்கடந்தகுளம் உதவி பங்குத்தந்தையும், கிராம சேவையாளரும், மடு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊழியர்களும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களும் வாழ்வுதயப் பணியாளர்களும், மளுவராயர் கட்டையடம்பன், இசைமாலைத் தாழ்வு கிராமிய விழிப்பூட்டல் குழு அங்கத்தினர்களும் கலந்துகொண்டனர்.



# குழந்தைப் பருவத்தை வாழ்வதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்

### மன்னார் ஆயர்

குழந்தைப் பருவத்தை வாழ்வதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என கறிற்றாஸ் வாழ்வுதயத்தின்கீழ் இயங்குகின்ற முன்பள்ளி மற்றும் தொண்டராசிரியர்களுக்கான வருட இறுதி ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இன்றைய நாட்களில் வன்னியில் மரணித்து வருபவர்களில் கணிசமானோர் சிறுவர்களே. சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மனிதன் பல்வேறு வகையில் பல்வேறு குணாதிசயங்களோடு சமுதாயத்தில் காணப்படுவதற்கு அவனுக்கு பிள்ளைப் பருவத்தில் இடப்படுகின்ற அடித்தளமே காரணமாய் அமைகின்றது.

எனவே பிள்ளைகளுக்கான அடித்தளத்தை அன்பாலும், இறைப்பற்றினாலும் உருவாக்க வேண்டும். அந்த வகையில் இந்த உன்னதமான ஆசிரியப் பணியை ஆற்றுகின்றவர்களையும் விஷேடவிதமாக இன்றைய இக்கட்டான வன்னிச் சூழ்நிலையில் மிகவும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்ற வாழ்வுதய இயக்குனருக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட மன்னார் பேராலய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி றொக்ஷன் அடிகளார் கருத்துக் கூறுகையில், கல்வியை ஒரு ஆசிரியர் மாணவருக்கு மனமுவந்து வழங்கவேண்டும். ஆசிரியர் என்பவர் ஒரு தாய். ஒவ்வொரு ஆசிரியரும் தனது மாணவர்களை உள்ளத்தில் கருத்தரித்து நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டும் என்று ஆசிரியர்களுக்கான தனது செய்தியினை வழங்கினார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட வாழ்வுதய இயக்குனர் இன்றைய நாட்களில் வன்னியிலே நாளும் ஒரு மரத்தடியில் குழந்தைகளை வைத்து கல்வியூட்டுவதும், இடம்மாறி போவதுமான அவலநிலையிலும் ஆசிரியர்கள் அர்ப்பணிப் - போடு செயற்படுவதை குறிப்பிட்டதுடன் ஏனைய பிரதேசங்களிலும் ஊதியத்தை எதிர்பாராது சமூக உருவாக்கத்தை இலக்காகக் கொண்டு செயற்படும் அனைத்து ஆசிரியர்களுக்கும் தனது நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வானது 20.12.2008 அன்று வவுனியா மாவட்டத்தில் இயங்குகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலய மண்டபத்திலும் நடைபெற்றது.

## வவுனியா மறைக்கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடலும் சமாதானக் கருத்தமர்வும்






# முருங்கன் மறைகோட்ட சமாதானக் குழுக்களின் ஒளிவிழா

பாவம் போக்கப் பாரில் மனிதனாக மண்ணில் அவதரித்த யேசுவின் பிறப்பு விழாவினை சிறப்பிக்கும் முகமாக முருங்கன் மறைக்கோட்ட சமாதானக் குழுக்களுக்கான ஒளிவிழா முருங்கன் டொன் பொஸ்கோ தொழிற்பயிற்சி நிலைய மண்டபத்தில் மிகவும் ஏழ்மையான ரீதியில் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. டெஸ்மன் அடிகளாரும் சிறப்பு விருந்தினர்களாக வாழ்வுதய தேசிய சமாதானப் பிரிவு இணைப்பாளரும், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளரும், இளைப்பாறிய முருங்கன் கிராம சேவையாளர் திருமதி. தேவதாசனும், கலைஞர் திரு. தேவதாசன் டல்மேடாவும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

சகோதரத்துவத்தை வளர்க்கும் நோக்கில் நடாத்தப்பட்ட இவ் ஒளிவிழா நிகழ்வானது பிரதேச மட்டத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும் விழாவாகவும் அமைந்தது. இந்நிகழ்வில் இடம்பெயர்ந்து வாழும் முசலிப்பிரதேச சமாதானக் குழுக்களும் கலந்துகொண்டன.

## கறிற்றாஸ் - வாழ்வுதயம் புனர்வாழ்வு புனரமைப்பின் 2009ம் ஆண்டின் ஜனவரி மாத செயற்பாடுகள்

முசலிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து நானாட்டான் பிரதேச செயலகத்தின்கீழ் தற்காலிகமாக வசித்துவரும் 859 குடும்பங்களுக்கும், மன்னார். தாழ்வுபாடு கிராமங்களில் வசித்துவரும் 93 குடும்பங்களுக்கும் உப உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு பன்னவட்டுவான், பெரியமுறிப்பு, குஞ்சுக்குளம், மாதா கிராமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 260 குடும்பங்களைச் சேர்ந்த தொழில் நெருக்கடிக்குள்ளாகியிருப்போருக்கான உப உணவுப் பொருளும் வழங்கப்பட்டுள்ளது. வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வண்ணாமோட்டை பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள 52 நபர்களுக்கு இரண்டு நாட்கள் சமைத்த உணவு வழங்கப்பட்டது.

# வாழ்வுதயத்தின் கணனிப் பயிற்சி நெறிகள்

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தில் இயங்கி வருகின்ற கணனிபிரிவினரால் வருடாந்தம் பரீட்சை எடுத்துவரும் மாணவர்களுக்கான கணனிப்பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 2008ம் ஆண்டு க. பொ. த. பரீட்சை எடுத்தவர்களுக்காக Diploma in information Communication and technlogy பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இவர்களுள் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான இலவச பயிற்சிநெறியும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலக்கியத் தடாகம்

# விவிலியமும் தமிழ் இலக்கியமும்

ஒப்பீட்டுத் தொடர் 2.

- அருள் . செல்லத்துரை

## திருவிவிலியம்

### காக்கும் கடவுள்

1. (அ) ஆண்டவரே உம்மைக் காக்கின்றார் - *திபா 121:5*
(ஆ) பகலில் கதிரவன் உம்மைத் தாக்காது
இரவில் நிலாவும் உம்மைத் தீண்டாது – *திபா 121:6*
(இ) ஆண்டவர் உம்மை எல்லாத் தீமையினின்றும்
பாதுகாப்பார் – *திபா 121:7*
(ஈ) நீர் போகும்போதும் உள்ளே வரும்போதும் இப்போதும்
எப்போதும் ஆண்டவர் உம்மைக் காத்தருள்வார் –
*திபா 121:8*

2. (அ) 1. ஆண்டவரை நோக்கி, “நீரே என் புகலிடம்: என்
அரண்: நான் நம்பியிருக்கும் இறைவன்’ என்று
உரைப்பார் – *திபா 91:2*
2. ஒடுக்கப்படுவோருக்கு ஆண்டவரே அடைக்கலம்
நெருக்கடியான வேளைகளில் புகலிடம் அவரே.
– *திபா 9:9*
3. உம்மிடம் அடைக்கலம் புகுவோரை அவர்களுடைய
எதிரிகளிடமிருந்து உமது வலக்கரத்தால் விடுவிப்பவர்
நீரே – *திபா 17:7*
(ஆ) 1. கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார்
– *திபா 46:1*
2. இறைவா, என்னைக் காத்தருளும்: உம்மிடம் நான்
அடைக்கலம் புகுந்துள்ளேன். – *திபா 16:1, 31:1*
(இ) ஆண்டவரே என் கற்பாறை: என் கோட்டை: என் மீட்பர்:
என் இறைவன்: நான் புகலிடம் தேடும் மலை அவரே:
என் கேடயம்: எனக்கு மீட்பளிக்கும் வல்லமை, என்
அரண் - திபா 18:2 – (காண் *திபா 62:2, 18:3)*

3. அ) அனைத்து மக்களே செவிகொடுங்கள். உதரத்திலிருந்தே
உங்களைத் தாங்குபவர் நான். கருவிலிருந்தே
உங்களைச் சுமப்பவர் நான் - *எசா 46:3*
(ஆ) 1. மலைகளில் புல்லை முளைக்கச் செய்கின்றார்.
கால்நடைகளுக்கும் கரையும் காக்கை குஞ்சுகளுக்கும்
அவர் இரை கொடுக்கின்றார் – *திபா 147: 8, 9*
2. வானத்துப் பறவைகளை நோக்குங்கள்: அவை
விதைப்பதுமில்லை: அறுப்பதுமில்லை: களஞ்சியத்தில்
சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை
அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றைவிட
நீங்கள் மேலானவர்கள் அல்லவா! – *மத் 6:26,*
*லூக் 12:24.*
(இ) எதை உண்போம், எதைக்குடிப்போம்? எதை அணிவோம்
எனக் கவலை கொள்ளாதீர்கள். உங்களுக்கு இவை
யாவும் தேவை என உங்கள் விண்ணகத் தந்தைக்குத்
தெரியும்.- *மத் 6:31-33: லூக் 12:29-31.*
(ஈ) உயிரினங்கள் எண்ணிறந்தன....................
இவையெல்லாம் உம்மையே நம்பியிருக்கின்றன.
நீர் கொடுக்க, அவை சேகரித்துக்கொள்கின்றன.
நீர் உமது கையைத் திறக்க, அவை நலன்களால்
நிறைவுறுகின்றன. – *திபா 104: 25-28*

4. (அ) 1. நானே உன் கடவுளாகிய ஆண்டவர்: உன்
வலக்கையைப் பற்றிப் பிடித்து ‘அஞ்சாதே, உனக்குத்
துணையாய் இருப்பேன்’ என்று உன்னிடம் சொல்பவரும்
நானே – *எசா 41:13*
2. நிலவுலகம் நிலைகுலைந்தாலும் மலைகள் ஆழ்கடலில்
அதிர்ந்து நடுங்கினாலும், கடலின் அலைகள்
கொந்தளித்துப் பொங்கினாலும் அவற்றின் பெருக்கால்
குன்றுகள் அதிர்ந்து நடுங்கினாலும் எங்களுக்கு
அச்சமென்பதே இல்லை. – *திபா 46:2, 3*
(ஆ) இரவின் திகிலுக்கும் பகலில் பாய்ந்து வரும் அம்புக்கும்
நீர் அஞ்சமாட்டீர்.
இருளில் உலவும் கொள்ளை நோய்க்கும் நண்பகலில்
தாக்கும் கொடிய வாதைக்கும் நீர் அஞ்சமாட்டீர்.
*- திபா 91: 5, 6 - காண் எசா 43: 2,3*
(இ) நீர் தேர்ந்துகொண்ட இந்நகரையும் உமது பெயருக்கு
நான் கட்டியுள்ள இக்கோவிலையும் நோக்கி
ஆண்டவராகிய உம்மிடம் வேண்டினால் விண்ணிலிருந்து
நீர் அவர்களுடைய வேண்டுதலுக்கும்
விண்ணப்பத்திற்கும் செவிசாய்த்து அவர்களுக்கு நீதி
வழங்குவீராக - *1 அர. 8: 44, 45*

*இடப்பக்கங்களில் விவிலிய மேற்கோள்கள் வரிசை எண்ணிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்பக்கங்களில் அவற்றிற்குப் பொருத்தமான தமிழ் இலக்கிய மேற்கோள்கள் அதே வரிசை எண்களில் நேருக்கு நேர் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஒன்றுக்குப் பல பொருத்தங்கள் அமைவதையும் காணலாம்.*

*இப்பகுதி ஆய்வாளர்களுக்கும் மறை உரை ஆற்றும் குருக்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் இன்னும் விவிலியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் ஆர்வம் உள்ள அனைவருக்கும் பயன்படும். - பதிப்பாசிரியர்*

## தமிழ் இலக்கியம்

### காக்கும் கடவுள்

1. (அ) 1. என்னைக் காக்கும் தலைவன் நீ - *திருஅருட்பா 2138*
2. காக்கும் தொழிலால் அருள்புரிந்த கருணைக் கடலே
– *திருஅருட்பா 463*
3. காக்கும் எம் காவலனே – *திருவாசகம் 1: 78*
4. காப்போன் காக்கும் கடவுள் - *திருவாசகம் 3:14*
(ஆ) 1. இரவும் பகலும் என்னைக் காத்து உள் இருக்கும்
இறைவனே - *திருஅருட்பா 5047*
2. கங்குலிலே வருந்திய என் வருத்தம் எலாம்
தவிர்த்தே காலையிலே என் உளத்தே
கிடைத்தபெருங் களிப்பே - *திருஅருட்பா 4095*
(இ) சற்றும் வருந்தப் பாராது என்னைத் தாங்கும்
நேயனே – *திருஅருட்பா 5048*
(ஈ) உண்டாய உலகுயிர்கள் தம்மைக் காக்க
ஒளிந்திருந்து அவ்வுயிர் வினைகள் ஒருங்கே நாளும்
கண்டாயே – *திருஅருட்பா 96*

02. (அ) 1. தருதுயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரண்
இல்லை. - *பெருமாள் திருமொழி*
2. இறைவன் அவன் தாள் சரண் நாங்களன்றே
*- குண்டலகேசி 1*
3. தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே
*- கம்பராமாயணம்: கடவுள் வாழ்த்து*
4. அருளார் அமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம் - *திருஅருட்பா 32*
(ஆ) 1. அண்ணலே நின் அடிக்கு அபயம் - *திருஅருட்பா 625*
2. இருமையிற் பயனும் நின்திரு அருளே என்று நின்
அடைக்கலம் ஆனேன் - *திருஅருட்பா 627*
3. அழுக்கு மனத்து அடியேன் உடையாய் உன்
அடைக்கலமே - *திருவாசகம் 24: 1, 412*
(இ) இலங்கும் அரமிய அணையுமாய்
நின்னடிக் கழல்சுகம் நிகருமே. – *திருஅருட்பா 2429*
(அரமிய அணை - கோட்டை, அரண்)

3. (அ) 1.கருவிடத்தே எனைக்காத்த காவலனே *-திருஅருட். 3808*
2. கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற்று அமுதளிக்கும் மெய்யன்
*- அதியமான்: தனிப்பாடல் திரட்டு .*
3. அன்னை வயிற்றில் அருத்தி வளர்த்தவன்தான்
இன்னும் வளர்க்கானோ?
– *வள்ளியம்மை: தனிப்பாடல் திரட்டு*
4. கருவில் தோன்றும் எங்கள் உயிர்காக்க நினைத்த
கருணையினார் - *திருஅருட்பா 1595*
(ஆ) 1. அத்திமுதல் எறும்பு ஈறான உயிர் அத்தனைக்கும் சித்தம்
மகிழ்ந்தளிக்கும் தேசிகா – *பட்டினத்தார் : சித்தர்பாடல*
2. பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும்
ஓர் எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி
இருப்பதுபோல். - *மனோன்மணீயம்: கடவுள் வாழ்த்து*
(இ) 1. கல் தவளை தனக்கும் உணவளிக்கும் உன்றன்
கருணைநிலை தனை அறியேன்.- திருஅருட்பா 2151
2. கண் நுழையாக் காட்டில் கருங்கல் தவளைக்கும்
உண்ணும்படி அறிந்து ஊட்டும் அவர் – நண்ணும்
நமக்கும் படி அளப்பார் - *கபிலர் : தனிப்பாடல் திரட்டு*
3. எவ்வுயிரும் காக்க ஓர் ஈசன் உண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யான் ஒருவன் அல்லனோ?
*- திருவள்ளுவர்: தனிப்பாடல் திரட்டு*
(ஈ) வான்வளர்த்தாய் இந்த மண்வளர்த்தாய் எங்கும்
மன்னுயிர்கள் தான் வளர்த்தாய் நின் தகை அறியா
என்றனை அரசே. - *திருஅருட்பா 2334*

04. (அ) 1. அச்சம் தீர்த்த நின் அருட்பெருங் கடலில் திளைத்தும்
தேக்கியும் பருகியும் உருகேன் - *திருவாசகம் 23:10*
2. இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்று எழுதி
விட்ட சிவனும் செத்து விட்டானோ - முட்டமுட்டப் பஞ்சமே
ஆனாலும் நீ - *ஔவையார்: தனிப்பாடல் திரட்டு*
3. எனை அழைத்து மகனே நீ இவ்வுலகிற் சிறிதும் கரவிடை
நெஞ்சு அயர்ந்து இளைத்துக் கலங்காதே...எனத்திருவாய்
மலர்ந்த...அரசே.’ *திருஅருட்பா 3064*
(ஆ) 1. அஞ்சாதே மகனே என்று அளித்தனை-*திருஅருட்பா 3069*
2. அச்சம் தீர்த்திங்கு என்னை ஆட்கொண்டு அருளும்
அமுதனே - *திருஅருட்பா 5045*
3. பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோடு இறப்பும்
அஞ்சேன்
4. வாளுலாம் எரியும் அஞ்சேன் வரைபுண் டிடினும் அஞ்சேன்
5. தறிசெறு களிறும் அஞ்சேன் தழல்விழி உழுவை அஞ்சேன்
6. கோணிலா வாளி அஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்-
*திருவாசகம் 35: 5-10*
(வாளி - அம்பு) வாளுலாம் எரி - ஒளி வீசுகின்ற நெருப்பு)
(இ) எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைந்தால்
அங்கே வந்து என்னொடும் உடனாகி உடனாகி நின்று அருள்
*- சுந்தரர் தேவாரம்*

## வரலாற்றுப் பதிவுகள்

# அலையலையாய் நுரைத்தள்ளும் ஆழ்கடலும் அதில் அள்ள அள்ளக் குறையாத மீன்வளமும்

- மக்கள் காதர் -



பல்லாண்டு காலமாக மன்னார் கரையோரப் பகுதிகளில் வெளியூர் மீனவர்கள் அதிகமதிகம் குடும்பத்துடன் வந்து வாடி - யமைத்து முகாமிட்டு பல கோடி ரூபாய் பெருமதியான மீன் வளத்தை அள்ளிச் சென்றனர். இவர்கள் நீர்கொழும்பு, ஜாயெல, சிலாபம், வெண்ணப்பூவ ஆகிய இடங்களிலிருந்து இங்கு வந்து வருடம் முழுவதும் முகாமிட்டு பல தொன் கணக்கில் மீன்வளங்களையும் கடல் உணவுகளையும் கடற்சங்குகளையும் வலம்புரிச் சங்குகளையும் அள்ளிச் சென்றனர். இன்று அவர்கள் சகாப்தம் முடிந்துவிட்டது. வடக்கில் நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தால் 1990க்கு பின்னர் எவருமே மன்னார் வருவதில்லை. ஆயினும் அவர்கள் இப்போது ஆழ்கடல் ஓடி பெருமளவு மீன்களைப் பிடித்து வருகின்றனர்.

மன்னார்க் கடலில் பவளப் பாறைகள் ஒரு வீதமே உள்ளன. ஆனால் மீன் வளத்தில் இருப்பது 5 வீதம் ஆகும். உலகின் கடல்களில் நான்கு இடங்களிலேயே பவளப்பாறைகள் உள்ளன. இதில் ஓர் இடம்தான் மன்னார் வளைகுடா ஆகும். உலகில் அதிக மீன்கள் விளையும் இடங்களின் மன்னார் வளைகுடா முதன்மையானது. இது மன்னார் மக்களுக்கு கிடைத்துள்ள மாபெரும் செல்வம் ஆகும். சுமார் நான்காயிரம் மீன் வகைகள் இங்கு தங்கி இனப்பெருக்கம் செய்கின்றன. இங்கு அதிகமாக விளைவனவற்றில் கடற்குதிரைகள், கடல் ஆமைகள், கடல் பன்றிகள், சுறா மீன்கள், கணவாய், இறால், நண்டு என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

100 ஆண்டுகளுக்கு முன்னர் மன்னார், முத்துச்சிலாபம், முத்தரிப்புத்துறை ஆகிய கிராமங்களிலுள்ள ஆழ்கடலில் பெறப்பட்ட அரிய முத்துக்களை வெளிநாட்டவர்கள் இங்கு வந்து வாங்கிச் சென்றனர். அரேபியர், பாரசீகர், சீனர் போன்ற கடல் ஓடிகள் இவைகளைப் பெற்று அதிக இலாபம் சம்பாதித்தனர். பிரித்தானியர் எம்மை ஆண்டபோது இலங்கையில் முத்துக் குளித்தல் தடைசெய்யப்பட்டதால் இவ்வாணிபம் நின்றுபோனது. இங்கு பெறப்பட்ட பெறுமதிமிக்க முத்துக்கள் பல எகிப்தியப் பேரரசி கிளியோபத்திராவை அலங்கரித்ததாக வரலாறு உண்டு. அம்முத்துக்கள் இன்னும் பிரித்தானிய தொல்பொருள் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.


மன்னாரை ஒட்டிய மன்னார் வளை குடாவில் பெரும் அளவு மீன் வகைகள் வந்து பலுகிப் பெருகி உள்ளன. மிகவும் சுவையான அருக்குளா, கும்பளா, பாறை, கருங்கன்னிப்பாறை, சுறா, ஆவுலியா, கடல் தூண்கள், நண்டு, இறால், கணவாய் என்பன பெரும் அளவு விளையும் இடமாக உள்ளது.

இதை நம்பியே தென்பகுதி மீனவர்கள் இங்கு வந்து தலைமன்னார்த் துறை, பழைய பாலம், பேசாலை, வங்காலைப்பாடு, பள்ளிமுனை, வங்காலை, விடத்தல்தீவு, சிலாபத்துறை, அரிப்புதுறை, அமைப்படுகை ஆகிய இடங்களில் முகாமிட்டு பெரும் செல்வந்தர்கள் ஆனார்கள். ஆயினும் உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் நிலமை ஓர் அளவு மாறியது. அதன் பின்னர் 1990 வரையில் மன்னார் மீனவர்கள் தங்கள் தொழிலைச் செம்மையாக செய்து வந்தனர்.

போர் மேகத்தின் உச்சகட்டத்தின் விளைவாக இரவில் மீன்பிடித் தடை, பகலில் குறிப்பிட்ட தூரம் நேரம், ஆழ் கடல் செல்லத்தடை, எரிபொருள் தட்டுப்பாடு என்பனவற்றால் மன்னார் மீனவர்கள் நலிந்து போயினர். தற்போது வறுமையில் வாடுகின்றனர். முன்பு ஒரு காலத்தில் தினமும் 300 லொறிகளில் கொழும்புக்கு மீனைக் கொண்டுசென்ற மீனவர்கள் தற்போது சிறு சிறு கொள்கலன்களிலேயே கொண்டு செல்கின்றனர்.

அப்போது ஆரம்பமானதுதான் அன்னியர் ஆதிக்கம். பல்லாயிரக் கணக்கில் தமிழகக் கரையோர மீனவர்கள் அதி சக்தி வாய்ந்த டோலர் படகுகளில் மன்னார் குடா வந்து (சில வேளைகளில் தலைமன்னார் பேசாலை - பள்ளிமுனை) மன்னார் கரைகளை முற்றுகையிட்டு பல தொன் மீன் வகைகளைப் பிடித்துச் செல்கின்றனர். பகலிலும் இரவில் அதிசக்தி வாய்ந்த வெளிச்சத்திலும் இலங்கைக் கடல் எல்லைக் கடற்படை பற்றிக் கவலைப்படாமல் தந்திரமாக மீன் பிடித்துச் செல்கின்றனர். இவர்களைக் கடற்படையினர் சுற்றி வளைத்தால் கைலஞ்சம் கொடுத்து தப்பிவிடுகின்றனர். எவராவது ஒருவர் சூடுபட்டு இறந்துபோனால் தமிழ் நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெறும். அவர்களுக்கு வசதியாக எல்லைதாண்டும் மீனவர்களைச் சுடவேண்டாம் எனவும் அரசு உத்தரவிட்டுள்ளது. மொத்தத்தில் அன்றும் இன்றும் மன்னார் கரைவலை மீன் பிடியை மட்டுமே நம்பித் தங்கள் பொன்னான எதிர்காலத்தை மண்ணடித்து விட்டு அன்றாடங்காய்ச்சிகளாக வாழப் பழகிக்கொண்டனர்.

மன்னார் வளைகுடாவின் மாபெரும் செல்வங்களை இழந்து மன்னார் மீனவர்கள் இப்போது கிடைப்பதை வைத்துக் காலத்தையோட்டும் வாயில்லாப் பூச்சிகளாக வாழப் பழகிக்கொண்டனர்.



# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

**அடிப்படைவாத பெந்தக்கோஸ்தேசபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.**

தருவது தஞ்சை டோமி



## தொடர் – 18

**கேள்வி : கத்தோலிக்கர்கள் 'ஆயிரம் கோடி அற்புதர்' என்றும், 'புதுமைகள் பல புரியும் பூலோகத் தாயே' என்றும் புனிதர்களையும், மரியாவையும் புகழ்கின்றார்களே! புதுமைகள் புரிவது புனிதர்களா? இறைவனா? இறைவன்தான் புதுமை புரிகிறவர் என்றால், புனிதர்களின் புகழ்ச்சி தேவையா?**

**பதில்** : ஏற்கெனவே என் பழைய கேள்விகளும் புதிய பதில்களும் தொடரில் மரியா என்ன தெய்வமா வழிபட? என்ற கேள்விக்கான பதிலில் மரியா கடவுளல்ல. ஆனால் கடவுளின் தாய். அதனால் அவருக்கு சிறப்பான வணக்கம் செலுத்துகிறோம் என்று கூறி வத்திகான் சங்கம், திருச்சபை எண். 66, 67லிந்து குறித்துக் காட்டியுள்ளேன். ஆராதனை கடவுளுக்கு மட்டுதான். மற்ற வணக்கங்கள்தான் புனிதர்களுக்கு. இவ்வடிப்படையில் மரியா இயேசுவின் தாயும், இறைவனின் தாயுமாக இருப்பதால் திருச்சபை தனிப்பட்டதொரு சிறப்பான வணக்கத்தால் அவரைத் தக்க காரணத்துடன் பெருமைப்படுத்துகிறது என்று புனிதர்களுக்கும், மரியாவுக்கும், கடவுளுக்கும் காட்டப்படும் வழிபாட்டு முறைகளிலுள்ள வேறுபாடுகளை விளக்கியுள்ளேன்.

புனிதர்கள் புதுமை புரிவதில்லை. நடக்கும் புதுமைகள் எல்லாம் கடவுளுடைய கைவண்ணமே. புனிதர்களும், அன்னை மரியாளும் கடவுளின் அருட்கொடைகளை, புதுமைகளை நமக்குப் பெற்றுத்தரும் அருட்கருவிகளே, வாய்க்கால்களே.

கத்தோலிக்கத் திருச்சபை ஒருபோதும் புனிதர்கள் தங்கள் சொந்த வல்லமையால் குணப்படுத்தினார்கள், உயிர் கொடுத்தார்கள், பேய் ஓட்டினார்கள் என்று போதித்தது கிடையாது. மாறாக, புனிதர்கள் வழியாக என்றும் அன்னை மரியா வழியாக என்றும் அல்லது இறைவனின் இணையற்ற வல்லமையினால் இப்புனிதர்கள் அற்புதம் செய்கின்றார்கள் என்ற பொருளிலேயே திருச்சபை போதிக்கின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபை எண். 66இல் துன்பங்களில், வேதனைகளில், வியத்தகு முறையில் இறைவனின் மக்கள் மரியாவையும், புனிதர்களையும் வணங்கவும், அன்பு செய்யவும், உதவிக்கழைக்கவும் முற்படுகின்றனர் என்று கூறுகிறது. இதையே லூக்.1:48இல் அன்னை மரியா, "இந்நாள் முதல் வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல்கள் பல புரிந்துள்ளார்" என்கிறார். புனிதர்களை, அன்னை மரியாவை பக்தி முயற்சிகளில் நாம் பெருமைப்படுத்தும்போது நம் ஆண்டவர் இயேசுவையே அறிந்து, அன்பு செய்து மாட்சிமைப்படுத்துகிறோம். கொலோ. 1:15-16 இல் "அவர் கட்டளைப்படியே நடக்கின்றோம். ஏனெனில், அவருக்காகவே பொருட்கள் அனைத்தும் உள்ளன" என்றும், கொலோ. 1:19இல் "தம் முழு நிறைவையும் அவருள் குடிகொள்ளக் கடவுள் திருவுளம் கொண்டார்" என்றும் படிக்கின்றோம்.

புனிதர்களும், அன்னை மரியாவும் இறைவனிடம் விண்ணப்பிப்பவர்களாகவும் இயேசுவின் மாட்சியும் வெளிப்படக் காரணமாக உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். யோவா 2: 11 இல் "இதன் வழியாக அவர்தம் மாட்சிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீடரும் அவரிடம் நம்பிக்கை கொண்டார்கள்" என்று கானாவூர்த் திருமண நிகழ்ச்சியில் பார்க்கின்றோம்.

மாற் 16: 17-18இல் "நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அடையாளங்களைச் (புதுமைகளை) செய்வர். அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர். பாம்புகளைக் கையால் பிடிப்பர் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க அவர்கள் குணமடைவர்" என்கிறது. புதுமைகள் இயேசுவோடோ அப்போஸ்தலர்களோடோ முடிந்துவிட்ட காரியமல்ல. அது இன்றும் புனிதர்கள் வழியாகத் தொடரும் காரியம் ஆகும். திருச்சபையால் உறுதிசெய்யப்பட்ட வரலாற்று உண்மையான புதுமைகளையே விசுவாசிகள் நம்ப அழைக்கப்படுகின்றனர்.

புனித சவேரியாரின் உடல் 500 ஆண்டுகளாக அழியாமல் உள்ளது. புனித அந்தோனியாரின் கல்லறையில் அவரது நாக்கு மட்டும் அழியாமல் இருந்தது. இது குறித்து புனித பொனவெந்தூர் கூறுகையில், "இறைவனை மகிமைப்படுத்திய நாவை அழிவுறாமல் இறைவன் பாதுகாத்தார்" என்கிறார். சுருக்கமாக சொன்னால் இம்மையில் தன்னை மகிமைப்படுத்தியவர்களை இறைவன் மறுமையில் மகிமைப்படுத்துகிறார். அப்படி என்றால் புதுமைகளை புனிதர்கள் வழியாக புரிவதோடு மட்டுமல்ல தன்னுடைய அருட்கொடைகளுக்கும் மணிமகுடம் சூட்டுகிறார். கதிரவனிடமிருந்து பெற்ற ஒளியை மட்டுமே நிலவு பிரதிபலிக்க முடியும். தானாகவே ஒளி கொடுக்க முடியாது. நிலவுபோல புனிதர்களும், மரியாவும் இறைவனிடமிருந்து பெற்ற ஆற்றலையே வெளிப்படுத்துகிறார்கள். ஆகவே பிரிந்த சகோதரர்கள் நினைப்பதுபோல் கத்தோலிக்கர்கள் புனிதர்களை, மரியாவை பயன்படுத்தி இறைவனை ஆட்கொள்ளவதில்லை. இறைவன் தான் இப்புனிதர்களையும், அன்னை மரியாவையும் பயன்படுத்தி தன் மக்களை ஆட்கொள்கிறார். மனிதர்கள் இறைவனிடம் செல்ல புனிதர்களை இறைவன் கருவிகளாகவே பயன்படுத்துகிறார்.

(கேள்விகள் தொடரும்)

# பொதுநிலையினர் வாழ்வில் இறைவார்த்தை

## இறைவார்த்தை ஆண்டையொட்டிய சிந்தனைக் கட்டுரைத் தொடர் - 14

**திரு. மாட்டின் டயஸ், (பேசாலை) இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர்**

### மூன்றாவது மகிமை நிறை மறையுண்மை

பரிசுத்த ஆவி பன்னிரு சீடர்கள் மேலும் மரியாளின் மேலும் அக்கினிப் பிழம்புகளாகப் பொழியப்படுகின்றார்.

இயேசு உயிர்த்து விண்ணேற்பு அடைவதற்கு முன்புவரை இருந்த நாற்பது நாட்களில்; சீடர்களிடம், அவர்கள் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறும்வரை யெருசலேமை விட்டுப் போகவேண்டாம் என்று கேட்டிருந்தார். அவர்களோடு சேர்ந்து உண்ணும்போது அவர்களிடம், "நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம் என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள். யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார். நீங்களோ இன்னும் சில நாட்களில் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள்" (தி. ப. 01:4-5).

இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்குப் பதிலாக சீடர்கள் ஒன்றுகூடி தூய ஆவியின் திருவுளப்படி மத்தியாவைத் தெரிந்திருந்தார்கள். சீடர்களின் ஒன்றுகூடல்களில் சீடர்கள் மட்டுமல்ல மரியாளும் வேறுசில பெண்களும் இயேசுவின் சகோதர்களும் பிரசன்னமாக இருந்தார்கள் (தி. ப. 14-16).

பெந்தக்கோஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்கள் எல்லோரும் ஒரேயிடத்தில் கூடியிருந்தார்கள். திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. மேலும் நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டார்கள்.

பெந்தகோஸ்து என்பது 'தூய ஆவியின் வருகை' என்று பொருள் தராது. இது அறுவடைக்காக நன்றி செலுத்தும் யூதத் திருவிழா. நமது பொங்கல் திருவிழாப் போன்று நல்ல விளைச்சலைத் தந்த கடவுளுக்கு நன்றி சொல்லும் திருவிழா. இத்திருவிழா பாஸ்காத் திருவிழாவிற்கு ஐம்பது நாட்களுக்குப் பின்பு கொண்டாடப்படுவதனால் - ஐம்பதாவது நாள் எனப் பொருள் தரும் பெந்தக்கோஸ்தே என்று அழைக்கப்பட்டது.

பெந்தகோஸ்து திருவிழா அன்று தூய ஆவியின் பொழிவு இடம்பெற்றதால் இன்று பெந்தக்கோஸ்து திருவிழா என்பது தூய ஆவியின் வருகை என்ற புதிய சிந்தனையை நமக்குத் தந்து நிற்கின்றது.

யோர்தான் நதிக்கரையில் தூய ஆவியின் பிரசன்னம் புறா வடிவில் நமக்கு அருளப்பட்டது. சமாதானத்தின் தூதுவனாக கிறிஸ்துவை உலகிற்கு இனம் காட்ட புறாவின் வடிவில் தூய ஆவியின் வருகை இருக்கின்றது. இயேசு சமாதானத்தின் தூதுவன்தான். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த பெரிய இடைவெளியைச் சந்து செய்ய வந்து சிற்பி. அதனாற்றான் பல சந்தர்ப்பங்களில் உங்களுக்குச் சமாதானம் என்று சீடர்களை வாழ்த்தினார். இருதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் உள்ளவராகத் தம்மை இனம் காட்டினார். என் சுமை எளிது என் நுகம் இனிது என்றார்.

இங்கு அவர் அறியாமையைச் சுட்டெரிக்கும் தீயாகவும் ஞானத்தால் ஒளிருகின்ற தீபமாகவும் அப்போஸ்தலர்கள்மேல் இறங்குகின்றார். இதை நாம்; தூய ஆவியைப் பெற்றுக் கொண்டபின் அப்போஸ்தலர்களில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து கண்டுகொள்கின்றோம். கோழைகளாக ஓடி ஒளிந்து - கொண்டவர்கள், அவரை எனக்குத் தெரியாது என்று மறுதலித்தவர்கள் எல்லாம் கிறிஸ்துவின் நற்செய்தியை வீர முழக்கமிடவும் தேவை ஏற்பட்டால் தம் உயிரையும் தியாகம் செய்யவும் துணியும் அளவுக்குத் தூய ஆவியின் அக்கினி அவர்களில் சுவாலை விட்டெரிந்தது.

### இம்மறையுண்மையில் மலர்கின்ற ஏனைய சிந்தனைகள்

1. வல்லமை தரும் ஆவியைச் சீடர்கள் பெற்றுக்கொள்கின்றனர். ஏழ்மையை மகிமைப்படுத்த விரும்பிய இறைவன் தான் அவதரிப்பதற்கு மிகவும் சாதாரண குடும்பத்தைத் தெரிந்துகொண்டார். தச்சன் சூசையின் இல்லமே அவர் தெரிந்துகொண்ட வாசஸ்தலம். தனது இறையரசுப் பணி தன்னோடு பூரணத்துவம் அடையாத ஒன்று - தனக்குப் பின்பும் தொடரப்பட வேண்டிய பணி என்பதனால் பன்னிரு சீடர்களைத் தெரிந்துகொண்டார். அவர்களில் அதிகமானோர் மீனவர்கள், அன்றாடக் காய்ச்சிகள், ஆயம் தண்டுவோரும் சாதாரண வாழ்வுப் பின்னணியிலிருந்து வந்த வேறு சிலரும் இதில் அடங்குவர்.

இறையரசின் ஆன்மீகமும் தாற்பரியமும் மிகப்பெரிது. கல்விமான்களாலும் ஞானிகளாலும்கூட மிக எளிதில் விளங்கிக் கொள்ள முடியாதது. இவற்றை எல்லாம் இயேசு சாதாரண மக்களை வைத்து நிறைவேற்றினார்.

இயேசு சீடர்களோடு வாழ்ந்த அந்த மூன்று வருட வாழ்வில் "நான் போய் தேற்றுகிறவரான ஒருவரை உங்களிடம் அனுப்புவேன் எனப் பலமுறை கூறியுள்ளார். அந்த ஆவியே பிளவுற்ற தீ நாக்குகளாகச் சீடர்கள்மேல் பொழியப்பட்டது. இந்த ஆவியினால் வல்லமை அவர்களுள் பொழியப்பட்டது, ஆற்றல் பொழியப்பட்டது. தயங்கித் தயங்கி ஒளிந்து மறைந்து இருந்தவர்கள் பல்லின மக்கள்முன் துணிவோடு மட்டுமல்ல ஆற்றலோடும் பேசினார்கள். கிறிஸ்துவின் உத்தானத்திற்கும் விண்ணேற்புக்கும் தாங்களே சாட்சிகள் எனச் சூழுரைத்தார்கள். ஆவியின் வல்லமைதான் ஒவ்வொரு மொழி பேசுவோரும் தங்கள் தங்கள் மொழியிலே கேட்கும் வல்லமையை அருளியது.

ஆவி பொழியப்பட்டபின் கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள்முன் பேதுரு துணிவோடும் ஞானத்தோடும் விவேகத்தோடும் பேசுவதை திருத்தூதர் பணியில் நாம் காண்கின்றோம் (தி. ப. 14-41). அங்கு அவருடைய தலைமைத்துவமும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் திருமுழுக்குப் பெறுகின்றனர்.

சாதாரண மனிதர்களாக வலைகளோடும், படகுகளோடும், கடலோடும் உறவாடி வாழ்ந்த சீடர்கள் வல்லமை மிக்க நற்செய்தி அறிவிப்பாளர்களாகவும், ஆட்சிப்பீடத்தை அலங்கரிக்கும் தலைவர்களாகவும் அபிசேகம் பண்ணப்படுகின்றனர்.

**வேண்டுதல்:** தூய ஆவியின் அருட்கொடைகள் நலிவுற்றறோர், தாழ்த்தப்பட்டோர், புறந்தள்ளப்பட்டோர், இடம்பெயர்ந்தோர்மேல் இந்நாட்களில் பொழியப்பட வரம் வேண்டுதல்.

2. திருச்சபை ஸ்தாபிக்கப்படுதல்:-

பேதுரு (சீமோன்) தான் தெரிந்துகொண்ட இறையரசு அறிவிப்புப் பணியாளர்களின் முதல்வர் என கிறிஸ்து பலமுறை இனம் காட்டியிருக்கின்றார். யோவானின் மகன் சீமோன் நீ என்னைச் அன்புசெய்கிறாயா என மும்முறை கேட்டுத் தன் ஆட்டுக் குட்டிகளையும் ஆடுகளையும் மேய்க்கச் சொல்லி அவரைத் தலைவராக அடையாளப்படுத்தினார். பரலோகத்தின் திறவுகோலை உனக்கு அளிப்பேன். நீ யாருடைய குற்றங்களை மன்னிப்பாயோ அவை பரலோகத்திலும் மன்னிக்கப்படும். நீ யாருடைய குற்றங்களைக் கட்டிவைப்பாயோ அவை பரலோகத்திலும் கட்டிவைக்கப்படும் என அதிகார எல்லைகளையும் சுட்டிக்காட்டினார். இத்தலைமைத்துவம் கிறிஸ்து வாழ்ந்தபோதும் அவரின் விண்ணேற்பின் பின்பு சீடர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பரிசுத்த ஆவி பொழியப்பட்டதும் சீடர்கள் எல்லோரும் எழுந்து நிற்க பேதுருவே மக்கள் கூட்டத்திற்குப் பேசுகின்றார். இது தூய ஆவி அருளிய தூண்டுதல் - வல்லமை (தி.ப.2:14). அவ்வுரையே திருச்சபை தனது கொள்கை விளக்கத்தை அளித்த முதலாவது அருளுரை ஆகும். கிறிஸ்துவின் சாட்சிகளாய் கிறிஸ்துவை உலகின் கடை எல்லை வரைக்கும் எடுத்துச் செல்வோம் என்பது திருச்சபையின் இலக்கு (VISION). தூய ஆவி அங்கு பொழியப்பட்டு திருச்சபை அபிசேகம் செய்யப்படுகின்றது. அதன் முதற்தலைவர் பேதுரு.

**வேண்டுதல்:**

எமது திருச்சபையின் ஆட்சிப்பீடம் முழுவதும் ஆவியின் ஆற்றல் பொழியப்பட்டு - நவகாலச் சவால்களுக்கு முகம் கொடுக்கும் அருளைப்பெற வேண்டுதல்.

3. சீடர்களின் வழியாய்ப் பேசும் பரிசுத்த ஆவி:

கலிலேய மீனவர்கள் சீரிய மொழி பேசுகின்றனர். அரேபிய மொழியில் அளவளாவுகின்றனர். 15க்கும் மேற்பட்ட நகரங்கள் - நாடுகளிலிருந்த மக்களை அக்கூட்டத்தில் காண்கின்றோம். சாதாரண மனிதர்களுக்கு எப்படி வந்தது இந்த ஞானம்? எல்லோரும் வியந்து பேசுகின்றனர். "யூதரும் யூதம் தழுவியோரும் கிரேக்கரும் அரேபியருமான நாம், நம் மொழிகளிலே கடவுளின் மாபெரும் செயல்களை இவர்கள் பேசக் கேட்கின்றோம் என்றார்கள். எல்லோரும் மலைத்துப் போய் இதன் பொருள் என்னவென்று ஒருவரோடொருவர் கேட்டவாறு மனம் குழம்பி நின்றனர். (தி. பணி 2:11-13).

தூய ஆவி வல்லமையின் ஆவி, ஆற்றலின் ஆவி. அதனாற்றான் 3000க்கும் மேற்பட்டவர்கள் அந்த ஒரே நாளில் ஒரு மேடையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

அன்று பேசிய அதே ஆவி இன்றும் நம்மோடு பேசுகின்றார். நாளையும் பேசுவார். உலகின் கடை எல்லை வரையும் பேசுவார். கடைசி நாள் வரையும் பேசுவார். அதன் பின்பும் பேசுவார் "ஆதியில் வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை கடவுளாயும் இருந்தது." எனத் தொடங்கும் யோவான் நற்செய்தியின் முன்னுரைப் பாடல் இதற்கு ஆதாரம்.

**வேண்டுதல்:** நம்மோடு பேசுகின்ற அருள் ஆவிக்கு அமைவாக குடும்பத்திலும் சமூகத்திலும் நாட்டிலும் வாழ வரம் வேண்டல்.

4. மறைபரப்புப் பணி ஆரம்பமாகிறது

எப்போது பேதுரு அந்தப் பெரிய சனத்திரளின் முன் தம் சீடர்களோடு எழுந்து நின்று கிறிஸ்துவை உரத்த குரலில் அறிவிக்கத் தொடங்கினாரோ அப்போதே நற்செய்தி அறிவிப்புப் பணி பேதுருவைத் தலைமை ஆயனாகக் கொண்டு பரிசுத்த ஆவியின் வல்லமையால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பேதுருவின் - முதல் திருத்தந்தையின் உரையைக் கேட்ட மக்களைப் பற்றி திருத்தூதர் பணி தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது (தி.ப.2: 9-12). இதன்படி 15க்கும் மேற்பட்ட நகரங்களிலிருந்து வந்த மக்கள் இறையரசின் உரிமையாளர்களாக மாறும் அதிசயம் திருச்சபை வரலாற்றின் முதல் மைல்கல். யூத இனத்திற்கு மட்டும் மீட்பு என்ற எண்ணத் தோற்றம் மாறி மனுக்குலம் முழுவதற்கும் மீட்பு என்ற விரிந்த தத்துவம் திருச்சபை வரலாற்றின் முதல் அத்தியாயத்தின் முதலாம் பக்கத்திலேயே எழுதப்படுகின்றது.

**வேண்டுதல்:** இல்லங்கள் யாவும் இறையரசை வாழும் குட்டித் திருச்சபைகளாகவும் இறையரசை உலகிற்கு எடுத்துச் சொல்லும் ஊடகங்களாகவும் மாற வரம் வேண்டுதல்.

# பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களுக்கான தேசிய பயிற்சிப் பட்டறை - 2008

## "கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கான சவால்கள்"









"எங்கே இருவர் அல்லது மூவர் என்பெயரால் கூடியிருக் - கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் நான் இருக்கின்றேன்" இயேசுவின் இந்த அருள்வாக்கு எத்தனை ஆழமானது! எத்துணை வலிமை பொருந்தியது! ஒவ்வொரு வருடமும் இலங்கையின் பல்கலைக்கழகக் கத்தோலிக் மாணவர்களுக்கான தேசிய பயிற்சிப்பட்டறை (National Workshop for Catholic University Students) நடைபெற்று வருகின்றது. இலங்கையில் தமிழ், சிங்கள கத்தோலிக்க மாணவர்களுக்கான ஒன்றுகூடலான இதில் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் உள்ள கத்தோலிக்க மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து கலந்துகொள்ள வேண்டிய மாணவர் தொகை வரையறை செய்யப்படுகின்றது.

இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடமுண்டு. எனினும் எமது நாட்டு நிலமைகளும், சமகால கல்வி சமூகத்திற்கேயுரிய துரதிஷ்ட தன்மைகளும் இவ்வாறான செயலமர்வுகளில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கான சாதகமான சூழலை அளித்திருக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயம் தான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓர் கிளையாகவே வவுனியா வளாகம் இருப்பதனால் அதற்கும் இது விதிவிலக்கல்ல. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இதில் பங்குபற்றுவதற்கு பலமுறை எத்தனித்தபோதிலும் குழப்ப சூழ்நிலை காரணமாக இந்த நிகழ்வுகளுக்கு மட்டுமல்ல, இவ்வாறான கல்விசார் ஏனைய நிகழ்வுகளுக்கும் செல்லமுடியாத நிலைமையே ஏற்பட்டிருந்தது.

2006ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கான ஏ 9 தரைவழிப்பாதை மூடப்பட்டதன் பின்பு இந்நிலை மிகவும் மோசமாகியது. இறைவனின் அருட்கொடைகளின் மூலம் 2007ஆம் ஆண்டு கண்டி, அம்பிட்டியா, மொன்ரபானோவில் (Catholic University Students' Response to the Breakdown of Human Value At Montefano- Ampitiya, 26th – 28th Oct 2007) நடந்த செயலமர்வுக்கு எமது பல்கலைக்கழகத்திலிருந்து ஐந்து பேர் சென்றிருந்தோம். யாழ் பல்கலைக்கழக ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. ஸ்ரலின் அடிகளார் அவர்களும் வந்திருந்தார். நாம் சந்தித்த சிங்கள, தமிழ் கிறிஸ்தவ மாணவர்கள் இணைந்த முதலாவது அனுபவம் இது. இந்த நிகழ்வு எமக்குக் கொடுத்த நன்மைத்தனங்களும் உத்வேகமும் நாட்டு நிலமைகளை சவாலாக எடுத்து இம்முறையும் இச்செயலமர்வுக்குச் செல்லத்தூண்டியது.

இச்செயலமர்வானது கொழும்பு, பிலியந்தலையில் உள்ள 'சுபோதி' என்ற இடத்தில் நடைபெற்றது. "கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கான சவால்கள்" ( Challenges of Christian Leadership) என்ற தலைப்பில் கடந்த வருடம் கார்த்திகை மாதம் ஆறாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரை வண. போல் சற்குணநாயகம் (எஸ். ஜே.) தலைமையில் இது நடைபெற்றது. பெரும்பாலான பல்கலைக்கழகங்களிலிருந்தும் அந்தந்த ஆன்மீக இயக்குனர்களும் மாணவர்களும் வருகை தந்திருந்தனர். ஆறு பேர் கொண்ட குழுவாக நாமும் சென்றிருந்தோம்.

பெயரளவில் நடைபெற்ற வெறும் பயிற்சிபட்டறை அல்ல இது. ஒரு மனிதன் மனிதனாக வாழ திசைமுகம் தந்த நிகழ்வு. கிறிஸ்தவ தலைமைத்துவம் அதாவது கிறிஸ்துவின் தாழ்ச்சியான தலைமைத்துவத்தை புரியவைத்த நிகழ்வு. "உங்களுள் தலைவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்" (மாற். 11:44, மத். 20:27) என்னும் கிறிஸ்துவின் கண்ணோட்டத்திலான தலைமைத்துவத்தைப்பற்றி சிந்திக்க அழைத்த நிகழ்வு.

சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை அவர்கள் எமது பயிற்சிப்பட்டறையில் கலந்து 08ம் திகதி மாலை வேளை கிறிஸ்தவ தலைமைத்துவம் பற்றி ஆழமாக எடுத்துக்கூறினார். ஆயர் அவர்களின் வருகை எமக்கு மேலும் ஊக்கமும் உத்வேகமும் அளித்திருந்தது.

நாட்டில் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகள் போர் மேகங்கள் ஒரு புறம், ஆட்கடத்தல்கள், கொலைகள், கொள்ளைகள் மறுபுறம்! போராட்டமே வாழ்வாகி வாழ வழி தெரியாது தவிக்கின்ற மக்கள் மத்தியில் வாழும் எமக்கு இனபேதமின்றி ஒன்றுகூடி ஒவ்வொருவரின் உணர்வுகளை பகிரக் கிடைத்த சந்தர்ப்பமாக இது அமைந்திருந்தது.

பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு பீடமும் ஒவ்வொரு திணைக்களமாக நாமும் எமது படிப்பும் என இருந்த ஒவ்வொருவரும் இலங்கையில் எந்தப் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்தாலும் "கத்தோலிக்கர்" என்ற ஒரே நாமத்தில் ஒன்றாகி இருந்தோம்.

இப்பயிற்சிப்பட்டறை "கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கான சவால்கள்" என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டதனால் நல்ல தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய கிறிஸ்து இயேசு ஊழியனாக (Servant Leadership), நல்லாயனாக (Shepherd Leadership), கண்காணிப்பாளனாக (Steward Leadership) செயற்பட்டதைத் திருவிவிலிய வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு அருட்தந்தை விளக்கினார்.

இவை மட்டுமன்றி இன்றைய உலகியல் ரீதியாக நோக்குமிடத்து எவ்வகையான தலைமைத்துவங்கள் உள்ளன. Autocratic Leadership, Bureaucratic Leadership , Democratic Leadership, என்பது பற்றியும் கருத்தரங்குகள், குழுச்செயற்பாடுகள், பயிற்சிகள், விளையாட்டுக்கள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டன.

இன்றைய சூழலில் தியானம் (Meditation), மனத்தின் மீள் பரிசீலனை (Retreat) என்பன இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. மாணவர் என்ற ரீதியில் கல்வியிலும், கல்விச்செயற்பாட்டிலும் தொடர்ந்துவரும் நெருக்கடிகள், நாட்டின் நிம்மதியற்ற நிலமைகளில் வாழ்வில் விரக்தி, கல்வி கற்பதில் இடர்பாடுகள் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளின் மத்தியில் வாழ்ந்த நாம், இங்கு ஒரே குடும்பமாக காலை வேளையில் திருப்பலி பூசையில் கலந்துகொண்ட பிற்பாடு எமக்குத் தடங்கலாக உள்ள அத்தனையையும் ஒதுக்கிவிட்டு சில நிமிடங்கள் இறைவனின் குரலை மட்டும் கேட்டு தியானம் செய்ய அரிய வாய்ப்புக் கிடைத்தது.

முரண்பாடுகள் நிறைந்த இவ்வுலகில் போராட்டமே வாழ்வாகி உறவுகளை இழந்தும் பிரிந்தும் வறுமையின் கொடுமையிலும் இயற்கையின் சீற்றத்தினாலும் ஏன் நாகரீக மோகத்தினாலும்கூட தம் உள்ளார்ந்த அமைதியை இழந்தவர்கள் நம்மில் ஏராளம். எமது புலன்களை ஒருமுகப்படுத்தி சிலுவையில் தொங்கும் கிறிஸ்து யேசுவின் உன்னத முகத்தைக் கூர்ந்து நோக்கி அழிக்கப்பட்ட, புதைக்கப்பட்ட எமது உள்ளார்ந்த அமைதியைப் பெற்றுக்கொள்ள இது மிகப்பெரும் வாய்ப்பாக அமைந்திருந்தது.

எம்மை வழிநடத்திய தந்தை அவர்கள் குழுச்செயற்பாடுகள் விளையாட்டுக்கள் பலவற்றினூடாக எம்மை வழிநடத்தியமை வியப்புக்குரியது. உண்மையான தலைமைத்துவத்தை அருட் தந்தையிலேயே காண முடிந்தது என்பதை மறுத்தலாகாது.

பல்கலைக்கழகங்களில் இன்றைய கல்வி நடைமுறையில் விளையாட நேரம் ஒதுக்குதென்பது சாதாரண விடயமல்ல. இங்கு மருத்துவ பீடமென்ன, முகாமைத்துவ பீடமென்ன, கலையா? கணிதமா? அனைவரும் அன்றைய தினங்களில் விரிவுரைகள், ஒப்படைகள் (Assignments), பரீட்சைகள் எல்லாம் மறந்து உண்மையிலேயே சின்னக் குழந்தைகள்போல் துள்ளிக்குதித்து விளையாடினர். ஒவ்வொருவரின் முகத்திலும் தத்தம் சூழலுக்கேயுரிய எந்த வடுக்களும் தென்படாது, முகத்தில் புத்தொளியுடன் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

உடல் ரீதியாகவும், மனரீதியாகவும், நிறைவைப் பெற்று சந்தோசமாக இருக்க பசி, தாகம் இன்றி இருத்தலும் அவசியமாகும். இன்முகமும் ஈகையும் விருந்தோம்பலின் அடிப்படைகள். நெடுந்தொலைவிலிருந்து களைத்து வரும் தன் குழந்தையை எவ்வாறு அன்னை எதிர்கொண்டு, அன்போடு ஊட்டமளிப்பாளோ அவ்வாறே தம் குழந்தைகளைப்போல அன்போடு வரவேற்று உபசரிக்கப்பட்டோம். சுவைமிகு உணவு, பானம் ஒரே குழாமாக உண்ண இனிய வாய்ப்பு அளிக்கப்பட்டது. மேலும் தத்தம் பல்கலைக்கழக வாழ்பனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும், இரவு வேளையிலே யாவரும் இணைந்து ஆடல், பாடலூடாக மகிழ்ந்திருக்கவும் அரிய வாய்ப்புக் கிடைத்தது.

தலைமைத்துவம் சம்மந்தமாக இறையேசுவின் வார்த்தைகள் மூலமாக எடுத்தாளப்பட்டது. "மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மாற்கு 11:45, மத்தேயு 20: 28) என இயேசு தம் வார்த்தையாலேயே சான்று பகர்கின்றார்.

இயேசுவின் இத்தகைய தலைமைத்துவம் இன்றைய உலகியல் தலைமைத்துவத்திற்கும், மாணவர்கள் மத்தியில் கல்விச் சமூகங்களின் தலைமைத்துவத்திற்கும் விடுக்கும் சவாலாக இருக்கிறது. இத்தகைய இயேசுவின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி எம்மட்டத்தினரும் வாழ்வை அமைத்தால், நடைமுறை நாட்டுக் குழப்பங்கள் உட்பட அத்தனையும் நீங்கி சுபீட்சமாக வாழமுடியும். எனவே இறைகுரல் கேட்க, என்னை நான் அன்பு செய்ய, பிறருக்குப் பணியாளனாய் இருக்க, தாழ்ச்சியான தலைவராக இருந்த இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோம். இத்தகைய அரிய வாய்ப்புக்களை பயனுள்ளதாக்குவோம்.

இப்பயிற்சிப்பட்டறையின் இறுதிநாளிலே கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் நினைவுப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

இத்தகைய சிறப்புவாய்ந்த பயிற்சிப்பட்டறை பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களுக்காக ஒவ்வொரு வருடமும் சுழற்சி முறையில் நடைபெற வழிவகுத்து, நல்வழிகாட்டலுடன் கூடிய உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி எம்மை ஆன்மீக வாழ்விற்கு ஊக்கப்படுத்திய பேராதனைப் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களுக்கான ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை எகட்டன் பெரேரா (எஸ். ஜே.) அவர்களுக்கு யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்கள் சார்பில் எமது நன்றிகள் உரித்தாகுக!

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களுக்கான ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. ஸ்ரலின் அடிகளார் எமக்குத் தகுந்த வேளைகளில் ஆன்மீக ஆலோசனை வழங்கி நல்வழிப்படுத்துவதற்காக எமது நன்றிகள்! யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக கிறிஸ்தவ மாணவர்களுக்கான ஆன்மீக இயக்குனராகவும், ஆலோசகராகவும் இருக்கின்ற அருட்தந்தை எஸ். போல் ஜெயந்தன் பச்சேக் (அமதி) அடிகளார் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக!

ஒரு சிலருக்குக் கிடைக்கும் இத்தகைய வாய்ப்பு இன்னும் பலருக்கு கிடைத்து பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களுக்கு ஊக்கமளிக்கப்படவேண்டும் என்பதே எம் எதிர்பார்ப்பு.

**செல்வி. கட்ஸலா சந்தியோகு, கிறிஸ்தவ ஒன்றியம், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம்.**

## வன்னியிலிருந்து...2ம் பக். தொடர்

உங்களுக்கு என்ன வேண்டும் எனக் கேட்டபோது குடிப்பதற்கு நீரும் உண்பதற்கு உணவும் தாருங்கள் உடம்பிலுள்ள காயங்களுக்கு மருந்தும் தாருங்கள் என கதறிக்கேட்டோம். அவர்களும் எமது தாகத்தை தீர்ப்பதற்கு போதிய நீரும் உண்பதற்கு தாங்கள் சுட்ட ரொட்டி, பாண், சமைத்த உணவையும் தந்து 3 நாள் பட்டினியை ஒருவாறு அகற்றினர்.

நாம் பதுங்குகுழியில் இருக்கும்போதும் வீட்டில் இருக்கும் போதும் மரங்களுக்கு அடியில் தங்கியிருந்த போதும், எறிகணையினால் ஏற்பட்ட காயங்களையும் அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். காயங்களுக்குள்ளான 10 நாள் குழந்தை, 1 வயதுக் குழந்தை, 3 வயது குழந்தைகளை, தமது தாய்மார்கள் அணைத்துக்கொண்டு வந்தபோதும், அவர்களை சுமந்து வந்த பெற்றோரை சந்தேகத்துடன் பார்த்தனர்.

விஸ்வமடு, உடையார் கட்டு தெற்கு, பரந்தன், மாங்குளம் போன்ற முகாம்களில் கேள்விகள் பல கேட்கப்பட்டு குடும்பங்களில் உள்ளவர்களை குழந்தைகள் சிறுவர்கள் வயோதிபர், இளைஞர்கள், காயப்பட்டவர்களைத் தரம் பிரித்தனர். கடுமையாகக் காயப்பட்டவர்களுக்கு இராணுவத்தினர் முதலுதவி செய்து தமது தற்காலிக வைத்தியசாலையில் சிகிச்சை செய்தனர்.

பின்பு அவர்களை உலக உணவு ஸ்தாபன லொறிகள், அம்புலன்ஸ் வண்டிகள் போன்றவற்றில் வவுனியாவுக்கும், முல்லைத்தீவின் மாத்தளன் எனும் இடத்திலிருந்து திருகோணமலைக்கு கப்பல் மூலமாகவும் எடுத்துச் சென்றனர். இவர்களை எங்கு எடுத்துச் செல்கிறார்கள் என்பதை பெற்றோர்களாகிய எமக்கு அறிவிக்கும நிலைகூட இருக்கவில்லை.

இளைஞர்கள் யுவதிகள் பலரை விசாரணை எனும் போர்வையில் தடுத்துவைத்து குடும்பத்தில் ஏனைய உறுப்பினர்களை வாகனங்கள் மூலம் அடுத்த நாள் வவுனியாவுக்கு அனுப்பி வைத்தனர். இதனால் ஒரே குடும்பத்தில் காயப்பட்டவர்கள் பிறிதாக வேறு இடத்திற்கும், யுவதிகள் இளைஞர்கள் விசாரணைக்காக பிறிதாக வேறு ஒரு இடத்திற்கும் முதலில் வாகனத்தில் ஏற்றப்பட்ட ஒரு சிலர் ஒரு முகாமுக்கும், ஏனையோர் மறு முகாமுக்கும் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. காயப்பட்டவர்களின் துணைக்காக வந்த சிலருக்கு வாகனத்தில் இடமில்லை எனக்கூறி நோயாளர்களை வைத்தியசாலைக்கும் துணைக்கு வந்தவர்களை வேறு முகாமுக்கும் அழைத்துச் சென்றனர். இதனால் குடும்பத்தவர்கள் பலவாறு பிரிக்கப்பட்டனர். தாயுடன் வந்த சேய் பிரிக்கப்பட்டது. மனைவியுடன் வந்த கணவன் பிரிக்கப்பட்டார். வயோதிபருடன் வந்த மருமக்கள் பிரிக்கப்பட்டனர். இவர்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு முகாமுக்கும், வைத்தியசாலைக்கும் வந்த மதப் பிரதிநிதிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் இம்மக்கள் கோரியுள்ளனர்.

இருப்பினும் நாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக 60% இற்கும் மேலான இராணுவம், பொலீஸ், கடற்படையினர் எமக்கு உணவு, உடை, குடிநீர் தந்ததை நாம் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

எமது இனசனங்களுடன் தங்கலாம் என மனக்கோட்டை கட்டி பல எதிர்பார்ப்புக்களுடன் கால்நடையாக வந்த எமக்கு வவுனியாவில் பேரிடியான செய்தி காத்திருந்தது. நாம் வன்னித் தமிழர்கள் என்பதனால் அரசாங்கமும், இராணுவமும் எம்மைச் சந்தேகத்துடன் பார்த்தனர். அவர்களின் சந்தேகம் தீரும் மட்டும் நாம் திறந்த முகாம்களிலும், பாடசாலைகளிலும் பல மாதங்கள் தங்கவேண்டி வரும் என எமக்கு அறிவிக்கப்பட்டது.

சில இடங்களில் தூரத்தில் தெரியும் முட்கம்பிகளுக்கு வெளியில் வவுனியா, மன்னார், புத்தளத்தில் உள்ள உடன்பிறப்புக்கள் எம்மைப் பார்த்துக் கையசைத்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. ஒரு மாதத்தில் எமது உறவுகளைச் சந்திப்போம் என நினைத்திருந்த எமக்கு மன்னார் பகுதி முசலிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் ஒன்றரை வருட முகாம் வாழ்க்கை கண்முன்னே தெரிகிறது!

# அருளாளர் ஜோசவ் வாஸ் அடிகளாரின் மறையறிவிப்பு முறை

அருட்பணியாளர் சூ. லக்கோன்ஸ் பிகிறாடோ

## முன்னுரை

மறை அறிவிப்பு என்பது ஓர் இறைபணியாக இருக்கின்ற அதே வேளை இது ஒரு சாதாரணமான காரியமல்ல என்பது உலகறிந்த உண்மை. அதுவும் ஜோசவ்வாஸ் அடிகளாரின் மறைப்பணியை நோக்கும்போது அவர் வாழ்ந்த காலப்பகுதி, எமது நாட்டில் நிலவிய அரசியல் நிலமைகள், கத்தோலிக்கரின் நிலை, இவையனைத்துமே ஜோசவ் வாஸ் அடிகளாரின் வாழ்விலும், பணியிலும் மாற்றங்களையும், தாக்கங்களையும் ஏற்படுத்தின. ஆயினும் இறை பராமரிப்பிலே நம்பிக்கை கொண்டிருந்த இவர் தாம் மேற்கொண்ட பயணங்கள், மறை அறிவிப்பில் பயன்படுத்திய வழிமுறைகள், தூரநோக்குடனான பார்வையும் செயற்பாடுகளும் போன்றவற்றினால் இறைபணியை செவ்வனே சீராக வெற்றிகரமான முறையில் முன்னெடுத்துச் சென்றார்.

## தூரநோக்குடனான செயற்பாடு

பல வழிகளில் பணி செய்தபோதிலும் ஜோசவ் வாஸ் அடிகளார் அவரது தூர நோக்குடனான செயற்பாட்டிற்குப் பெயர் பெற்றவராகக் காணப்படுகின்றார். அவரது ஒவ்வொரு செயற்பாட்டிலும் தூரநோக்கு, இலட்சியம், எதிர்காலத் திருச்சபை என்பன துலக்கமாகத் தென்பட்டது.

தமது செயற்பாட்டை ஆரம்பிக்க முன்னர் தாம் செய்யவிருந்த பணி, பணித்தளம், அங்குள்ள ஆட்சியாளரின் மனநிலை, அங்குள்ள கத்தோலிக்கரின் நிலை, தாம் ஆரம்பிக்கின்ற பணியைத் தொடர்ந்தாற்ற வழி, அதனை நடைமுறைப்படுத்தும் திட்டம் இவையனைத்தையும் ஒரே கலவையில் போட்டு தூரநோக்குப் பார்வையிலே சிந்தித்து தெளிவடைந்தவராகத் தமது முயற்சியினைக் கட்டம் கட்டமாக ஆரம்பித்தார். தாம் ஆரம்பிக்கின்ற பணி தொடர்ந்தாற்றப்பட வேண்டும் என்பதற்காகத் தியான சம்பிரதாயக் குருக்கள் (Oratorians) சபையிலே தம்மையும் இணைத்துக்கொண்டதுடன் அதனைப் புதிய முறையிலே மீள் சீரமைத்து புத்துயிர் கொடுத்துவிட்டார். இவரது இத்தகைய செயற்பாடானது ஏறத்தாள 150 வருடங்களுக்கு மேலாக ஜோசவ் வாஸ் அடிகளாரின் மறைவுக்குப் பின்னரும் தொடர்ச்சியாகக் குருக்களை இலங்கைக்கு அனுப்ப வழிகோலியது. அன்று அவர் எடுத்த முடிவும் செயற்பாடும் பிற்கால இலங்கைத் திருச்சபையை வளர்த்துவிட்டதில் பெரும் பங்காற்றியுள்ளது. இத்தகைய செயற்பாட்டினாலேயே தியான சம்பிரதாயக் குருக்கள் சபையானது திருத்தந்தையாலும், போர்த்துக்கல் அரசனாலும் அங்கீகாரம் பெற்றது!

போர்த்துகேயக் குருக்கள் தமது நாட்டிலிருந்த (திருச்சபை) கத்தோலிக்க மதத்தினை அப்படியே இங்கு நட்டு வைத்தனர். (Transplanted) ஆனால் ஜோசவ் வாஸ் அடிகளார் இங்கே வந்ததும் எமது நாட்டு மக்களின் நடைமுறை, கலாச்சார நிலைக்கேற்ப மண்வாசனையுடன் கூடிய பண்பாட்டு (Inculturation) முறையில் 1687ம் ஆண்டிலேயே கத்தோலிக்க மதத்தினை மீள் ஒழுங்குபடுத்தினார். 1696ல் கொச்சின் (Cochin) மறைமாவட்ட ஆயர், சபை முதல்வர் ஆகியோரிடமிருந்து வந்த கடிதங்கள் முறையே அவரை இலங்கையின் குரு முதல்வராகவும் (Vicar General of Ceylon), தமது சபைக்குருக்களுக்கு முதல்வராகவும் (Superior) நியமனம் அளித்தனால் இங்குள்ள நிலமைகளுக்கு ஏற்றவாறு சுயமான முடிவுகளுடன் பணியினை முன்னெடுப்புச் செய்வதற்கும் மாற்றியமைப்பதற்கும் சக்தி கொடுத்ததுடன் உறுதுணையாகவும் நின்றது.

தமது தாய்மொழிக்கு அப்பாற்பட்டவர்களுக்கே தமது பணி தேவையென்பதால் சுதேச மொழிகளைத் தாம் முயற்சியெடுத்துக் கற்றுக்கொண்டது மட்டுமன்றி சக குருக்களுக்கும் கற்றுக்கொடுத்தார். குறிப்பாகத் தமக்குக் கீழே பணிபுரிந்து கொண்டிருந்த யாக்கோமே கொன்சால்வேஸ் (Gonsalvez) அடிகளாரை மொழி பயிலவும் அதில் தேர்ச்சி பெறவும் அதன் விளைவாக சுதேச மொழிகளிலே செபங்கள், தியானங்கள் எழுதும்படியும் பணித்ததுடன் உற்சாகமும் உந்து சக்தியும் கொடுத்து வளர்த்துவிட்டார். இவ்வாறான செயற்பாடானது அவரது தாழ்ச்சியையும், அடுத்தவரை ஊக்கப்படுத்தி வளர்த்துவிடுகின்ற பண்பினையும் எடுத்துக்கூறுகின்ற அதேவேளை கொன்சால்வேஸ் அடிகளாரின் எழுத்தாக்கங்கள் அன்று மட்டுமல்ல பிற்பட்ட காலங்களிலும் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டதுடன் ஏனைய இலக்கிய எழுத்தாக்கங்களுடன் போட்டி போடக்கூடிய ஒன்றாகவும் அமைந்திருந்தது. அத்தோடு 1700ம் ஆண்டுகளில் தொடக்கத்தில் தமிழிலும், சிங்களத்திலும் கத்தோலிக்க மறை சார்ந்த நூல்கள் எம்மிடம் உண்டு என்று கத்தோலிக்கர் பெருமையுடன் தலைநிமிர்ந்து சொல்லுமளவுக்கு பெரும் உதவியாக இருந்தது.

தமது பணியின்போது தமது இலக்கினை மட்டுமன்று எங்கெல்லாம் கத்தோலிக்கர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் தாமாகச் சென்று தரிசித்து ஊக்கமூட்டி விசுவாசத்திலும், ஆன்மீகத்திலும் உறுதியளித்து அங்கங்கே மூப்பர்களையும் நியமித்துவிட்டார். காரணம் தமது பிரசன்னம் இல்லாதபோது இம்மூப்பர்களே குருக்களுக்குப் பதிலாக முன்னின்று ஞாயிறு, திருநாட்களில் மக்களை ஒன்றுகூட்டி பூசைத்தியானங்கள் வாசிப்பதும் தியானிப்பதுமான பணிகளில் ஈடுபட்டனர். ஆகவே குருக்கள் குறைவாக இருந்த அந்தக் காலத்தில் குருக்களின் பிரசன்னம் அடிக்கடி இல்லாதபோதும்கூட மக்கள் ஓர் கட்டுக்கோப்பான வாழ்க்கை வாழ இம்மூப்பர்கள் உதவிபுரிந்தனர்.

மொத்தத்தில் இத்தகைய முன்மதியுடன் எதிர்காலத் தேவைகளையுணர்ந்து அன்றே செயற்பட்டதனால் அச்செயற்பாடுகளின் பிரதிபலிப்பானது இன்னும் காணப்படுகின்றது. இதனால் இவர் ஒவ்வொரு குருவுக்கும் ஒரு முன்மாதிரிகையாக உள்ளார்.

## தாழ்மையான பண்பு

ஆரம்ப காலத்திலிருந்தே ஜோசவ்வாஸ் அடிகளாரிடம் காணப்பட்ட மேலான பண்புகளில் இதுவும் ஒன்று. “தான் நல்லதென நினைப்பதைவிட கடவுள் எதனை, எப்படி, எங்கே செய்ய வேண்டுமெனக் குறிப்பிடுகின்றாரோ அதனைச் செய்வதே சிறந்தது என்பதற்கிணங்கத் தமது குருத்துவ அழைப்பிற்குள்ளே தமது பணி எங்கே, யாருக்குத் தேவைப்படுகின்றது என்ற இன்னுமோர் இறை அழைப்புக்கு செவிசாய்த்ததுடன் அதற்கு முற்றிலும் தாழ்மையாகப் பதில் கொடுத்தார். இலங்கைக்குச் செல்லும் நோக்குடனிருந்தபோது கோவா (Goa) பட்டணத்துக்கு வருகை தந்த சந்நியாசிமார் (Friars) போர்த்துக்கேய மொழியிலிருந்து சுதேச மொழிக்கு மொழிமாற்றம் செய்யக்கூடிய குருவானவரைத்தேடியபோது பல குருக்களுக்கு மேலாளராக பணிபுரிந்தாலும் இதுவும் ஒரு இறை பணியென மிகத் தாழ்மையான மனதுடன் மொழிபெயர்ப்புப் பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டார்.

தான் எவ்வாறுதான் படித்திருந்தாலும் அடுத்தவரை, தமக்குக் கீழே பணியாற்றுபவர்களை ஊக்கப்படுத்தி முன்னேற்றுமளவுக்குத் தாழ்மையான பண்பு கொண்டிருந்தார். இதன் வெளிப்பாடாகவே தமக்குக்கீழ் பணிபுரிந்த யாக்கோமே கொண்சால்வேஸ் (Jacome Gonsalvez) அடிகளாரை இலங்கையின் சுதேச மொழிகளைப் பயின்று அவற்றிலே எழுத்தாக்கம் புரியும்படி உற்சாகப்படுத்தி துணை நின்று காணப்படுகின்றது. தமது புகழ்ச்சியை அல்ல மாறாக அனைத்துத் திறமைகளும் இறை புகழ்ச்சிக்கே என்ற நோக்கோடு பணியாற்றினார்.

தமது உணவுக்காகவும், மற்றும் ஏழைகளுக்கு, நோயாளருக்கு, உணவளிப்பதற்காகவுமென்று தாமே வீடு வீடாய்ச் சென்று பிச்சையெடுக்கவும் தயங்கவில்லை. குறிப்பாக கண்டியில் தொற்றுநோய் (அம்மைநோய்) பரவிய போதும் யார் யார் எந்த இனம் எந்த மதம் என்று பாராமல் பணி புரிந்ததன் மூலமாகவும் இறந்தோரை உரிய மரியாதையுடன் உரிய முறையில் அடக்கம் பண்ணியதன் மூலமும் கிறிஸ்தவ பண்புகளில் ஒன்றான தாழ்மை என்ற பண்பினைத் தமது வாழ்விலேயே காட்டினார்.

தான் ஒரு பிராமண குடும்பத்தைச் சார்ந்தவர், நன்கு படித்தவர், திருச்சபையின் உயர் பதவியில் உள்ளவர், அந்தஸ்தில் உயர்ந்தவர் என்பதை நன்கு அறிந்திருந்தாலும் இறைபணிக்கு முன்னால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது மிகத் தாழ்மையுடன் தான் ஒரு கத்தோலிக்கன் என்ற பெரிய வட்டத்தினுள் நின்றுகொண்டு மனிதப்பிறவிகளுக்கே தமது பணியென்று செயற்பட்டதன் மூலமும் அவரது தாழ்மையான பண்புகள் புலப்படுகின்றன.

## பணிமுறைகள்

துணிகரமான முன்னெடுப்பு எனும்போது முத்திபேறுபெற்ற ஜோசவ் வாஸ் அடிகளார் தமது வாழ்வில் பல தடவைகளில் “என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வார்” (மாற்கு 8: 35) என்ற தேவ வார்த்தையை நம்பியவராக உயிராபத்துக்கள் பலவற்றையும் சந்திக்கத் தயாராக இருந்தார்.

இலங்கைத் தீவு நோக்கிய தமது பயணத்தில் தம்மோடு இணைந்துகொண்டவர்கள் இடையில் விலகிவிட்டாலும் ஜோண் என்ற இளைஞனின் தோழமையில் தொடர்ந்தும் முன்னேறிச் சென்றவருக்கு திருவான்கூர் (TROVENCORE) நகரிலிருந்த இயேசு சபைக் குருக்களின் வரவேற்பு, உபசரிப்பு, ஆலோசனைகள் அனைத்தும் அவர் தமது பயணத்திலே உருமறைப்புச் (Disguise) செய்துகொண்டு இலங்கைத்தீவிற்குள் நுழையும் துணிகரமான முடிவெடுக்கக் காரணமாயமைந்தது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் மீண்டும் அங்கே சென்று பணியாற்ற எந்தக் குருவும் தயங்கிக்கொண்டிருந்த வேளையிலே, மக்களின் அணைந்துபோகின்ற விசுவாச விளக்கினை மட்டும் கண்முன் கொண்டு வழிபாடுகள், திருவருட்சாதனங்கள், மரணச்சடங்குகள் அனைத்துமே சீர்திருத்த சபை நடைமுறையிலே நடத்தப்பட வேண்டும் என்ற சட்டம், நாட்டில் எந்த ஒரு கத்தோலிக்க குருவும் அனுமதிக்கப்படமாட்டார் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் அவருக்கு மட்டுமல்ல மாறாக அவருக்குத் தஞ்சம் கொடுத்தவர்களுக்குமே மரண தண்டனைக்குரிய குற்றவாளிகள் என்ற சட்டம், அனைத்தும் நடைமுறையிலிருந்ததை அறிந்திருந்தும் உயிராபத்துக்கள் மத்தியிலும் தனது முடிவிலே மாற்றமின்றி முன்சென்றார், செயலிலும் காட்டினார். தாம் ஒரு கத்தோலிக்க குரு என்று கத்தோலிக்கருக்கு அடையாளம் காட்டுவதற்காகவே தனது கழுத்திலே செபமாலை அணிந்திருந்தார். பிச்சை எடுக்கும் போதெல்லாம் சிலுவை அடையாளம் வரைந்துகொள்வார். இவற்றையெல்லாம் தான் ஒரு கத்தோலிக்கர் என்று அடையாளம் காட்டுவதற்காக மட்டுமன்றி இவற்றைக் காணும்போது மக்களில் முகத்தில் ஏற்படும் மாற்றங்களைக் (FACIAL EXPRESSION) கொண்டு கத்தோலிக்கரை இனம் காணுவதற்கும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டார்.

## எடுத்துக்காட்டான புனித வாழ்வு

ஜோசவ்வாஸ் அடிகளாரிடம் தன்னம்பிக்கை இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைபராமரிப்பிலே அதீத நம்பிக்கை கொண்டவராகச் செயற்பட்ட அதேவேளை தாம் நம்பியிருந்த இறைவனின் பராமரிப்பு தமது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் காணப்பட்டதை இவர் நன்கு உணர்ந்திருந்தார் என்பதை

ஆசாரத்துக்குரிய யோசவ் வாஸ் அடிகளின் 300வது ஆண்டு நிறைவு (1711 - 2011) 2011ம் ஆண்டு நினைவுகூரப்படவுள்ளது. இதனையொட்டி இவ்வாண்டு தொடக்கம் மூன்று ஆண்டுகள் ஆயத்தக் காலமாக பிரகடணம் செய்யப்பட்டுள்ளது. இதையொட்டி இச்சிறப்புக் கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம்.

எஸ். ஜீ. பெரேரா என்ற அருள்தந்தை தமது புத்தகத்திலே இவரது வாழ்வின் சில பகுதிகளை மேற்கோள் காட்டி எழுதியிருக்கின்றார்.

“பயணத்துணையாக வந்தவர்களில் இரு குருக்கள் பாதிவழியில் விலகிட ஜோசவ் வாஸ் அடிகளும் சீடன் ஜோண் என்பவரும் உருமறைப்பு செய்து கொண்டு ஏழைக் கூலியாட்களாக கொழும்பு துறைமுகம் செல்ல அனுமதி பெற்றாலும், கத்தோலிக்க குரு மாறு வேடத்தில் இலங்கைத் தீவுக்கு வருகிறார் என்ற செய்தியறிந்த ஒல்லாந்துப் படையினரின் கெடுபிடிகள் அதிகமாகவே கொழும்புப் பயணம் தடைப்பட்டது.

சில நாட்களின்பின் யாழ் துறைமுகம் செல்வதற்கு அனுமதி கிடைத்தது. (குருவானவர் வேற்றுருவில் வருகின்றார் என கொழும்பிலே எதிர்பார்க்கப்பட்டதுபோல இங்கு பெரிதான எதிர்பார்ப்புக்கள் குறைவாகவே காணப்பட்டன) பயணத்தின்போது புயலில் சிக்குண்ட கப்பல் மன்னார்க் கரையினை அடைந்தபோது உடல் சோர்வுற்ற நிலையில் பட்டினியிலே வலுவின்றிக் காணப்பட்டதால் ஜோசவ்வாஸ் அடிகளாரையும் சீடனையும் அங்கேயே விட்டுவிட்டு கப்பல் புறப்பட்டுச் சென்றுவிட்டது. மக்களிடம் பிச்சையெடுத்து உண்டு தெம்படைந்தபின் யாழ்ப்பாணம் செல்லவிருந்த படகிலேறி பயணமானார். இப்பயணம் இலங்கையின் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு செல்வதாக இருந்ததால் எந்தவிதமான தொல்லையுமின்றி தொந்தரவுமின்றித் தனது இலக்கினை அடைந்துவிட்டார்.

இப்பயணத்திலே குருக்கள் குழு ஒன்று வருவதைவிட தனியொருவர் வருவதற்கு மிக இலகுவாக இருந்தது. கொழும்பில் கெடுபிடிகள் அதிகம் என்பதால் பயணம் கைவிடப்பட்டு யாழ்ப்பாணத்துத் துறைமுகத்துக்கு மாற்றப்பட்டது. அதிலும் சிலவேளை தொந்தரவுகள் நிகழலாம் என்பதனாலோ என்னவோ அவரது பயணம் மன்னாரில் முடிவுற்று மீண்டும் தொந்தரவு ஏதுமின்றி யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

ஜோசவ்வாஸ் அடிகளார் நாளில் முக்கியமாக அதிக நேரத்தினை செபத்திலே செலவளிப்பவராகக் காணப்பட்டார். செபத்தின் மூலமே தமது பணிக்கு சக்தியினைப் பெற்றுக்கொள்பவராகக் காணப்பட்டதுடன் தனக்குக் கஷ்டங்கள், கவலைகள், தாங்கமுடியாத சோதனைகள் வரும்போதெல்லாம் இறைவனிடமே அவற்றைக் கூறி ஆறுதல் அடைபவராகக் காணப்பட்டார்.

ஓய்வு நேரங்களில் மக்களுக்கு செபங்கள் சொல்லித்தருவதிலும் கிறிஸ்தவ ஒழுக்கம், திருச்சபையின் படிப்பினைகள் போன்றவற்றைச் சொல்லிக் கொடுப்பதிலும் சலிப்பின்றிச் செயற்பட்டார்.” எனது விருப்பமன்று இறை விருப்பமே மேலானது, இறைவன் எதை, எங்கு, எப்படி, செய்யக் கட்டளையிடுகின்றாரோ அதனை அவ்வாறு செய்வதுதான் சிறந்தது. மனிதர் தவறிப்போகலாம், ஏன் ஞானிகள்கூடத் தவறலாம். ஆனால் கடவுளுக்கு அஞ்சி நடக்கின்ற மனிதன் தவறுவதே இல்லை - என்று இறைவிருப்பத்தை தமது வாழ்வில் அறிந்து தெரிந்து அதனை வாழ கிறிஸ்துவை அனுபவித்து வாழ்ந்ததுடன் தாம் அனுபவித்த கிறிஸ்துவை தமது புனித வாழ்வினால் மக்களுக்கும் கொடுத்தார்.

## இறைபணியில் துணிகரமான முன்னெடுப்பு

ஜோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும், தமது சொந்த ஓய்வினையும் இலகு வாழ்வினையும் பாராது தம்மை மறைபணிக்கு அழைத்தவரின் மந்தைகளின் விசுவாசத்தினை பாதுகாக்கும் ஒரே ஒரு நோக்கத்தினை கருத்தில் கொண்டு முற்றிலுமான அர்ப்பணிப்புடன் கூடிய ஒன்றாகக் காணப்பட்டது.


வெவ்வேறு இனத்தவருக்கும், சாதியினருக்குமிடையில் இவரது பணி அமைந்திருந்தபோதிலும்கூட அனைவரையுமே சமரீதியில் நோக்குபவராகக் காணப்பட்டார். உதாரணமாக சாதிக்கொரு கோயில் கட்ட அனுமதி கொடுத்திருந்தாலும் உரிய முறையில் அவர்களுக்கு ஆலோசனையும் அறிவுரையும் கூறி ஒன்றாகக் கூடுகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் சாதிவேற்றுமைக்கே இடமில்லாதவாறு வழிநடத்தினார். இவ்வாறான சாதிவேற்றுமையற்ற கத்தோலிக்க நடைமுறையினை பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து வந்த குருக்கள் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

மக்களின் மனதறிந்தவராக மனம் மாறி வந்தவர்களை திடீர் மாற்றத்துக்கு வற்புறுத்தாமல் அவர்களது மூதாதையரின் வழக்கங்களை (சில இந்து சம்பிரதாய முறைகளை) கிறிஸ்தவ மயப்படுத்தி அவற்றைப் பின்பற்ற அனுமதி கொடுத்தார். உதாரணமாக ஊர்வலம், பவனி, ஆடல், பாடல்கள், தீர்த்தம், தெளித்தல் போன்றவற்றையும் கத்தோலிக்க நடைமுறைக்கேற்றவாறு செபங்களையும் அமைத்துக் கொடுத்தார்.

இலங்கையிலேயே தமது பணியில் நன்கு காலூன்றி வழியமைத்த பின்னரே தமக்கு உதவிக்கென தென்னிந்தியாவிலிருந்து குருக்களை அழைத்தார். அதுவும் அவர்களுக்கும் இங்குள்ள நிலை பற்றி நன்றாக எடுத்துக்கூறி, அர்ப்பணிப்புடன், முழுநேரப்பணிக்கு, இங்குள்ள கஷ்டங்களை அனுபவிக்க முழுமனம் கொண்டிருக்கின்ற, இங்கு வந்தபின் மீண்டும் தாயகம் செல்லும் நோக்கமற்ற குருக்களே இங்கு எனக்குத் தேவை என்று தெளிவாகக் குறிப்பிட்டு அழைப்பு விடுத்திருந்தார்.

தமது நோக்கிலும், பணியிலும், சற்றும்கூட தயங்காமல், பின்வாங்காமல், துணிவுடன், நேர்மையுடன் செயற்பட்டார். அதனைத் தொடர்ந்து 9 ஆண்டுகள் நாடு முழுவதும் தன்னந்தனியாளாக நின்று பல மறைப்பயணங்கள் மூலம் நாட்டின் வடக்கையும் தெற்கையும் இணைக்குமளவுக்கு தமது மந்தையைப் பற்றி நன்கறிந்தவராக மனவுறுதியுடன் ஆழமான பணியிலே தம்மை ஈடுபடுத்தி செயற்பட்டார். (தொடர்ச்சி 19ம் பக்கம்)

# தவக் காலம்
# தவக் காலமா? தயாரிப்புக் காலமா?



அருட்பணியாளர்
செ. மதுராங்கன் குரூஸ்

*"ஆடைகளைத் தயாரித்தது - அது பழைய ஏற்பாடு*
*ஆன்மாவைத் தயாரிப்பது - அது புதிய ஏற்பாடு"*

ஒவ்வொன்றுக்கும் ஒரு காலமுண்டு.
"பிறப்புக்கு ஒரு காலம் - இறப்புக்கு ஒரு காலம்
நடவுக்கு ஒரு காலம் - அறுவடைக்கு ஒரு காலம்
இடித்தலுக்கு ஒரு காலம் - கட்டுதலுக்கு ஒரு காலம்
அழுகைக்கு ஒரு காலம் - சிரிப்புக்கு ஒரு காலம்
(சபை உரையாளர் 3: 1-4)

இப்படிக் காலத்தை வகுத்தவர்கள் மனமாற்றத்திற்கும் மனம் திரும்புதலுக்கும் ஓர் காலமுண்டு என்கின்றார்கள். அதுதான் தவக்காலம்!

## வரலாறு என்ன சொல்கிறது?

கி.பி. 325ம் ஆண்டு நடைபெற்ற நிசெயா சங்கத்தில்தான் முதன்முறையாக தவமுயற்சிகள் செய்யும் நாட்களை *'தவக்காலம்'* என்று பெயரிட்டு அழைத்தனர். 40 நாட்கள் என்று காலவரை அப்போது செய்யப்படவில்லை. இடத்திற்குத் தகுந்தாற்போல் கால அளவு மாறுபட்டது.

இயேசு 40 நாள்கள் தனது பணியைத் தொடங்குமுன் பாலைவனத்தில் நோன்பிருந்தார் (மத் 4: 1-2). எனவே அதை அடிப்படையாக வைத்து "நாற்பது நாட்கள்" என்று தவக்காலத்திற்கு வரையறை கொடுக்கலாம் என்ற சிந்தனை 4ம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் வளர ஆரம்பித்தது. 7ம் நூற்றாண்டில்தான் விபூதிப்புதன் அன்று தவக்காலத்தைத் தொடங்கும் பழக்கம் உருவாக்கப்பட்டது.

அந்த நாள்களில் தவக்காலத்தின் விதிமுறைகள் மிகவும் கடினமாக இருந்தன. எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் இறைச்சி உண்ணலாகாது. 40 நாள்கள் ஒருவேளை உணவு, அதுவும் மாலை நேரத்தில் மட்டுமே உண்ண வேண்டும் என்ற விதிமுறை நடைமுறைக்கு வந்தது. இவையனைத்தையும் கண்டு 8ம் நூற்றாண்டில் சில கடுமையான விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. விசுவாசிகள் மதிய உணவும் மாலை உணவும் உண்ண அனுமதிக்கப்பட்டனர். மேலும் 16ம் நூற்றாண்டில் விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. பின்னர் பெரும் போர்கள் நடைபெற்ற காலத்தில் பல விதிகளும் நீக்கப்பட்டன.

1966ம் ஆண்டு மாசி மாதம் 17ம் திகதி திருத்தந்தை 6ம் சின்னப்பர் எழுதிய சுற்றுமடலில் விபூதிப்புதனும் ஆண்டின் எல்லா வெள்ளிக்கிழமைகளில் சுத்த போசனம் அனுசரிக்கவும், விபூதிப்புதன், பெரியவெள்ளி அன்று சுத்தபோசனமும், ஒரு சந்தியும் அனுசரிக்கவும் கேட்டுக்கொண்டார். தற்போது திருச்சபையின் ஒழுங்குமுறைப்படி நாம் விபூதிப்புதன், பெரியவெள்ளி அன்று ஒரு சந்தியும், சுத்தபோசனமும், தவக்காலத்தின் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் சுத்தபோசனமும் அனுசரித்து வருகிறோம்.

ஏன் இந்த வரலாறு எழுதப்பட்டது என்று சிலர் சிந்திக்கலாம். இன்று அனேக சமய விதிமுறைகள் அர்த்தமற்றுப்போவதற்கு அதன் வரலாறு தெரியாமையே காரணமாக உள்ளது. (உ-ம் திருந்தாதி அடிப்பது)

## தவக்காலத்தின் நோக்கம்

எங்கோ வாசித்த கதையொன்று. ஒரு குருவானவர் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கிக்கொண்டு இருந்தார். அப்போது வயதான ஒரு பாட்டி ஒப்புரவு செய்துவிட்டு அந்தக் குருவானவரிடம், "சுவாமி, அடுத்து வருவது என் மருமகள். அவளுக்கு நன்றாக இடித்துப் புத்திமதி சொல்லுங்கள். அவள் மனம் மாறட்டும்" என்றாளாம். இன்றும் ஒரு சிலர் அவ்வாறே தங்கள் மனமாற்றத்தைப் பற்றி கவலையடையமாட்டார்கள், அந்த மாமியாரைப்போல் மற்றவரைப் பற்றியே மனம் பதறியடித்துக்கொண்டிருப்பர். மனமாற்றம் மாற்றான் கடையில் கிடைக்கும் பொருளல்ல. அது ஒவ்வொரு மனிதனிலும் உருவாக வேண்டிய உண்மையான மாற்றம். அதற்குத் தேவை தியாகம். எனக்காக நான் செய்யும் தியாகம். வேதாகமத்தில் மனமாற்றத்திற்கு தாவீது, சக்கேயு, பவுல் போன்றோர் சிறந்த உதாரணங்களாக உள்ளனர்.

## ஏன் நோன்பு?

உள்ளத்தின் உண்மையான மனமாற்றத்தைக் காட்டும் வெளி அடையாளமே உடல் நோன்பு. உடல் இச்சைகளை அடக்கி ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தக் கற்றுக்கொண்டவனுக்கு மனத்தூய்மை பெறுவது மிகவும் எளிது. நம்மில் சிலர் செய்யும் ஒரு சந்தி, நோன்பு, ஒறுத்தல் செபம் போன்றவை கடமையைக் கழிப்பதாகவே சிலவேளை அமைந்துவிடுகிறது. ஆனால் பலர் இவற்றை வாழ்வின் மாற்றத்திற்காகவும் இயேசுவோடு ஒன்றித்திருக்கவும் பயன்படுத்துகின்றனர். "நீங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயங்களைக் கிழித்துகொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என்றார் யோவேல் இறைவாக்கினர் (யோவேல் 2:13).

## கொஞ்சம் சிந்திக்க

ஆலயத்தில்கூட சென்ரி மீற்றர் இடைவெளியில் அமர்ந்துகொண்டு தலைகள் முட்ட சமாதானம் சொல்வோம். ஆனால் இதயங்களுக்கான இடைவெளியோ கிலோ மீற்றர் கணக்கிலல்லவா கிடக்கிறது. ஆலயத்தில் கால்கள் மட்டும் மடங்கி நிமிராமல் உள்ளம் மட்டும் பணிந்து நிற்க நீ வேறு நான் வேறு அவன் வேறொன்றாகாதபடி பரலோக மொழியில் பேசிபேசி அனைவரும் அவரில் ஒன்றாவோம்.

40 நாள் தவக்காலம் வரலாறு மட்டுமல்ல வாழ்க்கையும் கூட. சுத்தபோசனம் உடல் சுகத்துக்காகவல்ல, அது சுற்றத்தை மாற்றியமைக்க. ஒரு சந்தியல்ல - அது ஒரு வரலாற்றின் வாழ்க்கை. கிறிஸ்தவம் மதமல்ல, அது ஒரு வாழ்க்கை. அது வழிபாடு மட்டுமல்ல - வாழ்க்கையும்கூட

எனவே தவக்காலத்தை தைரியத்துடன் எதிர்கொள்வோம். போராடுபவனுக்கே போரின் அருமைதெரியும். மனம் மாறியவனுக்கே தவக்காலத்தின் அருமை புரியும். வாழ்க்கையில் உண்மைகளை உணர்பவரும் ஒரு சிலரே, வாழ்பவரும் ஒரு சிலரே, வாழ்ந்தவரும் ஒரு சிலரே! நான் எந்த ரகம்?

*"காலத்தின் கோலத்தால் அலைக்கழிக்கப்படாமல்*
*இன்றே கர்த்தரின் வழிசெல்வோம்."*

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் பகுதி இல.69

புனித பவுல் மூன்று மறையறிவிப்புப் பயணங்களை மேற்கொண்டார். உரோமையிலுள்ள கிறிஸ்துவின் விசுவாசிகளைச் சந்திப்பதில் மிக மிக ஆவலாயிருந்தும் அவருக்கு உரோமாபுரிக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டவில்லை. இருப்பினும் உரோமையின் விசுவாசிகளைப்பற்றி நிறையவே புனித பவுல் அறிந்திருந்தார் என்பது வெள்ளிடை மலை. அவர் அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்துப் பெருமையும் மகிழ்ச்சியும் கொண்டிருந்தார். அவர்களை ஒருமுறையாவது சந்தித்து அவர்களுக்குப் பணிசெய்ய வேண்டும் என ஆவலாக இருந்தார் என்பதை அவர் உரோமையருக்கு எழுதிய திருமுகம் முதலாவதில் 8 முதல் 15 வரை உள்ள வாக்கியங்கள் தெட்டத் தெளிவாகக் கூறுகின்றன.

அங்ஙனமாயின் அவர் உரோமையரைச் சந்திக்கவே இல்லையா? சந்தித்தார் அதற்கு இறைவன் வேறொரு திட்டத்தை வைத்திருந்தார்.

பெர்க்கியு பெஸ்து என்பவன் புதிய ஆளுனராக நியமிக்கப்பட்ட பின் யூத குருக்களால் கையளிக்கப்பட்ட பவுல் நடுவர் மன்றத்தின்முன் நிறுத்தப்பட்டார். யூதக் குருக்கள் அவருக்கெதிராக பல குற்றங்களைச் சுமத்தியும் அதில் தண்டனைக்குரியதாக எந்தக் குற்றத்தையும் காணாத பெஸ்து அவரை விடுவிக்க விரும்பினார். ஆயினும் தான் சீசரின் நடுவர் மன்றத்தினால் உரோமில் விசாரிக்கப்பட வேண்டும் என்று பவுல் விண்ணப்பித்ததாலும் பவுல் உரோமைக்குடியுரிமை உடையவர் என்பதாலும் அவரை விசாரணைக்காகப் பெஸ்து உரோமாபுரிக்கு அனுப்பிவைத்தார். புனித பவுலும் உரோமைக் கிறிஸ்தவர்களைச் சந்தித்தார்.

***இனி எமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் உரோமர் 10ம் அதிகாரம் முதல் 12ம் அதிகாரம் வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.***

1. மீட்புப் பெறுவதற்கு உரோமையர் என்ன செய்ய வேண்டும் எனப் புனித பவுல் கூறுகின்றார்?
2. யாருடைய பாதங்கள் அழகாக இருப்பதாக மறைநூலில் எழுதப்பட்டுள்ளது?
3. மீட்பு - கிறிஸ்து யூதகுலத்துக்கு மட்டுமல்ல முழு மனித இனத்துக்குமே உரியது என்பதை எசாயா என்ன வார்த்தைகளில் கூறுகிறார்?
4. புனித பவுல் என்ன குலத்தைச் சேர்ந்தவர்?
5. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத யூத மக்களைப்பற்றி "அவர்களின் கண்கள் காணாதவாறு ஒளியிழக்கட்டும், அவர்களின் முதுகு கூன் விழுந்தே இருக்கட்டும்" எனக் கூறுபவர் யார்?
6. யூத மக்கள் எப்படிக் கடவுளுக்குப் பகைவர்கள் ஆனார்கள்?
7. விடப்பட்ட சொற்களை நிரப்பிப் பாருங்கள் கடவுளின் பண்பு துலங்கும்:
கடவுளின் அருள் செல்வம் ............................ ............................
அவருடைய ஞானமும் அறிவும் ............................ ............................
அவருடைய தீர்ப்புக்கள் ............................ ............................
அவருடைய செயன் முறைகள் ............................ ............................
8. நாம் செய்யக்கூடிய உள்ளார்ந்த வழிபாடு எது?
9. நாம் கிறிஸ்தவர்களாக ஒவ்வொருவரும் வித்தியாசமான அருள்வரங்களைப் பெற்றிருப்பது குறித்து புனித பவுல் என்ன உதாரணத்தைக் குறிப்பிடுகின்றார்.
10. "உன் எதிரி பசியாய் இருந்தால் அவனுக்கு உணவு கொடு அவன் தாகத்தோடு இருந்தால் அவன் குடிக்கக் கொடு" இவ்வாறு எந்த நூலில் எழுதப்பட்டுள்ளதாகப் புனித பவுல் கூறுகின்றார்.?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 67 இற்கான கேள்விகளுக்கு 19 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**
**அருட்சகோ. எம். பற்றிசியா**
புனித அந்தோனியார் ஆலயம், யாழ் வீதி, றம்பேவ அனுராதபுரம்

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

01. அருட்சகோ.ஜெஸ்மன்ராஜ் ஆரம்ப மெய்யியல் பீடம் களுத்துறை
02. எ. ஜெசி வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
03. எ. கில்டா கட்டையடம்பன்
04. பி. சோபா வாஸ் 4/67 கி. ஐ. சபை ஒழுங்கை, மன்னார்.
05. இன்பராஜ் லெம்பேட் வங்காலை - 02
06. ஆ. பேல்சினி ஆடியஸ்வீதி, 2ம்கட்டை வெளிக்குளம், வவுனியா.
07. எ. லவ்சாயினி முதலியார் குளம், செட்டிக்குளம்
08. ஆர். அபிநயா ஜே. ஆர். எஸ். வீட்டுத்திட்டம், தலைமன்னார்.
09. ஆர்.கமிலஸ் ஜென்ஸ்ரன் குரூஸ் (ஜெனி) தலைமன்னார் மேற்கு
10. எச். டிலைக்ஷன் சிறுத்தோப்பு, பேசாலை.

## ஆசா. யோசவ் வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 300வது ஆண்டு

ஆசாரத்திற்குரிய யோசவ்வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 300வது ஆண்டையொட்டி யோசவ்வாஸ் அடிகளாரின் புனிதர் பட்ட செயலகம் செய்தி ஒன்றை விடுத்துள்ளது. அதன் விபரம் வருமாறு.

இன்னும் 2 ஆண்டுகளில் அதாவது 2011ம் ஆண்டு நாம் ஆசா. யோசவ்வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 3வது நூற்றாண்டைக் கொண்டாடவுள்ளோம். இதற்கான ஆயத்தங்களில் ஈடுபடுவதற்காக இதற்கான தேசிய குழு மறைமாவட்ட இணைப்பாளர்கள், குருக்களுடன் இணைந்து செயற்திட்டங்களைத் தீட்டியுள்ளது.

எமது நாட்டின் அனைத்துப் பங்குத்தந்தையர்களும் மறைமாவட்ட இணைப்பாளர்களுடன் ஒன்றிணைந்து இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தத்திட்டங்கள் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, ஆயர் மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ள மேய்ப்புப்பணி மடலிலும் ஆசா. யோசவ்வாஸ் அடிகளாரின் 3ம் நூற்றாண்டு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆயத்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் எமது விசுவாசத்தைப் புதுப்பித்து ஆழப்படுத்தலும், யோசவ்வாஸ் அடிகளார் இயேசுவில் கொண்ட ஆழமான அன்பையும் அவரது மறைபரப்பு ஆர்வத்தையும் கண்டுபாவித்தலுமாகும்.

யோசவ்வாஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்காக இலங்கைத் திருச்சபை முழுவதும் செபத்தில் ஈடுபடுவது மிகவும் முக்கியம். ஆசா. யோசவ்வாஸ் அடிகளாரின் மறைபரப்பு ஆன்மீகத்தைப்பற்றி அறிந்துகொள்வதன் மூலம் இலங்கைத் திருச்சபையானது மிகுந்த ஆர்வத்துடன் நற்செய்திப்பணியில் ஈடுபடுவதாக.

- மேதகு ஆயர் வியான்னி பெர்ணான்டோ,
தலைவர், ஆசா. யோசவ்வாஸ் அடிகளாரின்
புனிதர் பட்ட செயலகம்.

## இலங்கையின் திருத்தூதர் முத். யோசவ் வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 300வது ஆண்டை நோக்கி... 2011

**யோசவ் வாஸ் அடிகளாரின் வாழ்வில்**



*1651 சித்திரை மாதம் 21ஆம் திகதி இந்தியாவில் உள்ள கோவையில் பிறந்தார்.*
*1686 ல் குருப்பட்டம் பெற்றார்.*
*1686 பங்குனி இலங்கைக்கான பயணத்தினை தொடங்கினார்.*
*1686 சித்திரை மாதம் யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.*
*1692இல் கண்டியில் சிறையில் வைக்கப்பட்டார்.*
*1698–1699 வரை இலங்கை முழுவதிலும் தனது பணியை தொடர்ந்தார்.*
*1705. ல் மேலும் நான்கு குருமாரை இந்தியாவிலிருந்து வரவழைத்தார். 1711 தை 15ம் திகதி கண்டியில் மரணமானார்.*
*1995 தை 21ல் கொழும்பில் முத்திபேறு பெற்ற பட்டம் பெற்றார்.*

**புனிதர் நிலைக்கு விரைவில் உயர்த்தப்பட அனைவரும் செபத்தில் ஒன்றிணைவோம்!**

*"வாழ்நாளில் நீ செய்யத்தவறிய எக்காரியத்தையும் உன் மரண வேளையில் செய்ய முடியாது என்பதை நினைவிற்கொள்" - ஆசா. யோசவ் வாஸ்.*

## துறவற வாழ்வில் வைரவிழாக் காணும் மரியதாசன் அடிகளார்

அருட்தந்தை சிங்கராயர் மரியதாசன் (அமதி) அடிகளார் கடந்த 2008 ஆகஸ்ட் 20ம் நாள் யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் புடைசூழ தனது குருத்துவ வைரவிழாவைக் கொண்டாடினார்.

இவர் 1920ம் ஆண்டு யூலை 2ம் நாள் யாழ்ப்பாணம் மாதகலில் பிறந்தார். அமதிகள் சபையில் இணைந்த இவர், 1948 ஆகஸ்ட் 4ல் யாழ் ஆயர் மேதகு கியோமர் (அமதி) ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் யாழ்ப்பாணம் மன்னார் மறைமாவட்டங்களில் அளப்பரிய பணியாற்றியவர். இவரது வாழ்வில் மிளிர்ந்த மனித கிறிஸ்தவ விழுமியங்களை இன்றும் மக்கள் மனதில் கொண்டுள்ளார்கள்.

எல்லாம் வல்ல இறைவன் இவரை என்றும் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டி மன்னா சார்பாக எமது யூபிலி வாழ்த்துக்களையும் செபங்களையும் அளித்து நிற்கின்றோம்.

# குடும்பக் குவலயம்

## வேற்றுமையிலும் ஒற்றுமைகாக்கும் ஆரோக்கிய உறவு



யோசப்பாலா

“ஒரு முடிவை நாடி ஆண்கள் மணம் செய்கிறார்கள். ஒரு தொடக்கத்தை நாடி பெண்கள் மணம் முடிக்கிறார்கள்” என அலெக்ஸீஸ் ரூப்பை என்ற அறிஞர் பெண்களின் மனத்தை வெளிப்படுத்துகின்றார். இதில் பல அர்த்தங்கள் உண்டு. இவை பல காலக் கனவுகள். இறுதிவரையான வாழ்வுக்கு அர்த்தம் தேடுபவை.

கனவுகள், கற்பனைகள், தூரநோக்கமான சிந்தனைகள் போன்றவை சிப்பிக்குள் இருக்கும் மணல்கள் முத்தாக உருவெடுத்து வருவதைப்போன்று உருவெடுக்கின்றன. ஒவ்வொருவரும் இந்த உலகில் விந்தியாசமான ஒரு வாழ்வை வாழ்ந்து காட்ட வேண்டும் என எண்ணுவதில் என்ன தவறுண்டு? வாழ்க்கையில் எல்லாம் நிறைவேறுவது என்பது இல்லை. சில தடைகள் ஏற்பட்டதும் தீயில் விழுந்த புளுபோல வாழ்வையே வெறுப்போடு எதிர்கொள்ளுவதுதான் மிகவும் தவறானது.

இன்பத்தை, மகிழ்ச்சியை எதிர்கொள்ள ஆவலும் மனிதர்கள் துன்பம், சவால்களை எதிர்கொள்ளவும் மனதைப் பக்குவப்படுத்த வேண்டும். எதிலும் தடையின்றி செல்வதற்காய் குறுக்குவழிகளை நாடக்கூடாது. ஏனெனில் நேரடியான தடைகள் வரும்போது தவறான முடிவுகள் எடுக்கும் நிலைக்கு இது இட்டுச் செல்லும். இது தவறான குடும்ப உருவாக்கத்திற்கு வழிவகுக்கும்.

ஒவ்வொரு குடும்பமும் நடைமுறை வாழ்வை ஏற்றுக்கொள்ள, உண்மைகளை உணர்ந்துகொள்ள, சந்தர்ப்பங்களை பொறுப்புக்களை எதிர்கொள்ள, பகிர்ந்துகொள்ள வேண்டும்.

தொலைக்காட்சிக் குடும்பமாக, வெளியார் வழிகாட்டும் குடும்பமாக, எப்படியும் வாழலாம் என வழிப்படுத்தும் குடும்பமாக இருக்கக்கூடாது. வருவாய்க்காக வீட்டில் எவரையும் கூட்டி வாழும் குடும்பமாக இருக்கும்போது அது குடும்பக் கட்டமைப்புக்களைச் சீரற்றதாக மாற்றுகிறது. வீட்டில் வாழும் அடுத்த தலைமுறையும் குடும்ப வாழ்வுக்கான அர்த்தம் புரியாது திசை மாறும் நிலை ஏற்படுகின்றது.

ஒருமுறை தனது பிள்ளைக்கு மன அழுத்தம் இருப்பதாக தாயார் உளவள ஆற்றுப்படுத்தும் நிலையத்தை நாடிவந்தார். மிகவும் வசதி படைத்தவராய் நடை, உடை, பேச்சுக்கள் மூலம் வெளிநாட்டவர்போல் தன்னை வெளிப்படுத்தினார். தாயார் பிள்ளையை அறிமுகப்படுத்தியபோது, “இவள் வெளிநாடு செல்ல இருக்கிறாள். இவள்தான் எங்கள் மூத்த பிள்ளை. பொறுப்பில்லாமல் இவள் எங்கள் சொல்லைக் கேட்காமல் பிடிவாதமாய் இருக்கிறாள்” என ஒரு படத்தைக் காட்டி, “இதுதான் இவள் முடிக்க இருப்பவர்” என விபரித்தார். “நான்கு பிள்ளைகளில் மூத்தவள் இவள் சென்றால்தான் நாங்களும் முன்னேறி வாழலாம்” எனக் கூறியபோது, “அம்மா இப்படித்தான் எல்லோருக்கும் சொல்லுவா. ஒரு நாள் நான் வேலையிலிருந்து வீட்டுக்கு வரும்போது வீட்டில் பலர் இருந்தார்கள், கூடிக் கதைத்தார்கள், விருந்துண்டார்கள், படங்கள் எடுத்தார்கள். அப்போது நான் படித்துக்கொண்டிருந்தேன். இப்போ இவர்தான் மாப்பிள்ளையாம். அன்று நடந்த கலியாண எழுத்தாம் என நான்கு வருடங்களாக கூறி வருகின்றார்கள். எனக்கோ எதுவும் ஞாபகத்தில் இல்லை. இதையே பலருக்கும் சொல்லித் திரிகிறார்கள். தவிர எந்தத் தொடர்பும் எமக்கில்லை. பலரும் என்னைக் கேட்பது எனக்கு வெட்கமாய் இருக்கிறது” என்றாள் 24 வயது நிரம்பிய மகள்.

குடும்பக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்படும் நிலைகள் இன்று ஆச்சரியத்துக்குரியவையாய் உள்ளன. யாருக்கு என்ன நடைபெற இருக்கிறதோ அவர்களுக்கே எதுவும் தெரியாத நிலை! எதிர்பார்ப்புக்கள் பெரியோருக்கு வேறாகவும் திருமணத்தில் இளையோருக்கு வேறாகவும் உள்ளன. இப்படி எத்தனையோ நிகழ்வுகள் சமூகத்தில் நடந்தேறுகின்றன. ஒருவர் ஒருவருக்கு உளநோயாளி எனப் பட்டம் சூடி குழப்பமடைவதைக் காண்கின்றோம். இப்படி உருவாகும் குடும்ப உறவுகள் செல்லும் இடங்களிலும் பல விபரீத விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

‘உறவுகளின் இராகங்கள்’ எனும் நூலில் நூலாசிரியர் வின்சன் பற்றிக் (அமதி) அவர்களின் கூற்றில், “ஒவ்வொரு மனிதனும் விசித்திரமானவர், தனித்துவம் மிக்கவர், ஒருவர் மற்றவரில் இருந்து உடல், பால், அனுபவங்களில் மட்டும் வேறுபட்டவர் அல்ல, முக்கியமாக மனோநிலையில் அதாவது உள்ளம், சிந்தனைத்திறன், செயற்திறன் இவற்றிலும் வேறுபட்டவரே. இவ்வாறு வேறுபாடுகள் எல்லோருக்கும் பொதுவானது” என்பார். இந்த வேற்றுமையிலும் ஒற்றுமையுடன் வாழும் குடும்ப உறவுகள் எமது கலாச்சார பண்பாட்டிலும் புனிதமாகப் போற்றப்படுகின்றது. இவை சில சமயம் ஆணாதிக்க சக்தியாக இருப்பதாகத் தோற்றம் பெற்றாலும் இதனைப் போற்றுவதனூடாகக் குடும்பக் கட்டமைப்புக்கள் ஆரோக்கிய சமுதாயத்தைப் படைக்கின்றன. ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்வு முறைகள் மேற்கத்திய வாழ்வுக்கும் அதன் மோகத்திற்கும் சவாலாக உள்ளன. பண்பாட்டைப் பேணுவதில் ஒருவர் ஒருவரது விட்டுக்கொடுப்பும், புரிந்துணர்வும், எங்கு சென்றாலும் முன்மாதிரிகையான வாழ்வுமுறையும் தனித்துவமாகப் பேணப்படுவதும் சிறப்பாகும்.

வெளிநாடு சென்று ஆன்மீக உரையாற்றும் பெரியார் ஒருவர் தனது திருமணத்தின் முப்பத்தைந்தாண்டு நிறைவை நினைவு கூர்ந்தபோது மேற்கத்திய நண்பர்கள், “ஒரு மனைவியுடன் முப்பத்தைந்து ஆண்டுகளாக வாழ்ந்தீர்களா? என வியப்படைந்து வாழ்த்து மடல்களை அனுப்பினார்களாம். இன்று அவர்களே உணரக்கூடிய பல புதிய நோய்களும், அன்புத்தேடலும் ஆசிய மக்களின் குடும்ப வாழ்வுக்குள் நுழைந்துள்ளன. அவை நம்மையும் மாற்ற முனைவதுடன் நமது மக்களின் குடும்ப உறவில் உள்ள சிறப்பையும் சீரளியச் செய்கின்றன.

போர் வரலாம், இயற்கை அழிவுகளை எதிர்கொள்ளலாம். ஆனால் எமது குடும்பக் கட்டமைப்பைச் சிதைத்தால் அதனை சீர் செய்வதற்கு எவற்றாலும் முடியாமல் போகலாம். உள்ளத்து உணர்வுகளில், எதிர்பார்ப்புக்களில், விருப்பு வெறுப்புக்களில் மற்றவர் மனநிலையை அறிந்து வாழ்வதில் தடங்கல் ஏற்படலாம். சில சமயம் தன் மனத்தைக்கூட சரியாகப் புரிந்துகொள்ளாது தடுமாறும்போது மற்றவரது மன உணர்வுகளை எப்படி முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்? நிதானம், அவதானம், ஆன்மீக அமைதி, தேடல் போன்றவை நம்மை நாமே புரிந்துகொள்ள உதவி செய்யும்.

ஒருவர் தன் மனநிலையை மற்றவருக்கு வெளிப்படுத்தும்போது வார்த்தைகள் 7% உம், சைகைகள் 30% உம், முகவேறுபாடுகள் 55% உம் வெளிப்படுத்துவதாக மனோதத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன. திருமண வாழ்விலும் எமது எதிர்பார்ப்புக்கள், தெரிவுகள் முழுமையாக நிறைவேறாமல் இருப்பினும் புதுவாழ்வை ஏற்றுக்கொள்ளும் முன் தமது நிலைகளை மனப்பக்குவத்தை தயார்படுத்தல் அவசியம். அப்போதுதான் அவரை அவராக ஏற்று வாழ, குறைநிறைகளை ஏற்று வாழ முடியும். தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்குத் தம்மை தயார்படுத்தல் வேண்டும். பிறர்மீது குற்றம் கூறாத குடும்ப வாழ்வை வாழ முடியும்.

எத்தனையோ குறைகள் மறைந்து நிறைகள் வளர சிலரது திருமண உறவுகள் சவாலாய் அமைந்துள்ளன. குடும்பத்தில் இணையுமுன் சிறந்த வாழ்வு வாழ்ந்த சிலர் குடும்பத்தில் இணைந்தபின் சீர்கெட்டுப் போனதையும் யாதார்த்த வாழ்வில் நாம் காண்கின்றோம்.

திருமணத்தில் இணைவோருக்கான எதிர்பார்ப்பு, தேடல்கள், முன் ஆயத்தங்கள் போன்றவை குடும்பத்தில் இருந்தே கற்றுக்கொள்ளப்பட வேண்டும். குடும்பத்தில் தலைமைத்துவத்தின் மகத்துவம் உணரப்பட வேண்டும். உறவுகளை பலமாக்கிக்கொள்வதில் குடும்பப் புதுப்பித்தலும், புனரமைப்பும், மீள்பார்வையும் தேவை. இதன் மூலமே வேற்றுமையிலும் ஒற்றுமையாக வாழும் மகிழ்வான குடும்பத்தைக் கட்டி வளர்க்க முடியும்.

நல்ல குடும்பம் மலர்வதற்கு நாம்தான் பொறுப்பு என்பதனை குடும்ப உறவில் இணையும் இருவரும் உணர வேண்டும். பணம், பொருள், பதவி, வசதி வாய்ப்புகள் மட்டும் மகிழ்வான நிறைவை கொடுக்காது. உளமார உறவாடல், உரையாடல், ஏற்றுக்கொள்ளல், ஆன்மீக அன்பு, பகிர்தல், ஒருவர் மற்றவருடனான சுயநலமற்ற நட்புறவு போன்றவையே மகிழ்வான குடும்பத்தின் நலமான வாழ்வுக்குத் தேவையானவையாகும். இப்பண்புகளே வேற்றுமையிலும் ஒற்றுமையை வெளிப்படுத்தும் ஆரோக்கிய குடும்பமாக ஒரு குடும்பத்தை மிளிர வைக்கும்.

# மருத்துவப் பொழிவு

## தாக்கம் ஏற்பட்ட ஒருவருக்கு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும்வரை செய்யக்கூடிய காப்பு நடவடிக்கையும் சித்த ஆயுர்வேத சிகிச்சை முறையும்

Dr. எஸ். லோகநாதன் B.S.M.S, R.A.M.P சித்தவைத்திய நிபுணர், மன்னார்

தொடர் - 9

### 6. குண்டடிபட்ட காயம் (FIRE ARM WOUND)

இது துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட காயமாகும். இதில் உடலின் முக்கிய உள்ளுறுப்புக்கள் பாதிக்கப்படும். காயத்தின் மேற்பகுதி சிறிதாகவும், காயத்தின் வெளிப்பகுதி பெரிதாகவும் காணப்படும். இதனால் குண்டடிபட்டவர் அதிர்ச்சியுடனும், மயக்கத்துடனும், அதிக இரத்தப்பெருக்குடனும் காணப்படுவார். இடத்தைப்பொறுத்து இறப்பும் ஏற்படும்.

முதலுதவி :-

மேற்கூறப்பட்ட காயங்களுக்கு காயம் பட்ட இடத்தை உலர்த்தி வைக்கவேண்டும். சுத்தமான துணியாலோ அல்லது ஒன்றும் இல்லாத இடத்தில் எமது கையாலோ அக்காயத்தை நன்கு அழுத்திப்பிடிக்க வேண்டும். எனினும் இரத்தம் கசிந்தால் அக்காயம் ஏற்பட்ட இடத்திற்குச் சற்று மேலாக இறுக்கிக் கட்டவேண்டும். தேவைப்படுமிடத்து அக்கட்டைத் தளர்த்திக் கட்டலாம்.

சித்த மருத்துவம்:-

1. காயங்களிலிருந்து குருதிப்போக்கு அதிகம் காணப்பட்டால் கரிப்பான் எனும் மூலிகையின் இலைகளைச் சுத்தமான நீரில் கழுவிச் சுத்தப்படுத்திய இலையை நன்கு கையில் கசக்கி காயத்தின்மேல் அமத்தி வைத்துக் கட்டவேண்டும். இக்கரிப்பானிற்கு இரத்தப்பெருக்கை நிறுத்தும் அரும்பெரும் சக்தி உண்டு. இம்மூலிகை வெட்டுக்காயங்களைத் தையல் (Suture) போடாமல் ஒட்டுவதால் இதற்கு வெட்டொட்டி என்கின்ற மறுபெயரும் உண்டு.
2. அமுக்கிராக் கிழங்குச் சூரணத்தை முட்டையின் வெண்கருவில் அரைத்துப் பற்றிட இரத்தப்பெருக்கு நிற்கும். காயம் ஆறும்.
3. கரியபவளத்தை வெந்நீரில் கரைத்துக் கொதிக்க வைத்துத் துணியில் தடவிக் கட்ட வேண்டும். இதனால் வீக்கமும் வேதனையும் குறையும். காயமும் விரைவில் மாறும்.

### 8. எரிகாயம் (Burns)

இக்காயமானது கூடுதலாகக் குழந்தைகளுக்கே ஏற்படும். கவனக் குறைவினால் நெருப்பானது உடலில் அணிந்துள்ள ஆடையில் பற்றியோ அல்லது மண்ணெண்ணை போன்ற இலகுவில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் உடலிலோ அல்லது ஆடையில் பட்டபின்பு தீப்பிடித்தால் உடல் எரிந்து பாதிக்கப்பட்டுக் காணப்படும். இந்நிகழ்வு தற்செயலாகவும் தற்கொலையாகவும், தற்கொலை முயற்சியாகவும் நிகழலாம்.

இவ் எரிகாயமானது மூன்று வகைப்படும்:

1. FIRST DIGIREE - கொப்பளத்தை ஏற்படுத்தாத சிறு தீக்காயம்.
2. SECOND DIGIREE- கொப்பளத்தை ஏற்படுத்துகின்ற சிறுதீக்காயம்
3. THIRD DIGIREE - ஆழமான தீக்காயம் - இக்காயமானது தற்கொலை, தற்கொலை முயற்சி மற்றும் கொலை இவைகளில் காணப்படும்.

### 9. அவிகாயம் (Slalds)

இக்காயமானது கொதிநீர், கொதி எண்ணெய், கொதி திரவங்கள் மற்றும் திராவகங்கள் இவற்றினால் ஏற்படுகின்றது. இதுவும் மேற்கூறிய காயத்தைப்போன்று மூன்று வகைப்படும். இவை இரண்டிற்கும் முதலுதவியும், சித்த மருத்துவ சிகிச்சையும் ஒன்றாகும்.

முதலுதவி :-

1. கொப்பளங்களை எக்காரணத்தையிட்டும் உடைக்கக்கூடாது.
2. அப்படி உடைந்தால் கொதித்தாறிய சுத்தமான நீரும் சோப்பும் சேர்த்துக் கழுவி சுத்தமான துணியால் ஒற்றிவிட வேண்டும்.

சித்த மருத்துவம்

1. சுண்ணாம்புத் தெளிநீரில் தேங்காய் எண்ணெய்யைக் கலந்து காய்ச்சிக் கொதிக்கவைத்து நன்கு குளிர ஆறிய பின்பு பூசவும்.
2. அறுகம்புல்லைக் கழுவி நன்கு அரைத்துத் தேங்காய் எண்ணெய்யில் கலந்து பூசவும்.
3. கரிப்பான் இலைச்சாற்றுடன் சம அளவு தேங்காய் எண்ணெய் கலந்து கொதிக்கவைத்து ஆறிய பின்பு பூசவும்.

### 10. எலும்பு முறிவு (BONE FRACTURE)

விபத்துக்களிலும், தற்செயலாகவும் ஏற்படும் ஓர் ஆபத்தான நிகழ்வுகளின்போது எலும்புகளில் பலமாக அடிபட்டதன் காரணமாக எலும்புகளில் வெடிப்பு அல்லது முறிவு ஏற்பட்டால் அதனை எலும்பு முறிவு என்று அழைப்போம். இதற்கு ஓர் அனுபவம் வாய்ந்த மருத்துவர் மூலம் முறிவைப் பொருத்திப் பற்று இட்டு எலும்பு முறிந்த இடமானது ஆடாமல் அசையாமல் இருக்கும் வண்ணம் வைத்துக்கொள்ள வேண்டும். இதில் வேதனை மிகவும் அதிகமாகக் காணப்படும்.

### 11. மூட்டுப்பிறழ்வுகள் (DISLOCATION)

எலும்புகளில் மூட்டுக்கள் தாம் இருக்கும் இடத்தைவிட்டு விலகிப் போய்க் காணப்பட்டால் அதனை மூட்டுப்பிறழ்வுகள் அல்லது மூட்டு விலகல்கள் என்று அழைப்போம். இங்கும் வேதனை காணப்படும்.

### 12. சுழுக்கு (SPRAIN)

விபத்துக்களினாலும், தற்செயலாகவும் தசைகளில் மூட்டுக்களில் ஏற்படும் ஒரு முறுகல் நிலையே சுழுக்கு ஆகும்.

**எலும்பு முறிவு, மூட்டுப்பிறழ்வுகள் மற்றும் சுழுக்கு போன்றவற்றிற்கான முதலுதவி**

1. நோவு ஏற்பட்டுள்ள இடத்தை ஆடாமல் அசையாமல் வைத்திருக்க வேண்டும்.
2. களைப்புற்றிருந்தால் கோப்பி அல்லது தேநீர் வழங்கலாம்.
3. ஆறுதல் வார்த்தைகள் கூறி அவரை அமைதிப்படுத்தல் அவசியம்.

**சித்த மருத்துவம்:**

1. சுழுக்கிற்கு பழப்புளியை உப்பு கலந்த நீரில் ஊறவைத்து நன்கு பிசைந்து விதையை நீக்கி நீர்விட்டு அடிக்கடி நன்கு பிசைந்து ஒரு சட்டியில் இட்டு நெருப்பில் சூடேற்றிக் கிளறிக்கொண்டிருக்க வேண்டும். ஒரு குழம்புப்பதம் வரும்போது இறக்கி சிறு சூட்டுடன் சுழுக்குள்ள இடத்தில் தடவி நீவிவிட சுழுக்கு நீங்கி வேதனையும் மறையும்.

2. **எலும்பு முறிவு, எலும்பு விலகலிற்கு பற்றி இடல்.**

கடுகு, சானியா, பெருங்காயம், வெளுத்தல் பிசின், கரியபவளம், கண்டுப்பறங்கி, குன்றிமணி, ஆளிவித்து, எட்டிவித்து இவைகளைச் சம எடை எடுத்து நன்கு இடித்துப் பொடிபண்ணி ஒரு குழி அம்மியில் இட்டு கோழிமுட்டையின் வெண்கருவில் அரைத்து ஒரு களிம்புபோல் வரும்பொழுது அதனை ஒரு உலோகப் பாத்திரத்தில் எடுத்து வைத்து, இதனை மேற்பூச்சாகப் பூச தசைப்பிடிப்பு, வீக்கம், மூட்டுக்களில் ஏற்படும் வலி, வீக்கம் இவை நீங்குவதுடன் ஒரு துணியில் இவற்றைப் பூசி என்பு முறிவு மற்றும் என்பு விலகல் உள்ள இடங்களில் பற்றிட நாளடைவில் முறிந்த எலும்பு ஒட்டிவிடும். அத்துடன் விலகியுள்ள எலும்பில் பொருத்துக்கள் ஒன்று சேர்ந்துவிடும். (தொடரும்)

# ஆயர் நிலையில் இருந்து அரசியல் தலைவராக மாறிய ஒருவரின் கதை!

*"ஆயர் லோகோ தான் ஒரு ஆயர் என்ற வகையில் தன்னால் இயன்றதையெல்லாம் செய்தார். அநீதியான முறையை மாற்ற அவரால் முடியவில்லை. ஒரு அரசியல் தலைவர் என்ற வகையில் ஏழைகளுக்குப் பணிபுரியத் தீர்மானித்தார்"*



கடந்த ஆண்டு ஏப்ரல் 20ம் நாள் இளைப்பாறிய கத்தோலிக்க ஆயர் பெர்னாண்டோ லோகோ (Fernando Lugo) தனது ஆயருக்குரிய தலைக்கவசத்தை (Miter) ஒரு புறமாக கழற்றி வைத்துவிட்டு பராகுவே (Paraguay) நாட்டின் தலைவருக்குரிய இடைப்பட்டியை அணிந்துகொண்டார். உயர்பதவிக்குத் தெரியப்பட்ட நவீன காலத்தின் முதல் ஆயர் இவரே.

சர்வாதிகாரியும், கொடுங்கோலனும், ஆயர் லோகோவின் சகோதரர்கள் மூவரை நாடு கடத்தியவனுமான அல்லிறேடோ ஸ்றோஸ்னர் என்பவனதும், அவனது கட்சியான கொலறாடோ கட்சியினதும் சர்வாதிகார ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவர் இவரே.

சான் பேதுரு மறைமாவட்டத்தில் 30 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் ஓய்வுபெற்றதும் அவரைத் திருமடச்சார்பற்ற நிலையிலிருந்து பணிசெய்யும்படி வத்திக்கான் கேட்டுக்கொண்டது. ஆனால் அவர் அதனை மறுத்துவிட்டார். ஒரு தடவை ஆயரானால் அவர் என்றுமே ஆயர் என்று கூறினார். அவரது 30 வருட அர்ப்பணிப்புள்ள பணிக்காலத்தில் அவர் திருச்சபையின் சமூகப்படிப்பினைகளை நீதி சமூக சமத்துவம் போன்றவற்றிற்குரிய கொள்கைகளாக மாற்றியமைத்து சேரிப் பகுதிகளிலும், சிறிய குடிசைகளிலும், காடுகளிலும், வயல்களிலும் நீண்ட காலமாக ஐரோப்பிய முன்னோர்களின் ஆளும் கட்சியினரால் ஆழப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பணிபுரிந்தார். அவர் கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கி அவர்கள் ஒருவர் ஒருவருக்கு உதவிசெய்து உணவு, வேலை ஆகியவற்றைப் பகிர்ந்து, நில உரிமை, சமூகநீதி ஆகியவற்றிற்காகச் சுய நம்பிக்கையுடன் உழைக்க வழிசெய்தார். ஆனால் தீவிர பழமைவாத அரசியல் ஆட்சியாளர் ஏழைகளுக்கு உதவிசெய்யும் நோக்குடன் அவர்கள் மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியையும் தடைசெய்து தேசத்தை மாபெரும் ஏழ்மை நிலைக்குள்ளும், நம்பிக்கையின்மைக்குள்ளும் தள்ளினர். முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு மக்கள் அடக்குமுறைக்குள் தள்ளப்பட்டனர்.

ஆயர் லோகோ ஆயர் என்ற முறையில் தன்னால் இயன்றதெல்லாம் செய்தார். அநீதியான முறைகளை மாற்ற முடியாத நிலையில் ஒரு அரசியல் தலைவராக ஏழைகளுக்கு உதவிசெய்யத் தீர்மானித்தார். அவருக்கு அதிகளவான எதிர்பார்புக்கள் தோன்றின. அவரது ஒரே இராணுவம் சக்தியற்ற ஏழை மக்களும், தொழிலாளர்களும் மற்றும் அவர் நீதியுள்ள இறைவனில் கொண்ட விசுவாசமுமே ஆகும்.

நாட்டில் தற்போதைய தலைவராயிருக்கும் ஆயர் லோகோவை நாம் தீர்மானிப்பதற்கும் கண்டனம் செய்வதற்கும் முன்னர் "அரசியல் குழப்பத்தைத் தூண்டிவிடுபவரெனக் குற்றம் சாட்டப்பட்டு, மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டு, குறுகிய காலத்துள் தனது வாழ்வை முடித்துக்கொண்ட யூத, ஆன்மீகக் குருவாலேயே கிறிஸ்தவ மதம் தொடங்கப்பட்டது" என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். அவரது காலத்து ஆட்சியாளருக்கு அவர் அரசியலில் அச்சுறுத்தலாக அமைந்தார். அவர்தான் வாழும் இறைவனின் மகனாகிய நசரேத்தூர் இயேசுக்கிறிஸ்து.

*(அடுத்த மன்னாவில் ஒரு குருவாக இருந்து மாகாண ஆளுநராக மாறிய பிலிப்பைன்ஸ் நாட்டின் கத்தோலிக்க குரு ஒருவரைப்பற்றிய தகவல்கள் இடம்பெறும்.)*

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி





**அ.பிறிற்றோ. அ.புறுனோ**

**உதிர்வு 29-01-2008**

(எழுவைதீவு, யாழ்ப்பாணம்)

**மடுத்திருத்தலத்தில் நிகழ்ந்த கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட உறவுகளின் 1ம் ஆண்டு நினைவு**

*பள்ளி எனும் நிலவுலகிலே பல கனவுகளைச் சுமந்து பட்டாம் பூச்சிகளாய் சிறகுவிரித்த மழலைச் செல்வங்களுக்கும், கடமையே தமது கண்ணென்று காலம் பூராவும் தொண்டாற்றிய அன்பு உள்ளங்களுக்கும் காலன் எனும் கொடியவன் செய்த சதியினால் மரணித்தும் எம்மை விட்டு மறையாத அந்த 29.01.2008ன் சோக மடல் இது!*

ஆகாய முற்றத்தில் அதிர்வலைகளின் சத்தங்கள்... கோடி மின்மினிகள் கண்சிமிட்டிய பொன் வான மேகத்தைக் கார் மேகம் மறைத்துவிட்டது. இடியோசை இயமனாய் வெடித்தொலித்து ஓய்ந்தது. செவிப்பறைகள் கிழிய இதய நரம்புகள் செயல் இழக்கும் அளவிற்கு அந்த ஒலி எதிரொலித்தது.

எங்குமே அவலத்தின் அழுகுரல்கள் பாசங்களைத்தேடி பதறியோடும் உறவுகள் ... பார்க்கும் முகம் எல்லாம் கண்ணீரின் கோடுகள் .... நோக்கும் இடமெங்கும் சோகத்தின் ரேகைகள் .. ஆம்! நேற்றுவரை எம்மோடு நேர் நின்று யாசித்த எங்களின் நேசத்துக்குரியவர்களைக் கூற்றுவன் பாதி வழியில் கொடூரமாய் விழுங்கி விட்டான் என்ற பயங்கர சேதி காதோரம் கனத்தொலித்தது. துடித்துப் பதைத்து துவண்ட போதும் துள்ளியோடிய புள்ளி மான்களை அள்ளி அணைக்க முடியாத பாவிகளாகி விட்டோம். பள்ளிக்குச் சென்று கலையில் சிறந்து பார் போற்ற வளர வேண்டிய பச்சிளம் பாலகரை முளையிலேயே கிள்ளி கொள்ளி வைத்துவிட்டனர் கொலைப்பாதகர்கள்.

மடுப்பதிக்கு இப்படியொரு இடுக்கண் நேருமென்று கடுகளவுகூட எவரும் நினைத்ததில்லை. ஆனால் எண்ணியதைத் திண்ணியமாக முடித்துவிட்டோம் என்ற மகா திருப்தி கயவர்களின் கபடுள்ளத்திலே பெரும் மகிழ்சியை ஏற்படுத்திவிட்டது. அன்னையின் பாதத்திலே அமர்ந்துறவாடிய இந்த அன்பு உள்ளங்கள் சிந்திய குருதி விடை கூறாமல் உறையப்போவதில்லை!

ஒன்றாகக் கூடிக்குலாவி ஒன்றாகவே இறைவன் சந்நிதி அழைக்கப்பட்ட இவர்களால் - நாம் நன்றாக வாழப்போகின்றோம் என்ற உண்மையை வரலாறு என்றோ ஒரு நாள் உரைக்கத்தான் போகின்றது. கள்ளமில்லா வெள்ளையுள்ளம் கொண்ட நல் மனத்தோரின் ஆன்மாக்கள் அன்னையவள் பரிந்துரையால் மைந்தன் யேசு பரன் பாதம் நித்திய அமைதி கொள்வதாக!

**கண்ணீர்ப் பூக்களுடன், காலமெல்லாம் உங்கள் நினைவுகளுடன் வாழும் அன்பு உறவுகள்.**

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 - 11 - 1958



உதிர்வு 06 - 02 - 2008

**பி.மேரி ஜேட்றூட் லெம்பேட்**

(மன்/ சின்னபண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலை அதிபர்
(பெரிய பண்டிவிரிச்சான்)

விடியாத பொழுதுகளாய் விடை தெரியாப் புதிர்களாய் ஆனது உங்களை இழந்த எங்களின் வாழ்க்கையம்மா! உங்கள் இழப்பை இன்றும் ஏற்க மறுக்குது எங்களின் மனமம்மா. விடுமுறை என்றதுமே தங்கள் வருகை காண வழிபார்த்து விழி ஏங்கி நிற்கின்றதம்மா. நீங்கள் மீண்டும் வருவீர்கள் என்ற எங்கள் நம்பிக்கையை உண்மையாக்கிப் பிறந்திடுங்கள் எங்களில் ஒருவராய்!

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் இறைவேண்டுதல் செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும :- பெறாமக்கள், பபிஷான், நிஷாலிகா.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 - 09 - 1917



உதிர்வு 12 - 02 - 2008

**அமரர் திருமதி திருச்செல்வம் பிச்சைக்குட்டி**

(பனங்கட்டுக்கொட்டு - மன்னார்)

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் உயிர் வாழ்வான்"**

ஆண்டொன்று போனாலும் அன்னையே
உம் அன்பு முகம் மறவோம் நாம்.
பதினாறும் பெற்ற பாக்கியவதியம்மா நீர் ...
பரமன் யேசுவின் மலர்ப்பாதம் துயிலுமம்மா நீர்....!

இவரின் பிரிவால் துயருறும:- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

தகவல்:- பி. பொன்னம்பலம் (J.P),
"ஓசான்னா", பிரதான வீதி, கல்பிட்டி.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 - 11 - 1983



உதிர்வு 13 - 02 - 2008

**தொ. அன்ரனி கெஸ்மன்**

(மடுக்கரை - நானாட்டான்)

விண்ணிலே நீ சென்று வாழ்ந்தாலும் எம் கண்ணுக்குள் நிறைந்திருப்பாய் எம் மகனே. காலமெல்லாம் கனிவாய் எமைக்காத்து ஞாலமதில் கல்விதனில் எமை நிறைத்து வளமுடனே நாம் வாழ மகிழ்ந்திருந்தாய் எம் அண்ணா!

களங்கமில்லா உன்முகத்தை எப்பொழுது காண்போம்? எம் இல்லத்தில் நீ மறைந்து ஆண்டொன்று மறைந்தாலும் உன் உளம் நிறைந்த பாசமது மாறாதே. மீண்டும் புலரும் பொழுதுகளில் பூவுள்ளத்தோனே மீண்டும் நீ எப்பொழுது மலர்வாய் எம் வீட்டிலே? இறைவனின் பசுமைதனில் இணைந்திருப்பாய் என்றென்றும்.

பிரிவால் துயருறும :- *அம்மா, அப்பா, சகோதரர்கள்.*

## 22ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 - 06 - 1963



உதிர்வு 04 - 02 - 1987

**பேதுரு அன்ரன் சேவியர்**

(முருங்கன்பிட்டி - முருங்கன்)

உருண்டோடிய ஆண்டுகள் இருபத்திரண்டின் முன் -
இருண்ட வானில் ஒளிக்கீற்றென எம் குடும்பமதில்
திரண்ட கட்டிளைஞனாக நீர் திகழ்ந்த நேரமதில்
வரண்ட நிலபிசை கருகிய பயிரென உம் வாழ்வு முடிவுற,
உம்மை ஈன்ற அன்னை தந்தையுடன் பாசமிகு சகோதரரும் உற்றார் உறவினர் யாவரும் வெதும்பிக் கண்ணீர் சொரிந்தார் உம் பிரிவு சாறாய்ப் பிழித்ததையா. இறைவனடி சென்ற உம் ஆன்மா என்றென்றும் நித்திய இளைப்பாற்றியை நிறைவாய் சுகிர்த்திருக்க இறைவனை நாங்கள் தினமும் இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும : தந்தை, சகோதரிகள், சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 82 எசாயா23-33

உங்கள் விடைகளை 15. 03. 2009க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | | | ★ | | | |
| | | | | | | | 04 | | | |
| | | | 05 | | | | | | | |
| | | 06 | | | ★ | | | 07 | | ★ |
| ★ | | | 08 | | | | | | | |
| | ★ | | | | 09 | | | | 10 | |
| | | | | | | 11 | | | | |
| | 12 | | | | | | 13 | | | |
| | | | | 14 | | | | | | 15 |
| 16 | | | | ★ | 17 | | | | | 18 |

### இடமிருந்து வலம்

01. கடற்கரை நாட்டில்.................. தார்சீசுக்குக் கடந்து சென்று கதறியழுங்கள்.
03. மண்ணுலக மக்களுள்.................... தளர்ச்சியுறுவர்.
05. உமது திருப்பெயரும் உமது.................எங்களுக்கு இன்பமாய் உள்ளன.
06. அவனது .................... அகற்றப்பட்டதன் முழுப்பயன் இதுவே.
08. வாடுகின்ற மலராய் .................. மேன்மைமிகு எழில் குலைகின்றது.
11. நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்குவோரை..............ச் செய்கின்றனர்.
12. பொய்ம்மை என்னும் புகலிடத்தைக்................... அழிக்கும்.
13. மாபெரும் கப்பல் கடந்து வருவதும்....................(2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
16. நாடு விடுதலை பெற நாங்கள்................... சாதிக்கவில்லை.

### மேலிருந்து கீழ்

01. அந்நாளில் ஓர் அரசனின்...................... எழுபது ஆண்டுகள் தீர்நகர் மறக்கப்பட்டிருக்கும்.
02. புயற்காற்றில்...................... மாகவும் கடும் வெப்பத்தில் குளிர் நிழலாகவும் திகழ்கின்றீர்.
03. எஞ்சியிருப்போர் தங்கள் குரலை ...................... மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கின்றார்கள்.
04. அவை புழுதியோடு புழுதியாகி ...................... மண்ணாகும்.
07.அவர்கள் என்னைப் புகலிடமாகக் கொண்டு ...................... பெறட்டும்.
10. அந்நாளில் படைகளின் ஆண்டவரே தம் மக்களுள் எஞ்சியோருக்கு ...................... மிகு மணிமுடியாகவும் மாண்புமிகு மகுடமாகவும் இருப்பார்.
11. புனித விழாக் கொண்டாடும்...................... பாடுவதுபோல் நீங்கள் மகிழ்ச்சிப்பாடல் பாடுவீர்கள்.

### கீழிலிருந்து மேல்

06. அரண் சூழ்ந்த பட்டணத்தைப் ......................ச் செய்தீர்.
07. ஆதலால்......................மக்களினம் உம்மைப் பெருமைப்படுத்தும். (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
10. ஏனெனில் எங்கள் செயல்கள் அனைத்தையும்....................ச் செய்கின்றவர் நீரே.
11. ஆதலால் அவர்களைப் படைத்தவர் அவர்கள் மீது ...................... காட்டார்.
13. அது அகன்ற ஆறுகளையும் விரிந்த நீரோடைகளையும் உடைய ...................... போன்றது.
15. நீங்கள்...........திரும்பி வந்து அமைதியுற்றால் விடுதலை பெறுவீர்கள்.
16. நாட்டின் ....................அனைத்தையும் விரிவு படுத்தினீர்.
17. அவர்களின்........................... இறைபற்றின்றித் தீச்செயல் செய்வதையே நாடும்.

### வலமிருந்து இடம்

02. கானானின் ஆற்றல்மிக்க...................... அழிக்குமாறு ஆண்டவர் ஆணை பிறப்பித்துள்ளார்.
04. இவர் தரும் மீட்பில் நாம்...................... அக்களிப்போம்.
08. அவர்களை...................... யால் நீர் உறுதிப்படுத்துகின்றீர்.
09. பகைவன் பெருவெள்ளமெனப் ...................... வந்தாலும் அவனால் எங்களை அணுக இயலாது.
11. இதோ உள்ளது...................... களைத்தவன் இளைப்பாறட்டும்.
14. அவர்கள்.................. என்னைவிட்டுத் தொலையில் இருக்கின்றது.
15. அந்நாளில் உங்களுள் ஒவ்வொருவரும் தமக்குப் பாவத்தை விளைவித்துக்கொள்ளுமாறு செய்த பொன், வெள்ளிச் சிலைகளைத் தூக்கி...................... விடுவான்.
18. உங்கள்...................... அவரே பாதுகாப்பாய் இருப்பார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 80ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:**

முதலாம் பரிசு:
**என்.ஜெகப்பிரியன்**
*180, ஒல்லிமோட்டை மன்னார்.*

இரண்டாம் பரிசு:
**அ. நிசாளினி**
*ஓலைத்தொடுவாய் பேசாலை*

மூன்றாம் பரிசு:
**ஆர். றொபின்**
*107, கண்டி றோட், வவுனியா*

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 123 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 117 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.80ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. P. நவரட்ணம் 180, ஒல்லிமோட்டை மன்னார்.
2. K. சியாதரன் இல. 24, 100 விட்டுத்திட்டம் மன்னார்.
3. இ. டயானி இல. 205, மடுக்கரை, நானாட்டான்.
4. எச். அஜந்தன், சிறுதோப்பு, பேசாலை
5. அட்ரின், குழந்தை யேசுபுரம், மன்னார்.
6. ஜெபநேசன் ஜெபிஷன், பெரியகடை, மன்னார்.
7. தேவிகா பத்மராஜா மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
8. S. டிலக்சன் இல. 3, கற்குழி, வவுனியா.
9. A. நிர்மலி, புதுக்கமம், உயிலங்குளம்
10. அ. மேரி கொண்சலீற்றா, இறம்பைக்குளம், வவுனியா
11. செ. கி. தீபிகா குரூஸ், கோவில் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
12. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல் தீவு.
13. தி. ஸ்ரீபன், சாளம்பன், நானாட்டான்.
14. A. A, நியூளன் (அபி) புதுக்கமம், உயிலங்குளம்.
15. லோ. நிவேதன், வேப்பங்குளம், நேரியகுளம், வவுனியா.
16. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
17. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
18. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
19. E. டொறின் ஜீவதி லெம்பேட், 8ம் வட்டாரம், வங்காலை.
20. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
21. R. சுஜி, குட்செட்றோட், வவுனியா.
22. திருமதி. M. M. J. பசில், 41/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
23. R. ரமணி பிகிராடோ, லூர்ஸ் வீதி, பள்ளிமுனை, மன்னார்.
24. A. சைலஜா, சுவிஸ்
25. அ. மதுசீகன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
26. ம. மேரி டொறின் குரூஸ், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
27. அ. இ. வதனி, ஓலைத்தொடுவாய், பேசாலை, மன்னார்.
28. எஸ். காந்தறூபன், கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம்
29. யே. ஜெஸ்மின், பள்ளக்கமம், முருங்கன்.
30. ஜோ. யூடிற்றா பிரியதர்சினி, கங்காணித்தீவு, நானாட்டான்.
32. ம. றொஜன் குரூஸ், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
33. சி. வின்சன் யோட்ஸ், கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம்.
34. அ. தேவராஜா, மடுக்கோவில், மடு.
35. நே. எட்மன் றிச்சட், சிறுக்கண்டல், முருங்கன்.
36. வி. வேஜின் டிலக்ஷனா, 143, சி.பண்டிவிரிச்சான், மடுக்கோவில்
37. அருட்சகோதரி. பிறிஜிற் சவரிமுத்து தி.க. மடம், நெடுந்தீவு.
38. தே. கயன்சன், யோசப்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
39. ஜே. சோபியா லெனின், தோட்டவெளி, மன்னார்.
40. மா. நிர்மலதாஸ், புதுக்கமம், உயிலங்குளம்.
41. அ. றஜனி, கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம்.
42. ச. சறோஜா, புதுக்கமம், உயிலங்குளம்.
43. கொ. மேரி இமல்டா, பொன்தீவுகண்டல், முருங்கன்.
44. அ. ஜெறோம் பீரிஸ், முத்தரிப்புத்துறை, சிலாபத்துறை.
45. சி. கொலஸ்ரிக்கா, அச்சங்குளம், நானாட்டான்.
46. அ. கவினா டனுஷியா, தாழ்வுபாடு, மன்னார்.
47. அ. அன்ரனி நியூட்டன், ஓலைத்தொடுவாய், பேசாலை.
48. C. ஆன்றிசானா, இல. 2, 50 வீட்டுத்திட்டம், பள்ளிமுனை.
49. யே. டினுசாந், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
50. யே. ஜெலின்ரன், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.

## அருளாளர் ஜோசவ் வாஸ் .........

15ம் பக்கத் தொடர்ச்சி

1697ல் கண்டிப் பகுதியில் பரவிய ஒருவகை அம்மை நோயானது பல உயிர்களைப் பலிகொண்டதை அறிந்த மக்கள் தமது இரத்த உறவுகள் நோய்க்குள்ளானபோது அவர்களை வீட்டிலேயே விட்டுவிட்டு ஓடிவிட்டனர். உயிருக்குப் பயந்த அரசன்கூட தனது மாளிகையை விட்டு ஓடிவிட்டான். இதனை கண்ட ஜோசவ்வாஸ் அடிகளார் தான் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்தில் ஒரு மூதாட்டி கஞ்சி கொடுத்து தன்னைக் காப்பாற்றியதை நினைவுகூர்ந்தார்.

கிறிஸ்தவ அன்பின் ஆழத்தை வெளிக்காட்ட தனக்குள்ளே ஒரு இறை அழைப்பினை உணர்ந்தவராக எதற்கும் சிந்திக்காமல், தயங்காமல் துணைக்கிருந்த கர்வாலோ என்ற குருவுடன் இணைந்து செயற்பாட்டில் இறங்கினார். ஆலயத்துக்கருகில் நான்கு வீடுகளில் அனைத்து கைவிடப்பட்ட நோயாளரையும் கொணர்ந்து பராமரிக்கத் தொடங்கினார். நோயாளரைக் கழுவுதல், துடைத்தல், நாட்டு வைத்தியம் செய்தல் அவர்களது உணவுக்காக பிச்சையெடுத்தல், சமைத்தல் இவையே நாளாந்த கடமைகளாகக் காணப்பட்டன.

தமது சொந்தங்களோ, நாட்டினரோ அல்லாத அந்நியரால், அதுவும் தசையும் இரத்தமும் கொண்ட சாதாரண மனிதக்குருக்களால் இந்த அளவுக்கு அன்பு காட்ட முடிகின்றதா என கவனிக்கப்பட்டவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைக்கும் அளவுக்கு இந்தக் குருக்களின் துணிகரமான பணி அமைந்திருந்தது. நாட்டில் எந்தவொரு மத அமைப்பும் முன்வராத நிலையில் பிறருக்கு அன்பு காட்டுதல் என்ற கிறிஸ்தவக் கோட்பாடுகளின் அடிப்படையில் சாதி, மத வேற்றுமையின்றி மிகத் துணிவுடன் காணப்பட்ட இப்பணியானது உண்மையில் அன்றைய மக்களின்..... ஏன் அரசனின் மனதைக் கூட கவர்ந்திருந்தது அவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

அருளாளர் ஜோசவ்வாஸ் அடிகளாரின் மறை அறிவிப்பு முறையினை ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்குமிடத்து இவரது மறைப்பணி ஒரு குறுகிய நோக்கம் கொண்டதாக இல்லாமல் பரந்துபட்ட தூரநோக்குடன் நீண்டகால நன்மையைக் கருத்தில் கொண்ட ஒன்றாகவே காணப்பட்டது. பணியாற்றும் காலத்திலே தனிமை, வெறுமை, வறுமை இவை யாவற்றிலும் இறைவனின் பராமரிப்பு தம்மோடு இருந்ததை உணர்ந்தவராகத் தமது முன்னோடிகளைவிடப் பல புதிய முறைகளைக் கையாண்டும் மக்களின் வாழ்வுக்கும் சூழலுக்கும் ஏற்றவாறு பலவற்றை அறிமுகப்படுத்தியும் மாற்றியமைத்தும் குறிப்பாக பண்பாட்டு மயமாக்கல் மூலமும் தமது பணியினை முன்னெடுத்துச் சென்றார். துன்பங்களில் துவண்டுவிடவில்லை. சவால்களில் தப்பி ஓட முயலவில்லை. செபத்திலே நிலைத்திருந்து வாழ்விலே இறைவனுக்கு சான்றுபகர உயிராபத்துக்களையும் சந்திக்கத் தயாராக இருந்த நிலையில் மிகவும் துணிகரமாக தமது பணியினை முன்னெடுத்தார்.

தமக்குக் கீழே இருப்பவர்களை மதித்து, அவர்களது ஆற்றலை இனம்கண்டு வளர்த்துவிடுவதன் மூலம் பரந்துபட்ட நன்மையைச் சமூகத்துக்கு கொடுக்கலாம் என்பதை உணர்ந்து செயற்பாட்டிலும் நிரூபித்துக் காட்டினார். தாழ்மையும், ஏழ்மையும், அன்பும் பணிவும், கிறிஸ்தவப் பண்புகள் என்பதை வாழ்வின் பல்வேறு நிலைகளில், பல்வேறு இடங்களில் வாழ்ந்து காட்டினார். இவ்வாறாக மக்களுடனான தனிப்பட்ட (Personal) அணுகுமுறைகளும், இறையுறவின் ஒன்றிப்பும், முழுமையான அர்ப்பணிப்பும் பணியிலே அவர் கொண்டிருந்த தூரநோக்குப் பார்வையும் அவரது பணியிலே மாற்றத்தையும் வெற்றியையும் கொணர்ந்ததுடன் இவருக்குப் பின்னர் இந்நாட்டில் இறைபணியிலே ஈடுபட்டிருந்தவர்களுக்கு இது ஒரு முன்மாதிரியாகவும் அமைந்திருந்தது.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.81ற்கான முடிவுகளை 2009ம் ஆண்டு மார்ச் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## எம்மோடு ஒத்துழையுங்கள்!

பல உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர்கள் பல மாதங்களாக - ஏன் சிலர் சில வருடங்களாகவே தமது சந்தாவைப் புதுப்பிக்காமல் இருக்கிறார்கள். நாம் தபால் மூலம் உங்களுக்கு அனுப்பும் மன்னாவில் உங்கள் முகவரிக்குக் கீழே உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் - அல்லது முடிவடைந்த மாதம் உள்ளது. தயவுசெய்து இதைப் பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்து எம்மோடு ஒத்துழையுங்கள். - பதிப்பாசிரியர்

## மன்னா சந்தா விபரம்

உள்நாடு : ரூபா 600.00 (இலங்கை ரூபா)
வெளிநாடு : ரூபா 2500.00 (இலங்கை ரூபா)
சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.
காசோலை மூலம் செலுத்துவதாயின்;
வங்கியின் பெயர் :
Hatton National Bank Ltd. (Mannar Branch)
பணம் பெறுபவரின் பெயர்:
The Editor - 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம்:
S/A No. 02 -1678001-5

## நீத்தார் நினைவு, பிறந்த நாள்,

திருமண யூபிலி போன்றவற்றைப் பிரசுரிப்பதற்கான

## புதிய கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை நிறத்தில் : - ரூபா 4000.00
பல நிறத்தில்: - ரூபா 7500.00
(பெப்ரவரி மாதம் 15ம் திகதியில் இருந்து புதிய கட்டணம் நடைமுறைக்கு வந்துள்ளது)
முக்கிய குறிப்பு: உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்படவேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்ப வேண்டும்.
- பதிப்பாசிரியர்

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 80இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ[1] | தி | ர் | பா | ர் | த் | து | ம் | ட | ட் | வி[2] |
| த் | து | ந் | ரு | தி | சா | ஞ் | அ[3] | ர | ச | ரை |
| து | த் | ர் | ள | வ[4] | வி | மை | யு | ள் | ள | வா |
| ணை | லை | தி | ❋ | ள் | க | ளை | கா[5] | ல் | வா | ய் |
| ஓ[6] | நி[7] | த் | இ[8] | ற | க் | கை | ளை | ளழ | ❋ | லை |
| ட் | லை | ய | தூ[9] | வை | ❋ | ❋ | யு | நா[10] | ணை | த |
| ட | நி | உ[11] | ய | ர் | ந் | து | ம் | ல் | ய | செ[12] |
| ம் | ற் | ன் | வ | பா[13] | ❋ | ந் | ❋ | ❋ | ரி | லு |
| று | க | ன | ர் | மை | நே[14] | லை | வு | றி | அ[15] | த் |
| ன் | ❋ | த | ன் | றி | ன் | கு[16] | லை | க | ள் | து |
| தோ[17] | ள் | மே | ல் | ❋ | கொ[18] | டி | யை | ளழ | ரொ | பே[19] |

**உன்னிடமுள்ள தகைமைகளை ... 4ம்பக். தொடர்**

இக்கருத்தமர்வில் கற்கிடந்தகுளம் பங்கு இளைஞர்கள் 120பேர் உட்பட முருங்கன் மறைக்கோட்டத்தின் ஏனைய பங்குகளில் இருந்தும் தலா 25 உறுப்பினர்கள் வீதம் வருகை தந்திருந்தனர். இக்கருத்தமர்வில் பங்குகொண்ட உறுப்பினர்களது மொத்த எண்ணிக்கை 136 ஆகும்.

தகவல்: செல்வி கவிதா சேனாதிறாஜா, மாவட்ட இளைஞர் ஆணைக்குழுச், செயலாளர்

# மன்னா

## "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"



## உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகப்படுத்துங்கள்

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு சிறந்த பயனுள்ள பரிசுப்பொருள் ஒன்றை வழங்க விரும்புகின்றீர்களா? அப்படியாயின் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ள உங்கள் அன்புக்குரியவர்கள் மன்னாவைப் பெற நீங்கள் ஏன் வழிசமைக்கக் கூடாது? உங்கள் அன்புக்குரியவர்களுக்கு மன்னா பத்திரிகை சென்று சேர நீங்கள் செய்யவேண்டியது இதுதான். உங்கள் அன்புக்குரியவர்களின் பெயர், முகவரி ஆகியவற்றைத் தெளிவாக எழுதி ஒரு வருடத்திற்குரிய சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் அன்புக்குரியவர்களின் வீடு தேடி மன்னா பறந்து செல்லும்! உள்நாட்டு வெளிநாட்டு சந்தா விபரங்களை 19ம் பக்கத்தில் பாருங்கள்.

மன்னா வெளியீட்டகத்தின் ஆதரவில் இடம்பெற்ற

## இறுவட்டு வெளியீட்டு விழா

செபமாலை மாதா துறவற சபையின் வெளியீடாக

அருட்பணியாளர் எம். நிர்மலராஜ் (செ.தா.) அவர்களின்

## நெஞ்சத்தின் சந்தங்கள்




செபமாலை மாதா துறவற சபையைச் சார்ந்தவரும் முருங்கன் பங்கின் மைந்தனுமாகிய அருட்பணியாளர் எம். நிர்மலராஜ் அவர்களின் முயற்சியில் உருவான 'நெஞ்சத்தின் சந்தங்கள்' என்ற இறுவட்டு வெளியீட்டு விழா கடந்த ஜனவரி மாதம் சனிக்கிழமை மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு இறுவட்டை வெளியீட்டு வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக செபமாலை மாதா துறவற சபையின் உயர் தலைவர் அருட்பணியாளர் எ. எம். ஸ்ரீபன் அவர்களும் அருட்பணியாளர் பி. ஜேசுராஜா அவர்களும் கலந்து கொண்டனர். வவுனியா மதவுவைத்த குளம் றோசரி ஆச்சிரம அதிபர் அருட்பணியாளர் எஸ். பிரான்சிஸ் ஜெயம் அவர்கள் (செ.தா.) நிகழ்விற்கு தலைமை தாங்கினார். மன்/பரிகாரிகண்டல் மகாவித்தியாலய அதிபர் ப. சந்தியோகு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மன்னா பத்திரிகையின் பதிப்பாசிரியர் அருட்பணியாளர் தமிழ் நேசன் அவர்கள் வெளியீட்டு உரையை நிகழ்த்தினார். இறுவட்டு பற்றிய மதிப்பீட்டுரையை புனித/ ஆனாள் ம. வி. ஆசிரியர் தென்புலோலியூர் பரா. ரதீஸ் அவர்கள் வழங்கினார்.

## கோமரசன்குளம் பங்கின் புதிய ஆலயம்



புதிதாகக் கட்டியெழுப்பப்பட்டு கடந்த டிசம்பர் மாதம் 20ம் திகதி மன்னார் ஆயர் அவர்களினால் ஆசீர்வதித்து திறந்துவைக்கப்பட்ட வவுனியா பெரிய கோமரசன்குளம் பரலோகமாதா ஆலயத்தின் முகப்புத் தோற்றத்தை இங்கு காணலாம்.

பங்குத்தந்தை அருட்பணியாளர் அ.சகாயநாதன் அவர்களின் முயற்சியில் பங்கு மக்களின் அயராத உழைப்பில் நிமிர்ந்து நிற்கின்றது புதிய ஆலயம்!

## நீங்காத நினைவுகள்

**1ம் ஆண்டு நினைவு**

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 01 | | 02 |
| 04 | | 03 |
| 1956 | | 2008 |



### அருட்சகோதரி இக்னேஷியா (தி.கு.)

பண்பும் பாசமும் இதயத்தில் கொண்டு
பக்தியும் நேர்மையும் வாழ்வினில் கொண்டு
புன்னகைதனையே வதனத்தில் கொண்டு
பிறர்நலம் தனையே சேவையில் கொண்டு
வாழ்ந்திட்டீர் சகோதரியே இப்புவிதனிலே
உன் கலகலத்த சிரிப்பும் பாசப்பிணைப்பும்
அன்பு மொழியும் அரவணைக்கும் கரமும்
ஆண்டுகள் ஆயிரம் சென்றாலும் என்ன
எம் மனதை விட்டு நீங்காது என்றும்

அன்னையும் தந்தையும் சகோதரர் இருவரும்
விண்ணகம் நோக்கி முன்னே செல்ல
அவர்வழி தொடர்ந்தீர் சகோதரி நீரும்
ஆண்டவர் பாதமதில் அமர்ந்திருக்கும் நீர்
அவரையே நிதம் வேண்டுவீர் எமக்காய்

அன்புடன் நினைவுகூரும் - சகோதரர், சகோதரிகள்.


## மன்னாவுடன் தொடர்புகொள்ள...

**பொழிவகம்**

மன்னா பத்திரிகைப் பணி மையம்,

இல.31/2, வைத்தியசாலை வீதி,
மன்னார்.

தொலைபேசி 023-2251161 / 0602233276
தொலை நகல் 023 - 2251161

**POZHIVAHAM**

Manna Paper Office

No. 31/2, Hospital Road,
Mannar.

Tel. 023 - 2251161 / 0602233276
Fax: 023 - 2251161

E.Mail : nesanmnr@gmail.com


இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784ஷ1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது